# பொன் விழாச் சிறப்பு மலர்

1959 - 2009




## யா/இமையாணன் அ.த.க.
## வித்தியாலயம்

## J/IMAYANAN G.T.M.VIDIYALAYAM

# இது
# எங்கள்
# பாடசாலை.........

**வெளியீடு:-யா/இமையாணன்**

**அ.த.க.வித்தியாலய**

**பழையமாணவர் சங்கம்.**

**2008-2009**

## அர்ப்பணம்

ஐம்பதாவது ஆண்டுகளில் இப் பாடசாலை வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உதவியவர்கள், காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் பலர்.

வேதனைகளும், சோதனைகளும் மிகுந்த கால கட்டங்களிலும் தியாக உணர்வுடனும், சேவை மனப்பாங்குடனும் அதிபர்களாக, உதவி அதிபர்களாக, ஆசிரியர்களாக கல்வி பணியாற்றிய சான்றோர்கள் இப் பாடசாலை மாணவ சமுதாயத்தினதும் பல்தலமுறையினரதும் உள்ளங்களில் குன்றிலிட்ட தீபமாய் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் தெய்வங்கள்.

இப்படி இக்கல்லூரியின் 50 ஆண்டு கால வரலாற்றின் ஏணிப்படிகளாகிவிட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி இம்மலரை அர்ப்பணிக்கின்றோம்.

-சுபம்-



யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்
J/IMAYANAN G.T.M. VIDIYALAYAM
மெய்ப்பொருள்
காண்பது அறிவு
VALVETITHURAI

# தூரநோக்கு

**கல்வியின் தேசிய
பொதுக் குறிக்கோள்களை
மாணவரை எய்தச் செய்தல்.**

# பணிக்கூற்று

**கல்வியின் தேசிய பொதுக் – குறிக்கோள்களை
எய்தும் வகையில் பௌதிக வளத்தேவைகளை
நிறைவு செய்வதுடன், கற்றல், கற்பித்தல்
செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொண்டு,
விளைதிறனை அதிகரிக்கச் செய்வோம்.**

## பாடசாலை கீதம்

இராகம்:- ஹம்சத்வனி　　　　　　　　　　தாளம்:-ஆதி

**இமையாணன் வித்தியாலயம் - அது என்றும் என்றும்**
**வாழிய வாழியவே - யா/ இமையாணன் வித்தியாலயம்**
**எமையாள் இறைவன் பதம் போற்றி**
**கலையாவும் கற்போம் நிதம் ஏற்றி**

மெய்ப்பொருள் காண்பது அறிவென கொள்வோம்
மேதினி போற்றிடும் உயர்நிலை எய்துவோம்
செப்பிடும் அறிவியல் திறன் பல கற்போம்
செந்நெறி காட்டிடும் வழியினில் நிற்போம்
(இமையாணன்...............)

உடலையும் வளர்ப்போம் உளத்தையும் வளர்ப்போம்
உலகினை வளர்க்கும் உழவையும் வளர்ப்போம்
திடமுடன் நூறு தொழில் பலவும் செய்வோம்
செந்தமிழ் கலைகள் வளர்த்து நாம் உய்வோம்
(இமையாணன்...............)

அன்பொடு அகிம்சை வழியினில் செல்வோம்
யாவரும் ஒன்றென நெறியினைக் கொள்வோம்
ஒன்றென இறைவனை போற்றி நாம் வெல்வோம்
ஒற்றுமை தியாகம் ஒளி பெற வாழ்வோம்.
(இமையாணன்...............)

இயற்றியவர்
காரை.ந.சுந்தரம்பிள்ளை
இசையமைத்தவர்
திருமதி.கீ.கிரிதரன்



**பல்லாண்டு காலம் நற்பணியை வழங்க வாழ்த்துகின்றேன்.**

"செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்"

இவ் அரிய செல்வத்தை இமையாணன் பகுதியில் அமைந்து இவ்வூர் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்து அதன் பொன் விழாவினை பழைய மாணவர் சங்கத்தினால் சிறப்பாக நடத்துவதையிட்டும், பொன்விழா மலரினை வெளியிடுவதையிட்டும் பெரு மகிழ்ச்சியடைகிறோன்.

இப்பாடசாலையானது வடமராட்சி கல்வி வலையத்தின் கீழ் அமைந்து வடமராட்சி மாணவர்களுக்கு சிறந்த கல்வி மூலம் அறிவூட்டல்களை வழங்கி இந்நாட்டிற்கு பல நற்பிரஜைகளையும், கல்விமான்களையும் உருவாக்கி நிற்கின்றது.

இப்பாடசாலையானது சிறந்து விளங்குவதற்கு காரண கர்த்தாவாக இருக்கும் வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோருக்கு பொன்விழாக்காணும் இந்நன்நாளில் எனது பாராட்டுக்களையும், ஆசிகளையும் வழங்கி மென்மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று வல்லை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தியை பிரார்த்தித்து அவர்தம் பாதம் பணிந்து ஆசி வழங்குகின்றேன்.

"சிவாகம சித்தாந்த ஞான தேசிக பானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி"

சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டாயுதபாணிக தேசிகர். JP
(சிவாச்சார்யபீடாதிபதி, அகில உலக சைவக்குருமார்சம்மேளனம்)
(பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்
JIMAYANAN G.T.M. VIDIYALAYAM
VALVETITHURAI

## பொன்விழா வாழ்த்துச்செய்தி.....



கலாசாலை ஒன்று திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன. என்பது அறிஞர் வாக்கு கல்வி அறிவுடையோர் அதிகமாக உருவாகும் போது அறியாமை நீங்குகின்றது. மனிதநேயம் துளிர்விடத் தொடங்குகின்றது. அபிவிருத்தியடைந்துள்ள வளர்முக நாடுகள் என்று கூறப்படும் 1ம் நாடுகளில் கல்விமான்களையே அதிகம் உருவாக்கியுள்ளார்கள். இதன் மூலம் மனுக்குலத்தின் பல தேவைகள், கண்டுபிடிப்புக்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு அபிவிருத்தியடைந்து வரும் (வறுமையான) நாடுகள் அந் நன்மைகளை அனுபவிப்பதைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில் கல்வி என்னும் விதை இமையாணன் என்னும் முல்லை நிலத்தில் கலைமகள் சனசமூக நிலையத்தில் விழுந்து முளைவிடத் தொடங்கியது இக்கன்று 1960ம் ஆண்டு உத்தியோக பூர்வமாக அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையாக மண்ணில் நாட்டப்பட்டது. பல அறிஞர் உருவாகி இன்று பொன் விழாக் கண்டு கல்வி மணம் வீசி நிற்பது இமையாணன் வாழ் மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே.

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்று தம்குறளில் கல்வி என்னும் அதிகாரத்தில் பாடுகிறார். தாம் இன்பமடைவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞ்ஞர் மென்மேலும் அக்கல்வியையே விரும்புவர் என்பது இதன் பொருளாகும். அவ்வாறே இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயமும் பல நூற்றாண்டுகள் வாழ்ந்து பிரதேச மக்களைத் தன்னகத்தே கொண்டு பல்லாயிரம் கல்விமான்களை ஈன்றெடுத்து எம் தேசத்தின் சிறைக்கூடங்கள் இடிக்கப்பட்டு பலதுறைக் கல்விக் கூடங்கள் உருவாக்கப்பட்டு உலகமே இன்புற்று வாழும் கல்வி மான்களை உருவாக்கிட இந்த பொன்விழா நாளில் வாழ்த்துகின்றேன். ஞானத்தின் ஊற்றாம் சர்வவல்லமையுடைய இறைவன் இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் இப்பொன்விழா நாளில் ஆசீர்வதிப்பாராக.

அருட். திரு.நே.து.ஜெயநேசன்
திருச்சபை ஊழியர்
தெ.இ.திருச்சபை உடுப்பிட்டி.


## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம் பொன் விழாவினைக் கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். எமது பிரதேசத்தின் கல்வி வழர்ச்சியில் இப்பாடசாலை கடந்த காலங்களில் முக்கிய பங்களிப்பை வகித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலையின் தேவையை நிறைவு செய்வதற்கான வளங்களும் வசதி வாய்ப்புக்களும் குறைவாக இருந்த போதிலும் கூட கடின உழைப்புடனும் விடாமுயற்சியுடனும் தமது கல்விச் செயற்பாடுகளை முன்நகர்த்தி வரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்திற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நவீன உலகின் சவால்களை சமாளிக்கக் கூடிய அறிவினையும் எமது சமூக பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்து அதன் மூலம் உருவாக்கப்படும் மிக உயர்ந்த ஒழுக்கமும் நற்பண்புகளும் உள்ள சமூக கட்டுமானத்தின் பங்காளிகளாக இன்றைய மாணவ சமூகத்தை உருவாக்க வேண்டிய தார்மீக கடமை எமது சமூகத்தைச் சார்ந்ததாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் சிறந்த எதிர்காலத்திற்கும் எல்லாம் வல்ல அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன்
பிரதேச செயலர்,
கரவெட்டி.



## வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி


கிராமப்புறப் பிரதேசங்களில் பாடசாலைகளைப் புதிதாக உருவாக்குவதன் மூலமே இலங்கையில் கல்வியின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாமென்ற சிந்தனை சுதந்திரத்தின் பின்னர் ஆட்சியாளருக்கு ஏற்பட்டது. இதனால் சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் கிராமங்கள எங்கும் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இவ்வகைப் பாடசாலைகளில் ஒன்றாக யா/ இமையாணன் அ.த.க. பாடசாலையை அடையாளம் காணலாம்.

1959 ம் ஆண்டு யா/ இமையாணன் அ.த.க. வித்தியாலயம் ஆரம்பப் பாடசாலையாக கல்விமான்களால் உருவாக்கப்பட்டது. இப்பிரதேச மாணவர்களின் தேவையைக் கருத்திற் கொண்டு இப்பாடசாலை இடைநிலை வகுப்புக்களையும் கொண்டதாகப் பின்னர் தரமுயர்த்தப்பட்டது. இப்பாடசாலையின் கடந்த 50 வருட காலச் சாதனைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

யா/ இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தின் சாதனைக்குத் துணையாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்களே. பொன்விழாக் காணும் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைந்து அறிவுச்சாலையாக மிளிர வாழ்த்துகின்றோம்.

வ.செல்வராசா
வலயக்கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி

## கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி.



யா/இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஐம்பாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் பொன் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது பிரதேசத்தில் சமச்சீரான கல்வியை வழங்கும் நோக்கத்துடன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. யா/ இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் இப்பாடசாலை பல கல்வியாளர்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கிப் புகழ் பெற்றிருக்கின்றது. உடற்பயிற்சிப் போட்டி, மெய்வன்மைப்போட்டி ஆகியவற்றில் பலவருடங்களாகச் சாதனைகளை நிகழ்த்திவருகின்றது.

வானுயர்ந்த கட்டிடங்களுடன் வடமராட்சியில் நுழைவோரைக் கவரும் வகையில் இன்று யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயமாக விளங்குகின்றது. க.பொ.த.சா.த. பரீட்சையில் அன்மைக் காலங்களில் தொடர்ந்து பல கல்விச் சாதனைகளை ஏற்படுத்தி வருகின்றது. இமையாணன் பிரதேச மக்கள் தமது பிரதேச பாடசாலையை நேசித்து தமது பிள்ளைகளை இப்பாடசாலைக்கு அனுப்புவதால் கரவெட்டிக் கோட்டத்தில் வகை II பாடசாலைகளில் அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக இப்பாடசாலை விளங்குகின்றது.

ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இப்பாடசாலையின் பொன்விழா மலரானது இப்பிரதேசமக்களின் கல்வியார்வத்தையும் விளையாட்டு ஆர்வத்தையும் மேலும் மேலும் அதிகரிப்பதற்கு துணை புரியும் என உறுதியாகரும்பலாம்.

க.அம்பலவாணர்
கோட்டக் கல்விப்பணிப்பாளர்
கரவெட்டி.

## அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி




யாழ். இமையாணன் அ.த.க வித்தியாலயம்.

ஆரம்பகாலம்:- மண்கொட்டகையாய் இருந்துள்ளது. பிள்ளைகள் மண்ணிலிருந்துதான் கல்வி கற்று வந்துள்ளார்கள் படிப்படியாக பிள்ளைகளின் திறமைகள் காரணமாக பாடசாலை அதிஉயர் வளர்ச்சி கண்டு பிரபல கல்லூரிகளுக்கு இணையாக வளர்ந்துள்ளது. பன்னிரண்டு ஆசிரியர்கள் உட்பட சுமார் முன்நூறு பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டி வளர்த்துள்ளார்கள்.

வளர்ச்சி கண்ட காலப்பகுதியில் :- எழுநூற்றைம்பது பிள்ளைகள் கல்வி கற்று வந்துள்ளார்கள். அக்காலப்பகுதியில் பௌதீக வளம், கல்வி, கலைத்துறை, ஒழுக்கம், விளையாட்டுத்துறையில் கோட்டமட்டம் தொடங்கி தேசிய மட்டம் வரை எமது பிள்ளைகள் தமது திறமைகளைக் காட்டி எமது பாடசாலைக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளனர்.

எமது பாடசாலையில் கல்வி கற்ற பிள்ளைகள் பட்டதாரி ஆசிரியர், வங்கி மனேச்சர், வடக்குக் கிழக்குக் கல்விச் செயலாளராக, சட்டத்துறை, மருத்துவத்துறை போன்ற துறைகளில் பதவிவகித்து வருகின்றமை எமது பாடசாலைக்கு மென்மேலும் சிறப்பம்சமாகும். மேலும் எமது பாடசாலை சிறப்புற வளர எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இவ்வண்ணம்
சி. இராஜேந்திரன்
அபிவிருத்தி சங்க செயலாளர்,
இமையாணன் அ.த.க வித்தியாலயம்



**யாழ்/இமையாணன் அ.த.க வித்தியாலயம்.**

**பழையமாணவர் சங்கத் தலைவரின் செய்தி.**

எமது பாடசாலை ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி அதன் ஞாபகார்த்தமாக மலர் ஒன்றினை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஐம்பது ஆண்டுகள் கடந்த எமது இப்பாடசாலை எமது கிராமத்தில் அறிவுக் கண்ணாக திகழ்கின்றது. எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியிலும் சாதனைகளையும் புரிந்தும் இன்று கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது. அவ்வாறே இங்கு கற்றவர்கள் திகழ்கின்றார்கள். அவர்களின் பள்ளிப் பருவ பசுமையான நினைவுகளை மீட்டுப் பார்ப்பதற்கும் வாழ்க்கைக்கும் உந்து சக்தியாக நின்றது, நிற்கின்றது.

பாடசாலையின் வளர்ச்சிப் படிக்கு உறுதுணையாக நின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் என்போரது கடின உழைப்பே எமது வளர்ச்சிக்கு காரணம். அவர்களில் சிலர் மறைந்துவிட்டார்கள். ஆனால் அவர்களின் ஞாபகங்கள் மறையவில்லை.

எமது பாடசாலையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவும் கடந்தகால வரலாறுகளையும் அனுபவங்களையும் சுமந்து வெளிவருகின்ற மலர் வெளியீட்டு விழாவும் இனிதே நிறைவு பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

இ.கபிலன்

தலைவர்

இமையாணன்அ.த.க வித்தியாலயம்,

பழையமாணவர் சங்கம்.

# யா/இமையாணன்
# அ.த.க.வித்தியாலயம்

# பொன்விழாச் சிறப்பு மலர்

# 1959–2009

யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்
JIMAYANAN G.T.M. VIDIYALAYAM
VALVETITHURAI

## பொருளடக்கம்

### A. ஆசியுரைகள்


பிரதமகுரு.வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்த்தானம்

திருச்சபை ஊழியர்,உடுப்பிட்டி

பிரதேச செயலர்

வலயக்கல்விப் பணிப்பாளர்

கோட்டக் கல்விப்பணிப்பாளர்

அபிவிருத்திச்சங்க செயலாளர்

பழைய மாணவர் சங்கத் தலைவர்..


### B. பாடசாலை வரலாறும் அனுபவங்களும்


* எங்கள் பாடசாலை-திருமதி.ந.சந்திரசேகரம் 1
* ஸ்தாபகரின் குறிப்பிலிருந்து -திரு.இ.வல்லிபுரம் 3
* ஆரம்பகால வரலாற்றின் அனுபவச்சுவடுகள்-திரு.க.அப்புக்குட்டி. 6
* மீள நோக்குங்கால்- திரு.ம.குட்டித்தம்பி 8
* எனது பார்வையில் இமையாணன் பாடசாலை -திருமதி.தெ.வேலாயும் 10
* எனது பார்வையில் இமையாணன் - திருமதி.ப.பாலசிங்கம் 12
* இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் 13
* எனது சேவையில் இமையாணன்-திருமதி.த.இரத்தினம் 17
* இமையாணன் வித்தியாலயத்தின் எனது தூரநோக்கு-திரு.சி.தெய்வேந்திரன் 18
* நன்றி மறவாமை -திரு.க.பாலன் 20
* என்னுடைய உயர்வுக்கே ஏணிப்படியான எனது பாடசாலை-திரு.மா.பரமானந்தம் 21
* எனை ஆளாக்கிய தாயே-திரு.மா.செல்வதாஸ் 23
* எனது பார்வையில் இமையாணன் வித்தியாலயம்-திருமதி.அ.பாலசிங்கம் 24
* பொன் விழா வீசும் அன்னையே-திரு.தி.ஜனகன் 25
* இலையுதிர் காலத்திலும் தளிர்விடும்மனசு- திரு.ஆ.வினோதன் 26
* வரலாறு கூறும் படங்கள்


### C. பாடசாலை பழைய மாணவர்களின் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள்


* நினைவுச் சுவடுகள்- திருமதி.உ.சேதுபதி 28
* நாங்களும் மனிதர் - திரு.சு.சதீஸ்வரன் 30
* வருவாயா விடியலே- திருமதி.ப.கருணாகரன் 31
* முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் தொடர்பான ஒரு நோக்கு -திரு.கி.சிறீகாந்தராசா 32
* மானிட அபிவிருத்தியில் நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தின் விளைவுகள் - செல்வி.ம.ஜெயகவிதா 39
* தேர்ச்சிமட்டக் கற்றலில் S "E" -திருமதி.ரா.ரவீந்திரன் 42

**D. சிறப்புக்கட்டுரைகள்**


* உலகமயமாதல் - திரு.இ.சு.முரளிதரன் 44
* சமயங்கள் பற்றிய சில பார்வைகள் -திரு.ப.ஜோதீஸ்வரன் 48
* கலைகளில் சிறந்தது சங்கீதமே
அதை வளர்த்திடல் சந்தோசமே -செல்வி.ச.தம்பு 57
* "இலங்கைப் பாடசாலைகளில் வழிகாட்டலும்
ஆலோசனையும்" ஒரு கண்ணோட்டம் -திரு.இ.தமிழ்மாறன் 59
* உட்படுத்தல் கல்வி மனப்பாங்கு
மாற்றமும், சவால்களும் -திரு.இ.இராஜேஸ்கண்ணன் 65
* The role of the First language in the teaching and learning of English
as a Second language - Mr.K.Sanmuganathan 70
* எளிமையின் அழகியல் - திரு.தே.ஜெகன் 75
* கற்றல் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மாணவர்கள்-திரு.த.கலாமணி 85
* பாடசாலைகளை மேம்படுத்தும் உபாயங்கள் -திரு.ந.அனந்தராஜ் 89
* நன்றி நவிலல்

அட்டை முன்புறம் - பாடசாலையின் மாடிக்கட்டிடத் தொகுதி
அட்டை பின்புறம் - விளம்பரம் - செல்லமுத்தூஸ் புடவை மாளிகை.

# எங்கள் அதிபர்



திருமதி ந.சந்திரசேகரம் S.L.P.S-I

# எங்கள் பாடசாலை

யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயமானது அழகிய வயல் சூழ்ந்த கிராமப்புறச்சூழலில் அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் இக்கிராமத்துப் பிள்ளைகள் தூர இடங்களில் உள்ள பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வந்தனர். இதனால் ஏற்பட்ட அசௌகரியங்கள் காரணமாகத் தமது கல்வியைத் தொடரமுடியாத நிலைமை காணப்பட்டது. அக்காலப்பகுதியில் கல்விகற்றவர்களும் வேலையற்றவர்களாகக் காணப்பட்டனர். இக்கிராம மாணவர்களின் நலன் கருதி 30.08.1959 ம் ஆண்டு ஒரு சிறிய கிடுகுக் கொட்டகையில் திரு. நாகன் இளையவன் அன்பளிப்புச்செய்த காணியில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

முதல் அதிபராக திரு.இ.வல்லிபுரம் அவர்கள் கடமை புரிந்தார். அப்போது 2 பெண் ஆசிரியைகளும், 4 ஆண் ஆசிரியர்களும் கடமையாற்றி-னர். 04.11.1960 இல் இப் பாடசாலை அரசபாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது அந்நேரத்தில் 6 ஆண் ஆசிரியர்களும் 6 பெண் ஆசிரியர்களும் கடமை புரிந்தனர்.

இங்கு கடமையாற்றிய அதிபர்கள் வரிசையில் முதல் அதிபர் என்ற பெருமைக்குரியவர் திரு.இ.வல்லிபுரம் அவர்கள் ஆவார். அவரைத் தொடர்ந்து திரு.M.V.கந்தையா, திரு.சி.நாகரட்ணம், திரு.த.இரத்தினம், திரு.A.D.போல் திரு.கோ.மகாலிங்கம், திரு.த.மணிசுந்தரம், திரு.ம.குட்டித்தம்பி ஆகியோர் கடமை புரிந்தனர். தற்போது திருமதி.ந.சந்திரசேகரம் ஆகிய நான் 17.04.1995 இலிருந்து அதிபராகக் கடமையாற்றி வருகின்றேன்.

1) திருமதி.நாகன் - இளையவன்
2) திரு.சின்னப்பொடி - தர்மலிங்கம்
3) திரு.திருவோணம் - சிவலிங்கம்
4) திரு.சின்னத்தம்பி - சண்முகம்
5) திரு.கந்தையா - தேவராஜா
6) திரு.வல்லிபுரம் - சின்னத்தம்பி

ஆகியோர் இப்பாடசாலைக்குரிய காணியை அன்பளிப்புச் செய்த பெருந்தகைகள் ஆவர். 9 பரப்புக் காணியுடன் ஒரு சிறிய கிடுகுக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது இன்று 24.5 பரப்புக் காணியுடன் அழகிய கட்டடங்களோடு சேர்ந்து கம்பீரமாகக் காட்சிதருகின்றது.

ஆரம்ப காலத்தில் 60''x24'', இரு மண்டபங்கள் 72''x16'', 40''x20'', 55''x14'', ஆகிய கட்டடங்களோடு காணப்பட்ட பாடசாலையானது 1995 இன் பின் பௌதிகவள விருத்தியில் துரித முன்னேற்றம் அடைந்தது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 1998ம் ஆண்டு 90''x25'' நீளமான 3 மாடிக்கட்டடத்தின் அடித்தளவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன இரண்டாம் மாடி வேலைகள் G.T.Z அனுசரணையுடன் பூர்த்தியாக்கப்பட்டன 2002ம் ஆண்டில் உலகவங்கி அனுசரணையுடன் 60''x25'', நீளமான நூலகமும் 60''x20'', நீளமான விஞ்ஞான ஆய்வு கூடமும் கட்டப்பட்டது 2003ம் ஆண்டு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் கீழ் 110''x25'', நீளமான மாடிக்கடடடத்தின் அடித்தள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன. அதன் பின் 60''x20'', நீளமான வகுப்பறைக்கட்டடமும் யுனிசேவ் அனுசரணையுடன் கட்டி முடிக்கப் பட்டன தற்போது

"வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் 110"x25", நீளமான மாடிக்கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவற்றுடன் பிரதேச செயலக உதவியுடன் ஆசிரியர்களுக்கான இரண்டு மலசலகூடங்களும் G.T.Z உதவியுடன் ஆண், பெண் பிள்ளைகளுக்கான மலசலகூடத்தொகுதிகளும், போருட் அனுசரணையுடனான தண்ணீர்த் தாங்கி ஒன்றும் கட்டப்பட்டுள்ளன Z.OA நிறுவனம் நீர் விநியோக வசதியைச் செய்து தந்துள்ளது.

பாடசாலைச்சுற்று மதிலின் ஒரு பகுதியை பழையமாணவர்சங்கசுவிஸ் கிளையும், 300 அடி நீளமான பகுதியை S.C.F நிறுவனமும் தந்துள்ளனர். பழையமாணவர் சங்கத்தினர் குழாய்க்கிணறு ஒன்றையும் அமைத்துத் தந்துள்ளனர். இங்கு கல்வி கற்றுத் தற்போது பல்கலைக்கழகங்களிலும், ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயின்று கொண்டிருக்கும் பழைய மாணவர்களால் இரண்டு நுழைவாயில்களும், பாடசாலைப் பெயர்பொறித்த முகப்பு வளைவு அமரர்.வி.கௌரூபன் ஞாபகார்தமாக அமைத்துத் தரப்பட்டுள்ளது இடைநிலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் கணினி அறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதுப்பொலிவுடன் வடமராட்சி வலயத்தை வரவேற்கும் ஒரு பாடசாலையாக தற்போது கம்பீரமாகக் காட்சி தருகின்றது. மற்றும் கல்வி அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் கா.பொ.த.(சா.த) மாணவர்கள் சித்தி பெற்று க.பொ.த. (உ.த) 48% ஆகவும், 2008ம் ஆண்டு க.பெ.த (உ.த) கற்கத் தகுதி பெற்றோர் 63% ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையானது வடமராட்சி வலயத்தில் வகை II பாடசாலைகளில் தரம் 11 இல் 25-50 வரை உள்ள மாணவர்கள் தோற்றிய பாடசாலைகளிலே முதலாம் இடம் என்பது குறிப்பிடத்தக்கது. 2008ம் ஆண்டு வகை II பாடசாலைகளில் வலய மட்ட வெளிவாரி மதிப்பீட்டில் 2ம் இடம் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கு க.பொ.த (சா.த) வரை கல்வி கற்று அயற் பாடசாலைகளில் க.பொ.த (உ.த) வகுப்பைக் கற்ற மாணவர்கள் பலர் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்று வெளியேறி வருகின்றனர். 2008ம் ஆண்டில் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எட்டுப்பேர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுள் 5 பேர் 3A பெறுபேறு பெற்றுள்ளனர். அவர்களுள் ஒருவர் மாவட்டநிலையில் 2ம் இடம் பெற்று முகாமைத்துவக் கற்கை நெறிக்குத் தெரிவாகி உள்ளார்.


இப்பாடசாலையின் தோற்றத்தால் இக்கிராமமே கல்விச் சமூகமாக மாறிவருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். உயர்ந்த நிலையை அடையும் வகையில் பாடசாலைக் கல்வி வளர்ச்சி இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், பௌதீக வழவிருத்தி போன்றவை தொடர் வழர்ச்சியைக் காட்டினாலும். இப் பாடசாலை இன்னும் பல உயர்வு நிலைகளைத் தொட்டு மேலும்மேலும் வளர்ந்து செல்லவேண்டியதாகும். மாணவர்களுக்கான நவீன உலகுக்குப் பொருத்தமான கல்வி மாற்றங்களை உள்வாங்கி கா.பொ.த(உ.த) கொண்டதான கல்லூரித்தரத்தை அடைந்து கல்வியின் பயனான உயர் பெறுபேற்று இலக்குகளைக் குவித்து வளரவேண்டும் என்பதும், அதற்கு இப்பாடசாலை பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்களின் மாறாத அனுசரிப்பு என்றும் துணையாக இருக்கவேண்டும் என்பது என்றும் எனது விருப்பமாகும்.

திருமதி. நவமணி.சந்திரசேகரம்
(அதிபர்)



இடமிருந்து வலம் :- திரு.இ.கருணாகரன், திருமதி.க.பவளராசா (பகுதித்தலைவர்), திருமதி.ந.சந்திரசேகரம் (அதிபர்), திருமதி. கீ.கிரிதரன், திரு.சி.கோகுலநாதன்,
செல்வி.றொ.கி.ஜெனிற்றா, திருமதி.பு.மணிவண்ணன், திருமதி.ம.தங்கவேல், செல்வி.சீ.பேரின்பராணி, திருமதி.ப.கருணாகரன், திருமதி.கீ.முருகதாஸ்,
திருமதி.வா.விஜயராஜ், திருமதி.உ.சேதுபதி.
திருமதி.ஜெ.சசிதரன், திருமதி.ரா.ரவீந்திரன், திருமதி.யோ.சின்னராசா, திருமதி.ரே.போகீந்திரன், திருமதி.சு.அருமைத்துரை, செல்வி.ஜெ.மகாலிங்கம்,
செல்வி.கு.முருகையா, செல்வி.த.மயில்வாகனம்.
திரு.தி.ஜெயப்பிரகாஷ், திரு.ஆ.விநோதன், திரு.ந.பிரகாஷ், திரு.கு.செந்தூர்ச்செல்வன், திரு.இ.வைகுந்தவாசன், திரு.கு.லோகேஸ்வரன்,
ஆசிரிய உதவியாளர்கள்:- திருமதி. க. இராசையா, திருமதி.ம.ரகு, திருமதி.க.ரகுபதி.

# அன்றிலிருந்து இன்றுவரையான அதிபர்கள்.



திரு.இ.வல்லிபுரம்



திரு.M.V.கந்தையா



திரு.சி.நாகரட்ணம்



திரு.த.இரத்தினம்



திரு.A.D.போல்



திரு.கோ.மகாலிங்கம்



திரு.த.மணிசுந்தரம்



திரு.ம.குட்டித்தம்பி




திருமதி.ந.சந்திரசேகரம்

# ஆரம்பகால ஆசிரியர்களில் சிலர்...



திருமதி.தெ.வேலாயுதம்



திரு.இ.நமசிவாயம்



திருமதி.ப.பாலசிங்கம்



திருமதி.க.சின்னத்தம்பி



திரு.வா.சின்னத்தம்பி




திருமதி.த.இரத்தினம்


## பாடசாலையின் தற்போதய நிர்வாகத்தினர்கள் 2009



முகாமைத்துவக் குழுவினர்



அபிவிருத்திச் சங்கத்தினர்




அபிவிருத்திக் குழுவினர்




பழையமாணவர் சங்கம்


எமது பாடசாலையின் நுழைவாயில்





மாணவத் தலைவர்களும் அதிபர், ஆசிரியர்களும்







நீர்வாகத்திலிருந்து அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்த எம் ஆசான்
அமரர் திரு.கு.திரவியநாதன்.

## ஸ்தாபகரின் குறிப்பிலிருந்து



இமையாணன் கலைமகள் சன சமூக நிலையம் J/VC/4/cc 211 பதிவு இலக்கம் கொண்டது. இது 1956.01.14 இல் ஸ்தாபிதமானது. இந் நிலையம் இலவச பால் வழங்கு நிலையமாக ஆக்கப்பட்டு குழந்தைகள் நலன் பேணும் நிலையமாகவும் M.O.H அவர்களின் நேரடிக் கவனிப்பிலும் இயங்கி வரும் காலத்தில் கற்றல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வளர்ச்சி கண்டது. 1956, 1957 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 42 மாணவர்கள் மாலை வேளையில் ஆறு சதம் மண்ணெண்ணெய் செலவுடன் கல்வி கற்று வந்தனர்.

இந் நிலையத்திற்கு முன்பாக விளங்கிய காளி அம்மன் தேவஸ்தானத்தில் இரு வாகை மரங்களும் சூழலில் வேப்ப மரங்களும் சோலையாகி நிழலாட்டிக் காணப்பட்டது. கரப்பந்தாட்டம் சனசமூக நிலையத்திறப்பு விழாக் காலந்தொட்டு இடம் பெற்று வந்தது. கிராமங்கள் தோறும் இடம் பெறும் ஏனைய கழகங்களுடன் இமையாணன் விளையாட்டுக் கழகமும் பல போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்று வந்தது இமையாணன் விளையாட்டுக் கழகம் வடபகுதி எங்கும் பெயர் பெற்ற விளையாட்டுக் கழகமாகத் திகழ்ந்தது பல கிண்ணங்களையும் கேடயங்களையும் தனதாக்கிக் கிராமத்திற்கு நற்பெயர் ஈட்டிக்கொடுத்தது. இது திரு.க.அப்புக்குட்டி தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகம் தலை நிமிர்ந்தது. வாழ முடியாத சூழ்நிலை உருவாகி தாழ்வு நிலை அடைந்தது. இந் நிலமை வடபகுதியில் எங்கும் உள்ள சமூகத்திடையே நிலவியது

"வெடித்தாற் தான் பருத்தி வெளுப்புத் தெரியும்
படித்தாற் தான் நாட்டு நடப்புத் தெரியும்"

என்ற முதுமொழிக்கமைய சனசமூக நிலையத்தில் கற்ற மாணவர்கள் அனைவரும் ஏழ்மை தழுவிய சூழ்நிலையில் வாழ்ந்தவர்கள் என்பதை உணர்த்தியது.

"ஈழத்தை நேசிப்பது உண்மையானால்
பாசத்தை வையுங்கள் ஈழத்துச் சஞ்சிகையில்"

எனும் அறிவு நிலை வாசிகசாலை வாயிலாக கிராமத்தில் அறிவுடையோராக்கியது.

இப்பகுதி வாழ் மக்களின் பொருளாதாரம் பல வழிகளிலும் தேய்வடைந்து படிப்பறிவும் குறைவடைந்தது.

ஆலயத்தில் திருவிழாக்கள் நாட்டுக் கூத்துக்கள், என்பன வாரந்தோறும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

பெற்ற பிள்ளை கை விட்டாலும் கற்ற நூல் கை விடாது என்பது உறுதியானது.

படிப்பறிவில்லாத எனது தந்தை சொல்வார் "நூற்றைக் கெடுத்த குறுனி" என்று

நுண்ணறிவுகளைச் செவிமடுக்கும் போது தானே தனக்குள் பெருமையடைவார்.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" எனும் போது நல்ல மணமிக்க சந்தண மாலையில் பிறந்தாலும் மாலைக்கு அதனால் ஒரு பயனுமில்லை சிறப்புடைய வெண்முத்துக் கடலிலே தோன்றினாலும் அதனால் கடலிற்கு ஒரு பயனுமில்லை இனிய இசை யாழில் பிறந்தாலும் அந்த இசையினால் யாழுக்குப் பயனில்லை - அதே போல எனது தந்தைக்கு இவ்வுபதேசங்கள் நாராசங்கள் போல் இருக்கும்.

கடந்த யூலை 1956 இல் எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தியடைந்த நான் ஒரு சின்னப் பாடசாலை கட்டி பிள்ளைகளைப் படிப்பிக்க நிலவசதி செய்யும்படி கேட்டேன் அதற்கு அவர் இணங்கினார்.

அ.இ.சி.சு மகாசபை செயலாளர் திரு.இ.வே.செல்வரட்ணம் ஆசிரியர் ஊடாக பாடசாலை நிறுவுவது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தந்தையார் இமையாணன் பகுதி பாம்புப்புலம் (சம்புப்பிட்டியில்) தரிசு நிலமாகக் காணப்பட்ட 9 பரப்பு நிலத்தை தமது பெயரில் கொள்வனவு செய்து ஒப்படைத்தார்.

1959 இல் இமையாணன் பாம்புப்புலக்காணி உறுதி என்னிடம் ஒப்படைக்கப்பட்டதும் பாடசாலை கட்டி முடிக்கும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

கலைமகள் சன சமூக நிலையத்தில் கல்வி கற்று வரும் மாணவர் பெற்றோரின் சார்பில் பாடசாலை கட்டும் பணி ஆரம்பிப்பது பற்றி ஊர் மக்களுக்கு அறியப்படுத்தி ஆர்வத்துடன் செயற்படுத்தப்பட்டது.

இமையாணன் சம்புப்பிட்டியில் என்றுமில்லாதவாறு சனக்கூட்டம் எனது தந்தை நாகன் இளையவன் முதற்கொண்டு குடும்ப உறவினர் பலரும் ஒன்று சேர்ந்து மணற்பாங்கான இப் பகுதியைத் திருத்தித் துப்பரவு செய்யத் தலைப்பட்டனர். இமையாணன் கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் திரு.ஆ.குட்டித்தம்பியும் நிலைய நிர்வாகிகளும் ஒரு சேர ஒத்துழைப்பு வழங்கி 60x24 அடி நீள அகலத்தில் தற்காலிகக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. ஒருவன் நன்றாகப் பக்குவப்பட்ட தன் மனத்தில் எதைப் பற்றி முழுக்க முழுக்க நம்பி முழு மனத்துடனும் முழு மூச்சுடனும் உண்மையுடனும் தீவிரமாகவும் உழைக்கிறானோ அது கட்டாயம் நடைபெறும். உழைப்பில் முழுமையிருந்தால் நினைப்பது கட்டாயம் நடக்கும். பாடசாலை அமைக்கும் பணி வாழ்க்கையில் முன்னேறும் பணி முன்னேற விரும்புகின்றவர்கள் வேடிக்கை பார்க்கும் கூட்டத்துடன் சேர்ந்துவிடக்கூடாது. வாழ்க்கையில் வெற்றி பெறுபவன் எப்போதும் ஒதுங்கிப் போவதில்லை ஒதுங்கிப் போகும் மக்கள் எப்போதும் வெற்றி பெறுவதில்லை.

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு
எய்தும் படு பயனும் பார்த்துச் செயல்"

குறள் என்னும் அடிப்படையில் தெளிவு, அறிவு, உணர்ச்சி ஆகியவைகளின் கூட்டுச் சேர்க்கையிலே ஏற்படும் ஓர் உந்துதலே செயலாக பர்ணமிக்கின்றது.

பாடசாலைக் கட்டிடம் அழகுற அமைக்கப்பட்டு ஆரம்பிக்கும் காலமும் நெருங்கியது. சமாதானக் கமிட்டி ஒன்றின் மேற்பார்வையில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலை ஸ்தாபகராகவும் முதல் அதிபராகவும் நான் (திரு.இ.வல்லிபுரம்) ஏகோபிக்கப்பட்டு நிர்வாகம் நடத்தப்பட்டது. திரு.இ.நமசிவாயம், திரு.வ.சின்னத்தம்பி, திரு.க.செல்லத்துரை, செல்வி.சி.தெய்வானை, செல்வி.க.இராசம்மா ஆகியோர் ஆசிரியர்களாக முதற் தெரிவிலும் பின்னர் திருமதி.கதிராசி சின்னத்தம்பி, திரு.க்.பொன்னையா, செல்வி.ந.பவளம், செல்வி.மா.சிறாப்பியம்மா, திரு.ஆ.இரத்தினம், செல்வி.பரிமளம் சின்னத்தம்பி ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். மொத்தம் 372 மாணவர்களுக்கு 12 ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர்.

1959 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு தென் கருணையம்பதி (கலட்டிப் பிள்ளையார் ஆலயம்) இலிருந்து அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபைத் தலைவரும் நியமன நாடாளுமன்ற உறுப்பினருமான உயர்திரு.M.C.சுப்பிரமணியம் ஸ்தாபகரும் அதிபருமான நான் (திரு.இ.வல்லிபுரம்) மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் பலரும் மங்கல வாத்தியம் இயம்ப பிரதான யாழ் பருத்தித்துறை வீதியால் அழைத்து வரப்பட்ட காட்சி வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்கொள்ளாக் காட்சியாகும். அகில இலங்கை சிறுபான்மைத் தமிழ்ர் மகா சபைத் தலைவரும் நியமன நாடாளுமன்ற உறுப்பினருமான உயர்திரு.M.C.சுப்பிரமணியம் அவர்களால் பாடசாலைக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. காலை 9.00 மணிக்கு ஆரம்பமான கட்டிடத் திறப்பு விழா பி.ப 2.00 மணிவரை நீடித்தது பல பெரியார்கள் சொற்பெருக்காற்றி பாடசாலை மகிமை பெற்று வளர வாழ்த்தினார்கள்.

நிறையன்பு, பற்று பாசம் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு.முருகேசு சிவசிதம்பரம் அவர்களது வாழ்த்துச் செய்திகளும் கிடைக்கப்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் அமரத்துவம் அடைந்த போது இமையாணன் பாடசாலைச் சமூகமும் உதயன் சஞ்சிகை வாயிலாக தமது இரங்கற் செய்தியை 09.06.2002 இல் அனுப்பி வைத்தது.

பாடசாலை நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி கண்டது. 1959.08.30 முதல் 1960.11.04 வரை பொதுவாகவே எமது பெற்றார் செலவுகளிலும் பின்னர் அரசுச் செலவுகளிலும் பாடசாலை வளர்ச்சி கண்டு வருகின்றது.

பொருட்பற்று, கல்விப்பற்று, கலப்புப்பற்று, தற்பற்று, அறப்பற்று, முறண்பற்று என்பன எல்லாவற்றுக்கும் முகங்கொடுத்து வளர்ச்சி கண்டு வருகின்றது.

எனது மைத்துனர் அமரர்.மு.தம்பு அவர்களின் இரவு பகல் பாதுகாப்பும் அயலவர்களின் ஒத்துழைப்புக்கள் என்பன நிறையக்கிடைத்தன.

அரசு பொறுப்பேற்ற பின் பல அதிபர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தினர்.

பழைய மாணவனும் அதிபருமான திரு.ம.குட்டித்தம்பி பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் அபரிமித வளர்ச்சி கண்டது. வருடா வருடம் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றன். வட்டார மட்டத்திலும், மாவட்டமட்டத்திலும் பாடசாலை முதன்மை பெற்று விளங்கியது.


கடந்த 1994,07,01 இல் ஓய்வு பெற்ற அதிபரும் பாடசாலை ஸ்தாபகருமான நான்(திரு.இளையவன் வல்லிபுரம்) துணைவியார் திருமதி.இராசம்மா வல்லிபுரம் சகிதம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு வருடாந்தப் பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டத. புதிதாக நிறுவப்பட்ட கட்டிடம் ஒன்று என்னுடைய நாமத்தில் என்னால் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகான கல்விப் பணிப்பாளர் திரு.வீ.இராசையா பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு.மா.பரமானந்தம், யாழ் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர் திரு.இ.கந்தசாமி, சமூக சேவையாளரும் சமாதான நீதவானுமாகிய திரு.க.அப்புக்குட்டி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக திரு.க.பட்டுலிங்கம் குழுவினர் மங்கள இசையுடன் பாடசாலை பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் அழைத்து வரப்பட்டு திறப்பு விழாவம் சிறப்புற நடாத்தப்பட்டது.

11.2007.

E VALLIPURAM (J.P)
Justice of the peace
Regd 97/1297/J.P/2491

## பாடசாலையின் ஆரம்பகால வரலாற்றின் அனுபவச் சுவடுகள்



பொதுவாக ஒரு கிராமத்தின் மக்களுடைய கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அளப்பரியது. அந்த வகையில் எமது இமையாணன் கிராமத்தில் இன்று பொன்விழாக்காணும் இப்பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஏம்மால் ஆரம்பிக்கப்பட்ட கலைமகள் சன சமூகநிலைய நிர்வாகமும் முன்னின்று உழைத்ததென்பது வெளிப்படை. அன்று என்னுடன் (க.அப்புக்குட்டி) திரு.இ.வல்லிபுரம் திரு.ஆ.குட்டித்தம்பி, திரு.சி.குண்டுமணி, திரு.இ.நமசிவாயம், திரு.க.இராசன், திரு.சி.சுந்தரம் என்போர் முக்கியமானவர்களாகத் தொழிற்பட்டனர்.

அன்றைய காலகட்டத்தில் பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் எமது கிராமம் இருந்தது. ஆயினும் திரு.இ.நமசிவாயம், ச.செல்லையா, இ.வல்லிபுரம் ஆகியோர் S.S.C சித்தியடைந்திருந்தனர். இவர்களுள் இ.வல்லிபுரம்(ஆசிரியர்) அவர்கள் இரவு நேரங்களில் எமது கிராமத்து மாணவர்களுக்கு கல்வி போதித்து வந்துள்ளார். கற்பித்தலில் ஆர்வமுள்ள இவர் கரணவாய் மணியகாரன் தோட்டப்பாடசாலையில் கற்பிப்பதற்கு அப்பாடசாலையின் தலைமை ஆசிரியரை அணுகிய போது 35 பிள்ளைகள் கொண்டுவந்தால் கற்பிப்பதற்கு இடம் தருவதாக கூறியதால் எமது கிராமத்திலிருந்து 35 பிள்ளைகளுடன் அங்குசென்று கற்பித்தலில் ஈடுபட்டார். ஆனால் நிரந்தர ஆசிரியராக ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அதே 35 பிள்ளைகளுடன் கற்பித்தார். அங்கும் நிரந்தர இடம்தரமுடியாது என்ற காரணத்தினால் திரு.இ.வல்லிபுரம் அவர்கள் சோர்வடைந்தார். சமூகரீதியாக தான் ஒதுக்கப்படுவதை அவர் என்னிடம் கூறினார். அதன் பிரகாரம் கலைமகள் ச.ச.நிலையத்தின் செயலாளராக இருந்த நான் நிர்வாகத்தைக் கூட்டி இக்கிராமத்திற்கு ஓர் பாடசாலை எமது சமூகத்திற்கு மிக அவசியம் என்பதை வலியுறுத்தினேன். அதன்பிரகாரம் 09 பேர் கொண்ட சமாதானக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவராக நானிருந்த காரணத்தினாலும் அடிமைப்பட்ட சமூக அமைப்புக்கு எதிரான ஓர் உத்வேகமும் என்னை இரவு பகலாக உழைக்க வைத்தது அதன்நிமிர்த்தம் அன்றைய அரசாங்கத்தில் நியமன நாடாளுமன்ற உறுப்பினராகவும் சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் தலைவருமாக இருந்த மதிப்பிற்குரிய M.C.சுப்பிரமணியம் அவர்களுடைய ஆதரவு கிடைத்தது. அவர்மூலமாக சிறுபான்மைத் தமிழருக்கென அரசாங்கத்தால் 08 பாடசாலைகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில் இமையாணன் கிராமத்துக்கென ஓர் பாடசாலை ஒதுக்கப்பட்டது. இந்நிலையிலேயே இமையாணன் கிராமத்தில் பாடசாலை அமைவதை விரும்பாத அயற்கிராமத்து எமது சமூகத்தினரும் அன்று கனவான்களாக மதிக்கப்பட்ட வேறு சமூகத்தவர்களும் இதற்கு எதிர்ப்பு கொண்டு கதைத்த போது எல்லாச் சமூகங்களும் படிக்கக்கூடிய ஓர் பாடசாலைதான் தேவை என்பதை அவர்களுக்குத் தலைமைதாங்கிய திரு.சி.வெள்ளைக்குட்டி (அண்ணாசிலையடி) அவர்கள் வலியுறுத்தினார் நான் அதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால், எது தேவை என்பதற்கான ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது அதில் சி.வெள்ளைக்குட்டி அவர்கள் தலைவராக இருந்து எல்லாச் சமூகமும் படிக்கக்கூடிய ஓர் பாடசாலைதான் தேவை என்பதை வலியுறுத்தினார். அதற்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருந்தது. அதில் திரு.M.C.சுப்பிரமணியம் அவர்களின் சிபார்சினால் இமையாணன் மக்களுக்கு ஓர் பாடசாலை ஒதுக்கப்பட்டது பற்றியும் அதில் படித்த சிறுபான்மைத் தமிழர்களிற்கே

நியமனம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையையும் கூறியதோடு, ஏற்கனவே அனுப்பப்பட்ட வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு எமது சமூகத்தினர் முன்னேற முடியாத சூழ்நிலையையும் என்னால் எடுத்துவிளக்கப்பட்டது இவ்வாறு பல காரணங்களை நான்கூறியபோது சி.வெள்ளைக்குட்டியும் அவர் சார்பாக வந்த 200 க்கு மேற்பட்டவர்களும் எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டதால் இமையாணன் மண்ணில் 1959 ல் ஓர் பாடசாலை உருவாகியது.

இப்பாடசாலைக்குரிய காணியை அதாவது பாம்புப்புலம் மெலிஞ்சிப்புட்டி என்னும் காணி கரவெட்டி சக்கடத்தார் என்பவராலும். பாம்புப்புலம் சம்புப்பிட்டிக் காணி நாகன் - இளையவன் என்பவராலும் தரப்பட்டு பாடசாலை அமைக்கும் வேலை ஆரம்பமானது. எமது கிராமத்து மக்கள் மிகவும் பெரிதான புட்டிகளையும் மெலிஞ்சி முட்களையும் சிரமதான அடிப்படையில் செய்து முடித்தமை ஓர் வரலாற்றுச் சாதனையாகும். அதன் பின் ஆரம்ப கொட்டகையாக 60x24 அடிகொண்ட கிடுகினால் வேயப்பட்ட தற்காலிகக் கொட்டகை எமது சமாதானக் குழுவின் மேற்பார்வையில் கட்டிமுடிக்கப்பட்டது.

1959 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ம் திகதி இப்பாடசாலை கட்டடத்திறப்பு விழா கரணவாய் கலட்டிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து அன்றைய அரசில் அங்கம் வகித்த நியமன நாடாளுமன்ற உறுப்பினரும் சிறுபான்மை மகாசபைத் தலைவருமான மதிப்பிற்குரிய M.C.சுப்பிரமணியம் அவர்களும் தலைமை ஆசிரியராக கடமையாற்றவிருந்த திரு.இ.வல்லிபுரம் அவர்களும் மங்களவாத்தியம் முழங்க கோலாகலமாக அழைத்துவரப்பட்டனர். திரு.M.C.சுப்பிரமணியம் அவர்கள் கட்டிடத்தைத் திறந்துவைத்து உரையாற்றினார். அன்று ஆரம்ப ஆசிரியர்களாக மகாசபையால் ஐந்து ஆசிரியர்களும் எமது பிரதேச ஆசிரியர்கள் 7 பேருமாக 12 பேர் ஆசிரியராகக் கடமையாற்றினர். இவர்கள் அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை இலவசமாகவே வேதனமின்றி கற்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் சுமார் 300 பேர்வரை கல்வி கற்றனர் அவ்வேளையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக திரு.ம.வைரமுத்து அவர்களின் வீட்டிலிருந்து நிலத்தடி குழாய் மூலம் தண்ணீர் பெறப்பட்டது. பின்னர் பாடசாலை வளவில் கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. எமது பாடசாலை வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் கட்டடங்களின் தேவைகளும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்காக இப்பாடசாலைக்கு அன்பளிப்பாக பல மதிப்பிற்குரிய காணிகளை வழங்கி உதவியுள்ளனர். அவர்களாவது திரு.சின்னப்பொடி - தர்மலிங்கம், திரு.திருவோணம் - சிவலிங்கம், திரு.வல்லிபுரம் - சின்னத்தம்பி, திரு.சின்னத்தம்பி - சண்முகம், திரு.கந்தையா - தேவராஜா ஆகியவர்களுக்கும் அயராது உழைத்த அனைவருக்கும் இப்பாடசாலையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர் என்ற வகையில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் எமது இளைஞர் சமுதாயம் தம் பணியுணர்ந்து இப்பாடசாலையை மென்மேலும் வளர்க்க தம்மாலான பணிகளை ஆற்றவேண்டும் அதன் மூலம் நல்லதொரு சமுதாய அமைப்பை இங்கு தோற்றுவிக்கமுடியுமென்று கூறி எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சத்தினால் எமது பாடசாலையும், மக்களும் உயர்வடையவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**க.அப்புக்குட்டி J.P**
**(உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க உபதலைவர்)**



## மீள நோக்குங்கால் (Reminiscences)!

அன்புடையீர்!

இப்பாடசாலை ஒன்றின் மஞ்சரிக்கு, நான் இந்த ஸ்தாபனத்துடன் சம்பந்தப்பட்டு இருந்த கால சம்பவங்களைப்பற்றி எழுதும் படி கேட்கப்பட்டிருந்தேன். உழை நினைவுகள் இன்பத்தையும், துக்கத்தையுமே அள்ளித்தருகின்றன.

நான் இப்பாடசாலையில் கல்வி கற்ற காலம் 1960 தொடக்கம் 1965 வரை.தரம் 5 தொடக்கம் தரம் 10 வரையாகும். மேலும் நான் அதிபராக இப்பாடசாலையில் 1986. 06. 01 தொடக்கம் 1995.04.15 வரை சேவை ஆற்றியுள்ளேன் எனது கல்விவாழ்க்கையில் நீண்ட அனுபவத்தைத் தந்துள்ளது. அந்த வகையில் என் கல்வி மாதாவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யா/ இமையாணன் அ.த.க வித்தியாலயம் 1959 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நானும் எனது தம்பிமாருமாக இப்பாடசாலையில் கல்வி கற்பதற்காக வந்து சேர்ந்த போது முதல் அதிபராக கடைமையாற்றியவர் அமரர் இளையவன் - வல்லிபுரம் அவர்கள் ஆவார். இப்பாடசாலையின் அக்கால அனைத்து வளப்பெருக்கத்திற்கும் அவர்களே உரித்துடையவர்கள். அவர்களினதும் அக்கால ஆசிரியர்களதும் கடமைநிறைந்த சேவையே என் போன்றவர்களது தோற்றப்பாடாகும். இன்று அவர்களுள் பலர் உயர்ந்த பதவியை அலங்கரிக்கிறார்கள்.

இலங்கையில் இலவசக் கல்வி முறை இருந்த போதும் ஒரு சமூகத்திற்கு கல்வி மறுக்கப்பட்ட ஒன்றாக இருந்துள்ளது. இவ்வாறு கல்வி மறுக்கப்பட்ட சமூகம் ஒன்றிற்காக உருவாக்கப்பட்ட ஸ்தானமே யா/ இமையாணன் அ.த.க வித்தியாலயம். இச் சமூகத்தில் அமரர் இ. வல்லிபுரம் அவர்கள் போன்ற கல்வி கற்ற ஒரு சிலர் மாத்திரமே இருந்தனர் . அவர்களையே இப்பாடசாலையின் ஆசிரியர்களாக்கி மாணவர்களுக்கு இலவசக்கல்வியைவழங்கினார்கள். அவர்களது அற்புதமான சேவையால் உயர்ந்த பாடசாலையாக அகில இலங்கையே போற்றும் மிகத் திறன் வாய்ந்த பாடசாலையாக இன்று விளங்குகின்றது.

இப்பாடசாலைகளில் மாணவர்களை நாம் கல்வி, இலக்கியம், நாடகம், விளையாட்டு முதலியவற்றில் ஏனைய பாடசாலைகளோடு போட்டியிட்டு சாதனைகள் பலவற்றை உருவாக்கியுள்ளோம். யா/ சிதம்பராக்கல்லூரியில் உப அதிபராக நான் இருந்த போது யா/ இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் 1986.06.01 ம் திகதி அதிபராகும் வாய்ப்புக் கிட்டியது, அவ் வேளை எனக்கு இப் பாடசாலையில் என்னைக் கற்பித்த ஆசிரியர்களான அமரர் இ.நமசிவாயம், திருமதி தெய்வானை வேலாயுதம் ஆகியோருடன் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பு பெரும் பாக்கியமாக அமைந்தது. அப்போது ஆறு நிரந்தர ஆசிரியர்களும், ஐந்து தொண்டர் ஆசிரியர்களுமாக ஏறாத்தாழ நூற்று எழுபத்தைந்து மாணவர்களுக்கு கற்பித்து ஏனைய கடமைகளையும் செய்து வந்தோம்.

மாணவர்கள் இருந்து படிபபதற்கு தளபாடங்கள் மிகக் குறைந்தளவில் காணப்பட்டன. பெற்றோர்கள் மாணவர்கள் இருக்கும் வாங்குகளையும், புத்தகங்கள் வைத்து கொப்பியில் எழுதும் உயரமான வாங்குகளையும், இனாமாகச் செய்து தந்தனர்.

நான்கு தூண்களைக் கொண்ட மாதிரியான எங்கள் காலத்து பழைய கட்டிடங்களும் நன்கு காணப்பட்டன. அரசாங்கம் ஒத்தழைக்காத போது பெற்றோர்களும் பழைய மாணவர்களும் நிதி சேகரித்து தற்காலிக கொட்டகைகள் அமைத்தார்கள். மாணவர்களது எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. கல்வி நிலையில் உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் கரவெட்டிக் கோட்டத்தில் முன்னேற்றம் கண்டது.

மாணவர்கள் கல்வி, விளையாட்டு முதலியவற்றிலும் சாதனைகள் வெளிப்படுத்தத் தொடங்கினர். வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, பரிசளிப்பு விழா, போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. இவ்விழாவிற்குப் பெற்றோர், பழையமாணவர்கள் மிகவும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள்.

பாடசாலையில் கட்டிடங்கள் அமைக்கப்படாத போதும் நல்லதொரு விளையாட்டு மைதானம் அமைக்கமுடிந்தது. அதனை உருவாக்க முழுமூச்சாக நின்று உழைத்தவர் திரு நவநீதன் அவர்கள் ஆவார். இதனால் மாணவர்களது விளையாட்டுத் திறன்கள் வளர்ந்து வருகின்றன. குறிப்பாக உதைபந்தாட்டம், கிரிக்கட், வலைபந்து விருத்தி பெற்றது.

பாடசாலையைப் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் விலையுயர் மரங்களை பாடசாலை வளவு, விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் நாட்டி வளர்த்தோம் மரநிழல்கள் ஆசிரியர்கள் கற்பிக்கும் இடங்களாக வகுப்பறை மையங்களாகின.

01.06.1986 - 15.04.1995 வரையான நிர்வாகக் காலம் போர்ச்சூழலும், வறுமையும், பல்வேறு கட்டங்களும் நிறைந்த காலமாகும். மாணவர்களது கல்வி பாதிக்கப்படாது இருந்தமையானது ஆசிரியர்களதும் பெற்றோர்களதும் மிகச் சிறந்த ஒத்துழைப்பே ஆகும்.

பாடசாலை வளவு ஆரம்பத்தில் ஆறு பரப்பாக இருந்தது. அமரர் சி. தர்மலிங்கம் கேணியடி, திரு திருவோணம், சிவலிங்கம் வல்லியாவத்தை, திரு.சி.இரத்தினம் புறாப்பொறுக்கி ஆலடி ஆகியோர் தங்களுடைய சொந்த நிலங்களை நன்கொடையாக வழங்கினர். இதனால் மாணவர்களது திறன் செயற்பாடுகள் விருத்தி பெற்றன. பாடசாலையில் பெற்றோர்களது பங்களிப்பு அதிகமாயிற்று.

எனது பிற்பட்ட காலம் பாடசாலை அதிகூடிய வளர்ச்சி பெற்றிருப்பதை அறியும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கல்வி, இணைபாடவிதான செயற்பாடுகளில் வடமராட்சியில் அதிக கூடிய இடங்களை பெற்றிருப்பது மதிப்பீட்டறிக்கைகள் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

இப்பாடசாலை மென்மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

**திரு.ம.குட்டித்தம்பி**
**(பழைய மாணவன்)**
**(யா/இமையாணன் அ.த.க.வி. முன்னாள் அதிபர்)**



## எனது பார்வையில் இமையாணன் பாடசாலை

யா/ உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த இமையாணன் எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.இ.வல்லிபுரம் தனது பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு மேற்கொண்டு மேற்படிப்பைத் தொடர முடியாமல் இருந்தார்.

அவ்வேளையில் தமது கிராமத்துப் பிள்ளைகள் கல்வியில் மிகமிக பின்தங்கியுள்ளதைக் கண்ணுற்றார். பணவசதியுமின்றி இருந்தார். படிக்க வேண்டும் என நினைக்கும் ஒருசிலர் தூர இடத்துக்குச் சென்று கற்கவேண்டியிருந்தது. இப்படியான நிலையை உணர்ந்த திரு இ.வல்லிபுரத்தின் மனதில் தமது கிராமத்துக்கு ஒருபாடசாலை வேண்டும் எனும் எண்ணம் உதயமாயிற்றும் சிந்தித்தார் செயலப்பட்டார்.

தனது எண்ணத்தை தனது சகோதரனாகிய இ.நமசிவாயத்துடன் அக்கிராமத்தில் உள்ள பெரியவர்களுடனும் அளவளாவி ஒரு பாடசாலை அவசியம் வேண்டும் எனும் திட்டத்தை வகுத்தார்.

பின் இத்திட்டம் கிராமமுன்னேற்றச் சங்கத்திடமும் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு சிவசிதம்பரத்திடமும் வேறுபல கல்விமான்களிடமும், சிறுபான்மை தமிழர் மகாசபையிடமும் கொண்டு செல்லப்பட்டது. ஈற்றில் இக்கிராம மக்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

1959ம் ஆண்டு ஆவணி மாதம் திரு இ.வல்லிபுரம் அவர்களினது அயராத உழைப்பினாலும் கிராம மக்கள் எல்லோரது உழைப்பினாலும் பாடசாலை நிறுவப்பட்டது. அப்பொழுது இப்பாடசாலையில் ஏறக்குறைய 150 மாணவர்களும் 6 ஆசிரியர்களுடனும் ஆரம்பமானது. இக்கிராமத்தில் உள்ள பெரியோர்கள் கல்விமான்கள் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவர் உறுப்பினர்கள் உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு.சிவசிதம்பரம் போன்ற பெரியோர்களது ஆதரவுடனும் ஆசீர்வாதத்துடனும் விளக்கேற்றி தொடக்கி வைக்கப்பட்டது.

அப்பொழுது பாடசாலையில் எதுவித வசதியும் இருக்கவில்லை. மாணவர்கள் நிலத்தில் இருந்துதான் கற்றார்கள். ஆசிரியர்களும் கற்பித்தார்கள். பின் ஒருவருட கால எல்லைக்குள் மாணவர்களும் நாளாந்தம் கூடிக் கொண்டு வந்தனர். கல்வியின் செயற்பாடுகளும் நன்றாக அமைந்துகொண்டு வந்தன. அதனால் ஆசிரியர்களின் தொகையும் மேலும் ஆறாக (6) உயர்ந்து மொத்தம் பன்னிரண்டு (12) ஆசிரியர்களாக உயர்ந்தனர்.

1960 - 11 - 04 ல் ஏறக்குறைய 300 மாணவர்களுடனும் 12 ஆசிரியர்களுடனும் இப்பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. இப்பொழுதே அப்பாடசாலையில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரையும் இருந்தது. திரு இ.வல்லிபுரம் அதிபராகவும் அவருக்கு உதவியாக இருந்த ஆசிரியர்களின் மிகவும் உன்னதமான சேவையை பாடசாலைக்கு வழங்கினார்கள்.

இதன் பின்னர் பாடசாலை வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் பல மாற்றங்களும், அதிபர், ஆசிரியர் நிகழ்வில் பல மாற்றங்களும் நிகழ்ந்தன. யா/இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயருடன் விளங்கியது.

தற்போது ஏறக்குறைய 50 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் பாடசாலை சகல விதத்திலும் பல முன்னேற்றமான நிலையில் காணப்படுகின்றது. விளையாட்டு மைதானம், மாடிக்கட்டிடம், ஆய்வு கூடங்கள், கொண்டதாகவும் யா/ இமையாணன் அ.த.க வித்தியாலயம் என்ற பெயருடன் விளங்குகின்றது.ஆகவே இப்பாடசாலையில் முதன் முதல் நியமிக்கப்பட்ட பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். ஒரு கிராமம் சிறப்படைவதற்கு ஒரு பாடசாலை இன்றியமையாததோ அது போல் இவ்வித்தியாலயம் இமையாணன் கிராமத்திற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

ஆகவே இக்கிராமத்திற்கு ஒரு பாடசாலை வேண்டும் என்னும் எண்ணம் மனதில் உதித்த திரு. இ. வல்லிபுரம் அவர்களை நினைவு கூர்வோமாக. இப்பாடசாலையை ஸ்தாபித்து முன் நிழன்று உழைத்தவரும் நன்கு செயல்பட வைத்தவரும் திரு. இ. வல்லிபுரம் அவர்கள் என்பதனை மறக்க முடியாது அவருடைய சேவையும் செயல் திட்டங்களும் எல்லோராலும் போற்றப்படக் கூடியவை ஆகவே அவருடைய நாமம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு என்றென்றும் வாழ வழிவகுப்போமாக.

நன்றி

**திருமதி.தெ.வேலாயுதம்**
**(ஆரம்பகால ஆசிரியை)**



## எனது பார்வையில் இமையாணன்

செந்தில்பதி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

என் வளமான வாழ்விற்கு வழிகாட்டி எனது வாழ்நாளில் மறக்கமுடியாத பாடசாலையாகத் திகழ்கின்றது தங்கள் பாடசாலையான இமையாணன் அ. த. க பாடசாலை. என்னைப் போன்ற பல ஆசிரியர்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் கலங்கரை விளக்காகத் திகழ்வது தங்கள் பாடசாலையாகும்.

இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பணிபுரிந்த ஆசிரியர்கள் குழுவில் நானும் ஒருவராக இருந்தமையை இட்டு நான் பெரிதும் மனநிறைவு அடைகின்றேன். சிறு கிடுகுக் கொட்டிலில் உதயமான இப் பாடசாலையின் இன்றைய வளர்ச்சி நிலைகண்டு நான் பெருமிதம் கொள்கின்றேன் இவ் வளர்ச்சிக்கு காரணம் தொடர்ந்து அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணிபுரிந்தவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளே ஆகும். என்பதில் சந்தேகமே இல்லை அத்துடன் இக்கிராம மக்களின் விழிப்புணர்வும் ஆர்வமும் கூட இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அதி முக்கியமான காரணியாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஒரு கிராமத்தின் ஆரோக்கியமான முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பதே பாடசாலையாகும். அவ் வகையில் இமையாணன் கிராமத்தில் இப் பாடசாலை அமையப் பெற்றுள்ளமை பெரும் வரப்பிரசாதமே. என்று கூறிக்கொள்வதோடு மேன்மேலும் இப்பாடசாலை பல்துறைகளிலும்பெரு வளர்ச்சி அடைந்து சாதனை படைக்க நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
திருமதி.பவளம்-பாலசிங்கம்
(ஓய்வு பெற்ற ஆசிரியை)
ஆரம்ப ஆசிரியை

## இணைப்பாட விதானச் செயற்பாடு

விளையாட்டு:-

கரப்பந்தாட்டம்: 1990ம் ஆண்டிலிருந்து 2009ம் அண்டு வரை 17 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மாவட்ட மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது. 2009ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மாவட்ட மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

உடற்பயிற்சி : 1990ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை ஆண்கள் அணி மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது. அத்துடன் மாவட்ட மட்ட தெரிவுப் போட்டியில் இடம்பெற்றுக்கொண்டது. அதில்,

1993ம் ஆண்டு 15 வயதுப் பிரிவு - 1ம் இடம்
1994ம் ஆண்டு 15 வயதுப் பிரிவு - 1ம் இடம்
1994ம் ஆண்டு 17 வயதுப் பிரிவு - 1ம் இடம்
1995ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு - 1ம் இடம்

உடற்பயிற்சி பெண்கள் அணியானது 2003ம் ஆண்டில் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியதுடன், மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

மெய்வல்லுநர் : 2009ம் ஆண்டு வரை மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் மாவட்ட மட்டத்திற்கு பல மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். மெய்யழகன்-பிரதீபா என்பவர் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் 1997ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் 1ம் இடமும், 1998ம் ஆண்டு 18 வயதுப் பிரிவில் 1ம் இடமும், பெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றினார். 1999ம் ஆண்டு மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றினார்.

1997ம், 1998ம் ஆண்டுகளில் இ.அனிதன் என்பவர் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி சிறந்த வீரராக தெரிவானார். அத்துடன் 1999ம், 2000, 2001ம் ஆண்டுகளில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் நிகழ்வுகளில் மாவட்டமட்டத்தில் 1ம், 2ம் இடங்களைப் பெற்றார்.

2001ம் ஆண்டு மாகாண மட்டத்தில் செல்லக்கண்டன். செந்தீஸ்வரன் 15 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் பங்கு பற்றினார்.

2002ம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் அஞ்சல் ஓட்ட அணி மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.

01. மனோகரன்-மைக்கல்
02. நவரத்தினம் - கஜேந்திரன்
03. ரகுநாதன் - பிரதீப்
04. ஜீவன் - ஜெகநாத்
05. இராசமாணிக்கம் - தீபாகரன்
06. அருளானந்தம் - சியாமளன்

2003ம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் அஞ்சல் ஓட்ட அணி மாவட்டமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

01. இ.தீபாகரன்
02. செ.செந்தீஸ்வரன்
03. மு.கிரிசாந்
04. அ.சுஜீவன்
05. ப.பானுசந்தர்
06. ந.கஜேந்திரன் ஆகியோர் பங்கு பற்றினர்.

- 2004ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு சென்று பங்குபற்றியுள்ளார்கள்.

01. நவரத்தினம் - கஜேந்திரன் (தத்தி மிதித்து பாய்தல்)
02. முருகன் - கிரிஷாந் (கோலூன்றிப் பாய்தல்) ஆகியோர்

- 2004ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாவட்ட மட்ட அஞ்சல் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று, மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளனர்.

01. தெய்வநாதன் - இந்துக்கான்
02. நவரத்தினம் - கஜேந்திரன்
03. அசோகன் - மகிந்தன்
04. அருந்தவராசா - சுஜீவன்
05. ரகுநாதன் - பிரதீப்
06. இராசமாணிக்கம் - தீபாகரன்

- 2005ம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் மாவட்டமட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்.
01. நவரத்தினம் - கஜேந்திரன் (தத்தி மிதித்துப் பாய்தல்)

தமிழ்த்தினப் போட்டி : வலய மட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்றதோடு, சில நிகழ்வுகள் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளன். மாவட்ட மட்டத்தில் இடம் கிடைத்தோர் விபரம்:-

- 1995ம் ஆண்டு 1ம் இடம் - நாட்டுக்கூத்து
- 1999ம் ஆண்டு 1ம் இடம் - நாட்டுக் கூத்து
- 2000ம் ஆண்டு 2ம் இடம் - நாட்டுக்கூத்து
- 20009ம் ஆண்டு 3ம் இடம் -கட்டுரை-(செ.கீர்த்தனா - தரம் 9)

(2007 - சிவகுமார்- அபர்ணா மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்).
(2007 - குழு இசை மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது).

ஆங்கிலதினப் போட்டி : வலய மட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்றதோடு, சில நிகழ்வுகளில் மாவட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். மாவட்டமட்டத்தில் இடம் கிடைத்தோர் விபரங்கள்

- 1999ம் ஆண்டு ந.சாமினா ஆங்கில எழுத்து 1ம் இடம் மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

- 2004ம் ஆண்டு இ.சாருமதி, கோ.மகிழ்ப்பிரியா ஆகிய இருவரும் ஆங்கில எழுத்துப் போட்டியில் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

- 2006ம், 2007ம் ஆண்டுகளில் செ.கீர்த்தனா கட்டுரைப் போட்டியில் மாவட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

சமூகக்கல்விப் போட்டி :- வலய மட்டத்தில் பங்குபற்றி இடங்களைப் பெற்றதோடு, சில நிகழ்வுகள் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகி மாகாண, தேசிய மட்டங்களில் இடங்களைப் பெற்றுள்ளார்கள்.

- 2002ம் ஆண்டு குட்டித்தம்பி - குணாளன் 1ம் இடம் தேசியமட்டம் (தங்கப் பதக்கம்)

- 2005ம் ஆண்டு செல்வரத்தினம்-செல்வரூபன் 3ம் இடம் மாகாணமட்டம்.

விஞ்ஞானப் போட்டிகளில் :- 2003ம், 2004ம் ஆண்டுகளில் அகில இலங்கையில் விஞ்ஞான முன்னேற்றச்சங்கத்தால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினா விடைப்போட்டியில் வலயமட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

2008ம் ஆண்டு செல்வரத்தினம் - நிரோஜன் புத்தாக்கமாக கருவிக்கண்காட்சி (Torchwithoud battery) கலமில்லாத மின்சூழ் என்ற கருவியை செய்தமைக்கான விசேட திறமைச்சான்றிதமும் 1000 ரூபா பணமும் கிடைத்தது.

## கல்விப் பொது தாராதரப் பத்திரம் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு பகுப்பாய்வு

க.பொ.த(உ/த) தகுதி பெற்றுள்ளோர் வீதம்.

- 1995 - 24%
- 1996 - 13%
- 1997 - 27%
- 1998 - 31%
- 1999 - 32%
- 2000 - 32%
- 2001 - 26%
- 2002 - 27%
- 2003 - 38%
- 2004 - 32%
- 2005 - 32%
- 2006 - 35%
- 2007 - 48%
- 2008 - 63%

## முதன்மைப் பெறுபேறுகளும் அதனை அடுத்து வரும் நான்கு பெறுபேறு பெற்றவர்களும்.

2001.

கு.குணாளன் -5A, 4B, 1C, அதிகூடிய பெறுபேறு

மா.செல்வதாஸ்,ம.கோகிலவாணி,தி.காயத்திரி, தி.காயத்திரி.

2002.

ம.நர்மதா -3A, B, 5C, S அதிகூடிய பெறுபேறு

சி.கலைவாணி, க.கயல்வாணி, தே.சிவாஜினி, சி.அஜந்தீபன்

2003.

இ.பிரசாந்தினி -7A, B, C, S அதிகூடிய பெறுபேறு

த.கல்யாணி, வி.விஸ்வராஜ், க.ரத்தினாகரன், ந.பாமினி

2004.

கோ.கிருஷ்ணப்பிரியா -10A, அதிகூடிய பெறுபேறு

தெ.ருபேந்திரா, உ.உதயலோகினி, கு.நிரோஜினி,க.விஜயராணி

2005.

செ.செல்வரூபன் -7A, 2B, C அதிகூடிய பெறுபேறு

சி.அன்பரசி, சி.கார்த்தியாளன், இ.சாருமதி, மோ.கஜன்

2006.

சி.கார்த்தியானந் -7A, B, 2C அதிகூடிய பெறுபேறு

கோ.மகிழ்ப்பிரியா, க.கஜந்தன், தெ.துளசி, ஆ.ரசீதா

2007.

இ.ஜெசிந்தன் - 8A, B, C அதிகூடிய பெறுபேறு

ஜெ.மயூரன், தெ.சர்வேந்திரா, ஜீ.அமல்ராஜ், மோ.நிறோஜன்

2008.

செ.நிரோஜன் -5A, B, 3C அதிகூடிய பெறுபேறு

ப.சயந்தினி, க.கானப்பிரியா, சு.கஜேந்திரன், பா.கௌதமன்


*. இப்பாடசாலையில் கல்வி கற்று உயர்தரம் கற்கச் சென்ற மாணவர்களில் அனேகமானோர் உயர்கல்வி கற்று அரச, அரசசார்பற்ற துறைகளில் கடமையாற்றுகின்றனர். குறிப்பாக 1985ற்கு பிற்பட்ட காலப்பகுதியில் 80% வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக மற்றுமுள்ள உயர்கல்விகளைக் கற்று மேன்மேலும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

# அன்றும் இன்றும்










# சாதனையாளர்கள்




திரு.ந.வசந்தராசா
(பொறியியலாளர்)



திரு.தி.ஜனகன்
(சட்டத்தரணி)




செல்வி.ந.சாமினா
(மாகாணமட்டம்-தங்கப்பதக்கம்)
பிரதி பண்ணல் ஆங்கிலம்



செல்வன்.குட்டித்தம்பி-குணாளன்
(சமூகக் கல்விப் பொதறிவுப் போட்டி)
(தேசிய விருது)



செல்வன்.இ.செல்வருபன்
வர்த்தகப்பிரிவு
மாவட்டநிலை-I



செல்வி.கோ.கிருஷ்ணப்பிரியா
(கா.பொ.த.சா/த)
10A




## எனது சேவையில் இமையாணன்

இமையாணன் பாடசாலையில் நான் 15 வருடங்கள் படிப்பித்தேன், பத்தாம் ஆண்டு வரை வகுப்பு நடை பெற்றது. நான் 12 மணிவரை நீடிக்கும் வகுப்பிற்கு படிப்பித்தேன். பின் மேல் வகுப்பிற்கு பாடம் படிப்பிப்பேன். மாணவர்கள் நன்றாகப் படித்தார்கள் பாடசாலைகளிற் கிடையேயுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பிள்ளைகள் முதலாம் இடம் பெற்றார்கள். ஒரு முறை விக்னேஸ்வராவில் எல்லாப் பாடசாலைக்கும் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது அதில் ஏழு நிலையிலும் இமையாணன் வெற்றி பெற்றது. அதில் குட்டித்தம்பியரும் விளையாடினார்.எல்லா விளையாட்டிலும் இமையாணனே வெற்றி பெற்றது. மற்ற பாடசாலை பெற்றோருக்கு எங்கள் மேல் ஆத்திரம் இமையாணன் பெற்றோர் என்னையும் எனது கணவன் அதிபரையும் கூட்டிக் கொண்டு வந்து இமையாணன் கொடியுடன் வீட்டில் சேர்த்தார்கள். கனகரத்தினம் பாடசாலை அதிபரும் இமையாணனில் படித்தவர். சங்கீதப் போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெறுவார்கள். நானும் ஒரு நடனம் பழக்கி போட்டிக்கு விட்டேன். வீரமணி ஐயரும் நடனம் பழக்கி போட்டிக்கு விட்டார் நடனம் நடந்து கொண்டிருக்கும்போது வீரமணி ஐயர் வந்து என்னைப் பார்த்து பிரமாதம் பிரமாதம் என்றார். எமது நடனம் முதலாம் இடத்தைப் பெற்றது பலரது பாராட்டையும் பெற்றேன், திருகோணமலை கல்விப்பணிப்பாளர் என்னிடம் படித்தவர்.இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட இமையாணன் பாடசாலையானது பொன்விழாக் காணுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இங்ஙனம்
இளைப்பாறிய ஆரம்ப ஆசிரியை
த.இரத்தினம்

## இமையாணன் மகா வித்தியாலயத்தின் எனது தூர நோக்கு



இன்று இரண்டு மாடிக்கட்டிடத்துடன் கம்பீரதோற்றத்துடன் காட்சியளிக்கும் இப்பாடசாலையை 1959ம் ஆண்டு அமரர். இ.வல்லிபுரம் அவர்களின் கடும் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பட்டது. இவருக்கு உதவியாக எமது கிராம, அயல் கிராமமான அண்ணாசிலையடி, கரணவாய், நாவலடி, வல்வெட்டி, இலகடி, இலந்தைக்காடு, தூப்புலம், ஆதியாமலை, மண்டான் போன்ற கிராம முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும் உதவியாக இருந்தனர். குறிப்பாக எமது இமையாணன் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு.க.அப்புக்குட்டி அவர்கள் இப்பாடசாலை ஸ்தாபகர் அமரர் இ.வல்லிபுரம் அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் இப்பாடசாலை 12 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது, இவ் ஆசிரியர்கள் அயல் கிராமத்திலிருந்து நியமிக்கப்பட்டவர்கள். அவர்களின் விபரம் திரு.இ.வல்லிபுரம், திரு.இ.நமசிவாயம் (இமையாணன்) திரு.வா.சின்னத்தம்பி,(அண்ணாசிலையடி), திருமதி.கதிராசி (முதலைக்குளி) திரு.க.செல்லத்துரை (மண்டான் - கரணவாய்) திருமதி.வே.தெய்வானை (நாவலடி) திரு.த.இரத்தினம் (இலந்தைக்காடு), திருமதி. வ.இராசம்மா (மானிப்பாய்), செல்வி.சி.பரிமளம் (யாழ்ப்பாணம்), திருமதி. சிறாப்பியம்மா (யாழ்ப்பாணம்), திரு.க.பொன்னையா(கொக்குவில்), திருமதி.பா.பவளம் (சமரபாகு) ஆகியோராவர்.

இப்பாடசாலையில் மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த, குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்த பிள்ளைகளே ஆரம்பத்தில் கல்வி கற்றனர், இதே போல் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களும் அடங்குபவர்.

இப்பாடசாலையை அரசாங்க பாடசாலையாக்கவேண்டும் என்று அரசியல்வாதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களுமான திரு.பொன்.கந்தையா, திரு.மு.சிவசிதம்பரம், திரு.க.ஜெயக்கொடி, திரு.எம்.சி.சுப்பிரமணியம், திரு.த.இராசலிங்கம் ஆகியோர் அயராது பாடுபட்டனர் இவர்களின் முயற்சியின் பயனாக இப்பாடசாலை 1960ம் ஆண்டு அரசாங்க பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது.

அரசாங்க பாடசாலையின் முதல் அதிபராக திரு.க.கந்தையா அவர்கள் நியமிக்கப்பட்டு அவரின் வழிகாட்டலில் இப்பாடசாலை சிறப்புற வளர்ந்தது, இவருக்கு பின்பு பல அதிபர்கள் நியமிக்கப்பட்டு பாடசாலை வளர்ச்சியில் அக்கறை காட்டிய போதிலும், இப்பாடசாலையில் ஆரம்பகல்வியை கற்று, பின்பு பல்கலைக்கழக படிப்பை முடித்து இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்ட திரு. த.இராசலிங்கம் ஆகியோர் அயராது பாடுபட்டனர் இவர்களின் பயனாக இப்பாடசாலை 1960ம் ஆண்டு அரசாங்க பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது.

அரசாங்க பாடசாலையின் முதல் அதிபராக திரு.க.கந்தையா அவர்கள் நியமிக்கப்பட்டு அவரின் வழிகாட்டலில் இப்பாடசாலை சிறப்புற வளர்ந்தது, இவருக்கு பின்பு பல அதிபர்கள் நியமிக்கப்பட்டு பாடசாலை வளர்ச்சியில் அக்கறை காட்டிய போதிலும், இப்பாடசாலையில் ஆரம்பகல்வியை கற்று, பின்பு பல்கலைக்கழக படிப்பை முடித்து இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்ட திரு.க.குட்டித்தம்பி

அவர்களின் அதிபர் நியமனம் இப்பாடசாலையை மிக உயர்ந்த இடத்திற்கு கொண்டு சென்றது என்பது யாராலும் மறுக்க முடியாத விடயமாகும்.

இதே போல் இப்பாடசாலையில் ஆரம்பம் முதல் படிப்பை படித்த பலர் பட்டதாரிகளாகவும், 200க்கு மேற்பட்டவர்கள் அரச ஊழியர்களாகவும் இருக்கிறார்கள், இந்த வரிசையில் அரச பகுதியில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவிகளையும் இப்பாடசாலை பழைய மாணவர்கள் வகிக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சிக்கும், பெருமைக்கும் உரிய விடயமாகும், அந்தவரிசையில் கல்விச்சேவையில் திரு.வீ.இராசையா (கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்), திரு.மா.சிவலிங்கம் (கணக்காளர், மன்னார் கல்வி வலயம்) திரு.ம.குட்டித்தம்பி (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரும், வங்கிச் சேவையில் திரு. மா.பரமானந்தம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை) என்பவரும் இலங்கை போக்குவரத்துச் சேவையில் வடமாகாண விசாரணை அதிகாரியாக நானும் பொறியியலாளராக திரு.ந.வசந்தராசாவும், சட்டத்துறையில் திரு.தி.ஜனகனும் பதவி வகிப்பது இப்பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்க்கும் விடயமாகும். அத்துடன் இப்பாடசாலையில் ஆரம்ப ஆசிரியர்களாக கடமையாற்றிய பலர் அதிபர்களாக கடமையாற்றியதும் பெருமைக்குரிய விடயமாகும்.

இப்பாடசாலைக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக்களும் உண்டு அந்த வகையில் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த சங்கிலிய அரசனின் தளபதியான இமையாணன் தளபதி முகாமிட்டிருந்த புறாப்பொறுக்கி ஆலடிக்கு அண்மையில் இப்பாடசாலை அமைந்திருப்பதும், வயல் சார்ந்த நிலப்பரப்பில் துவாளி அம்மன், துவாளிப்பிள்ளையாரின் நேரடி அனுக்கிரகத்துடன் இருப்பதும், இப்பாடசாலைக்கு வசதியாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை அமைந்திருப்பதும் சிறப்பம்சமாகும்.

இப்பாடசாலையில் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்த பிள்ளைகளும், அச்சமூகத்தை சேர்ந்த ஆசிரியர்களும் கல்விகற்று,கல்விகற்பித்தவர்கள் என்பதும். தற்பொழுது பல சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளும், பல சமூகத்தை சேர்ந்த ஆசிரியர்களும் கல்வி கற்று, கல்வி கற்பிக்கிறார்கள் என்பது பெருமைக்குரிய செயல்பாடாகும்,இப்பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி , பின்பு நிரந்தர ஆசிரிய நியமனம் இப் பாடசாலையில் கிடைக்கப்பெற்று அதன் பின் அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்ட வடமராட்சி வலயத்தில் குறிப்பிடக்கூடிய ஆளுமையுள்ள பெண் அதிபர்களில் ஒருவரான திருமதி.ந.சந்திரசேகரம் அவர்களின் வழிகாட்டலில் இப்பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

மீண்டும் இப்பாடசாலையை ஸ்தாபித்த அமரர்.இ.வல்லிபுரம் அவர்களையும் இப்பாடசாலையை அரசாங்க பாடசாலையாக பதிவு செய்ய உதவிய பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர்.பொன்.கந்தையா, அமரர்.மு.சிவசிதம்பரம், அமரர்.க.ஜெய்க்கொடி, அமரர்.எம்.சி.சுப்பிரமணியம், அமரர்.த.இராசலிங்கம், ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்ந்து, இப்பாடசாலை ஒரு தொழில்நுட்பக்கல்லூரியாக விருட்சம் பெறவேண்டுமென்று இப்பொன்விழாக்காணும் நன்நாளில் எல்லாம்வல்ல இறைவனை வேண்டி இப்பாடசாலையின் பழையமாணவனாகிய நான் இப்பாடசாலையின் தூரநோக்கை நன்றியுடன் சமர்ப்பித்து, சந்தர்ப்பமளித்த பொன் விழாக்குழுவினருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
நன்றியுள்ள,
சி.தெய்வேந்திரன்
(விசாரணை அதிகாரி இ.போ.சபை
வடக்கு மாகாணம்)



## நன்றி மறவாமை

இமையாணன் மண்ணதனில் இனிதான கல்விபெற
இமைக்காது இரவுபகல் உழைத்தவரே - என்றும்
இந்தமண் மறக்காது உம்மரிய சேவைதனை
இருளிலொழியாகி இனிதாய் உயர்ந்தீரே!

தென்னை மரக் குற்றியும் ஓலைக் கிடுகும்
அன்னை தமிழ் கற்க அடித்தளமானதே
எண்ணரிய பலரிங்கு நன்மையே பெற்றுள்ளர்
தென்னையேயுன்னரிய சேவையும் பெரிதன்றோ!

ஆரம்ப காலமதில் அன்புடனேயிங்கு வந்து
ஆனபணி செய்து அறிவூட்டி வைத்தவரே
வேதனமின்றிச் செய்தவும் சேவையின்
சாதனைக்கு நிகர் சாித்திரத்தில் இல்லையன்றோ

நாடகம் நடனம் விளையாட்டுப் போட்டிதனில்
ஈடாக எவரமில்லையென்ற(ந்) நிலைக்கு
ஆளாக்கி வைத்த ஆசான்கள் மாணவரே
தோளாகி நின்றவத் தூயபணி நிலைத்ததுவே!


அன்றிலிருந்தின்று வரை ஆண்டுகள் ஐம்பது
அரிய பலரிங்கு அரு மருந்தாகினர்
நின்று நிமிர்ந்திட நீள்பணி யாற்றிய
தொண்டுளங் கொண்ட தூயவரே நன்றி - நன்றி !

-க.பாலன்-
(பழைய மாணவன்)

பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல்ராஜபக்ஷ நூலகம் பார்வையிடவந்தபோது 2002



கல்வி அமைச்சர் கருணசேனகொடித்துவக்கு நூலக திறப்பு விழாவிற்கு வந்தபோது 2002



## சமீப கால நிகழ்வுகள்......




திரு.ப.மார்க்கண்டன் ஆசிரியர் அவர்களின் பிரியாவிடை



திரு. K. கந்தசாமி ஆசிரியர் அவர்களின் பிரியாவிடையின் போது

## கடந்த கால கலைநிகழ்வுகளின் போது.....







ஆசிரியர் குழாமிலிருந்து..





நுழைவாயில் திறப்பு விழா.....





## என்னுடைய உயர்வுக்கே ஏணிப்படியான எனது பாடசாலை

எனது பார்வையில் என் உயர்விற்கான ஏணிப்படிகளில் முக்கியமாக திகழும் என் விருப்புக்குரிய பாடசாலை யா/ இமையாணன் அ.த.க பாடசாலை என்றதும் எப்போதும் என் உள்ளத்தில் உயிரோட்டமான நினைவுகளாகவே பிரதிபலிக்கின்றது. இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவன் என்ற ரீதியில் அதன் ஸ்தாபக வரலாற்றினை இங்கே எடுத்துக் கூறவேண்டிய கடமையும், கடப்பாடும் எனக்கு உண்டு. என எண்ணுகின்றேன் அந்த வகையில் எமது பாடசாலையானது 1959ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இக்காலப்பகுதிக்கு முன்னர் எமது சமூகத்திற்கான பாடசாலை எதுவும் இருக்கவில்லை பொருளாதார ரீதியாகவும் கல்விரீதியாகவும் பின்தங்கிய நிலையில் இருந்த காரணத்தால் எமது சமூகப்பிள்ளைகள் ஏனைய பாடசாலைகளில் சுயமாகக் கல்வி கற்க முடியாத நிலை காணப்பட்டது. ஓரளவு வசதி படைத்தவர்கள் மட்டும் அப்பாடசாலைகளில் கல்வி கற்கக்கூடியதாக இருந்ததுடன் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே அவ்வாறு அனுமதி பெற முடிந்தது. இவ்வேளையில் தான் எமக்கென ஒரு பாடசாலையை உருவாக்கவேண்டுமென ஒரு உன்னதமான, துணிச்சலான பணியினை எமது சமூகத்தின் முன்னோடியான எங்கள் எல்லோராலும் நேசிக்கப்படுகின்ற உயர் திரு. இளையவன் வல்லிபுரம் ஆசிரியர் அவர்கள் (ஓய்வுபெற்ற அதிபர்) தமது தந்தையாரின் உதவியுடனும், பல எமது சமூகக்கிராமங்களில் அறிவுசார் பெரியோர்களின் உதவியுடனும், அப்போது அக்கிராமங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த சனசமூக நிலையங்களின் கூட்டங்கள் வைத்து அக்கிராமங்களின் பூரண ஒத்துழைப்புடனும் இம்முயற்சிக்கு மகுடம் வைத்தாற்போல் எமது மக்களிற்கு குரல் கொடுத்து கொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு.எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் உதவியுடனும் இப்பாடசாலையினை 1959ம் ஆண்டு ஆரம்பித்தார். இப்பாடசாலையின் சுற்றுப்புறக் கிராமங்களான இமையாணன், அண்ணாசிலையடி, மண்டான், இலந்தைக்காடு, சமரபாகு, நாவலடி போன்ற கிராமங்களிலிருந்து சுமார் 275 மாணவர்கள் இணைத்து . அக்கிராமங்களின் படித்தவர்களை ஆசிரியர்களாக இணைத்து பாடசாலையினை ஆரம்பித்தார். இவ் ஆசிரியர்களின் வரிசையில் தன்னை அதிபராகவும் திரு. இ நமசிவாயம், திரு. வ. சின்னத்தம்பி, திரு க. செல்லத்துரை, திரு.சு.சின்னத்தம்பி, திருமதி. கதிராசி சின்னத்தம்பி, திரு. நா. இரத்தினம் திருமதி . பாலசிங்கம் பவளக்கொடி, திருமதி.வேலாயுதம் தெய்வானை, திருமதி.வல்லிபுரம் இராசம்மா, திரு.க.பொன்னையா திருமதி. க.சிறாப்பியம்மா ஆகியோர் எப்போதும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்து ஆரம்பத்தில் கிடுகுக் கொட்டிலாகவும் வெள்ளை மண்நிரப்பப்பட்ட மண்ணில் இருந்து தான் கல்வி கற்ற அந்த நாட்களை எண்ணிப்பார்க்கின்றேன். பின்னர் இவ் அனைத்து ஆசிரியர்களும் 1960 ம் ஆண்டு அரச ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள், கிடுகுக் கொட்டிலாக இருந்த பாடசாலை எமது முன்னாள் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. மு. சிதம்பரம் அவர்களால்

சீமெந்துக் கட்டிடமாக உயர்ந்தது. எமது பாடசாலை பல துறைகளிலும் பிரகாசிக்கத் தொடங்கியது. அதாவது விளையாட்டுத் துறையில் வட்டார விளையாட்டுப் போட்டிகளில் பல முறை முதலாம் இடத்தினைத் தொடர்ந்து பலவருடங்களாக தக்கவைத்துக் கொண்டது. கரவை யாக்கரு வித்தியாலயம் எமது பாடசாலைக்கு பெரும் சவாலாக இருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இத்துறையில் திரு. மு. மார்க்கண்டு, சி. இராசேந்திரம், திரு.க.ஆறுமுகம், செல்வி.வே.ரேவதி போன்ற மாணவர்களின் அபார விளையாட்டுக்களால் இத்துறையில் பலமுறை நாம் முதலாவது பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டது. இதேபோன்று நாடகத்துறையில் பாடசாலைகளுக்கான போட்டியில் 1964ம் ஆண்டு என நினைக்கின்றேன் எமது பாடசாலை மார்க்கண்டேயர் நாடகத்தினை அரங்கேற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது இந்நாடகத்தில் செல்வி. கனகன் இரத்தினம் மார்க்கண்டேயராகவும், திருமதி. இரத்தினம் சிவலிங்கம் சிவனுமாக நடித்தகாட்சி நாடகப் போட்டிக்கு நடுவர்களாக இருந்தவர்களின் கண்களில் இருந்து கண்ணீர்மல்கச் செய்து முதலிடத்தினைப் பெற்றுக்கொண்ட அந்தநாட்கள் என்றும் எமது அழியாத நினைவுகளாக உள்ளன. இப்படியாக பலதுறைகளிலும் இடம்பிடித்துக்கொண்ட இப்பாடசாலையில் மாணவர்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லை இதனால் ஒவ்வொரு நாளும் வகுப்பு ரீதியாக இருவர் சோடிசேர்ந்து தண்ணீர் வாளியினை துவாளி அம்மன் கோவில் கிணற்றிலிருந்து கட்டையில் காவிய நாட்கள் எத்தனையோ இந்தத் தண்ணீர் எடுத்து வருகின்ற கடமையில் நானும் எனது நண்பனான நி. சோதியும், தி. ஜீவச்சந்திரன், ஞா. தெய்வநாதன் ஆகியோர் சோடிசேர்ந்து தண்ணீர் எடுத்துவந்த நினைவுகள் இன்றும் எனது நெஞ்சத்தில் நிழலாடுகின்றது இதனால் எமது அவ்வூர் பெரியோர்களின் உதவியுடன் ஓர் கிணற்றினை அமைக்கத்தொடங்கினார்கள் அவ் வேளையில் மழைநீர் நிரம்பி இருந்த அந்தக் கிணற்றில்தான் துர்ப்பாக்கிய நிகழ்வாக எமது சக மாணவன் சிவலை அவர்களின் மகன் வெள்ளைத்தம்பி அகப்பட்டு அகாலமரணமானார். இதன் பின்னர் இக்கிணறு மூடப்பட்டது பின்னர் வசதிபடைத்த பெரியோர்களின் உதவியுடன் தண்ணீர்ப்பிரச்சினை சரிசெய்யப்பட்டது. இப்படியாக படிப்படியாக வளர்ச்சிபெற்றுவந்த இப்பாடசாலையானது பல கல்விமான்களை உருவாக்கியது. அந்த மாணவர்களே கல்வி அதிகாரிகளாகவும் உயர்வு பெற்றனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை நிலவிய போது இப்பாடசாலையானது 1C பாடசாலையாக உயர்வு பெற்றதோடு வருடம் தோறும் பல மாணவர்களை பல்கலைக்கு அனுப்புவதோடு பல உயர்கட்டிடங்களையும் தன்னகத்தே கொண்டு மிகவும் வனப்புடன் திகழும் எமது பாடசாலையை அந்நாளில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இறுதியாக நான் இக்கட்டுரையில் வெளியிடுவதற்கு சில வரலாற்று குறிப்புகளை தந்துதவிய இப்பாடசாலையின் பழைய மாணவனும் நண்பனுமாகிய திரு மு. மகேந்திரன் அவர்களிற்கும் என்நினைவுக் குறிப்புக்களை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் அளித்த இவ் விழா மலர்க்குழுவினர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன்.


நன்றி

திரு.மா.பரமானந்தன்
சிரேஷ்டமுகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
பருத்தித்துறை.

# விளையாட்டு நிகழ்வுகளில் சில...




























## எனை ஆளாக்கிய தாயே.......!



எனை ஆளாக்கிய
என் கல்லூரித்தாய்க்கு
அகவை ஐம்பதாம்.....

அகமகிழ
நெகிழுகின்றேன்
அன்னையே உனையெண்ணி

நாடிவந்த
எங்களிற்கு
கல்விதந்தாய்
கவின் கலைகள் தந்தாய்

காலமெல்லாம்
நாம் மிளிர
நல்வாழ்வு தந்தவளே...!

நானிலத்தில்
உன்பெருமை
சொல்லிவிட
வார்த்தையில்லை

நன்றி பல
கூறி நின்றும்
போதவில்லை
அது உனக்கு

இமைபோல்
எமைக்காத்த
இமையவளே
இன்றுபோல்
என்றும் உன்
புகழ்நிலைக்க
இறைவனை
வேண்டுகின்றேன்
வளர்க உன்பணி

மா.செல்வதாஸ்
(பழையமாணவன்)
விடுகை வருடம். யாழ் பல்கலைக்கழகம்.

# எனது பார்வையில் இமையாணன் வித்தியாலயம்.

இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தனது ஐம்பதாம் அண்டு நிறைவு விழாவினையொட்டி மலர் ஒன்றை வெளியிடுவது அறிந்து நான் மட்டிலா மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இப்பாடசாலை படிப்படியாக அடைந்த வளர்ச்சியும், நிறைவும் கண்டு இறும்பூது கொள்கிறேன். ஆரம்ப காலத்தில் 5ம் வகுப்பு வரைக்குமே இங்கே கல்வி புகட்டப்பட்டது. பின்னர் கல்வியூட்டல் 7ம் வகுப்பு வரைக்கும் விரிவுபடுத்தப்பட்டு இன்று கல்விப் பொது சாதாரண தரம் வரைக்கும் கல்வி போதிக்கப்படும் வாண்மை கண்டு வியக்கின்றேன். விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களும் சிறப்பாகப் போதிக்கப்பட்டு பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் போட்டிகளில் பரிசுகளும் பெற்றுப் பாடசாலை மாதாவுக்குப் பெருமை தேடிக்கொடுத்தனர். இத்தோடு நின்றுவிடாது விளையாட்டுத் துறையிலும் பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது இப்பாடசாலை.

ஏழு பிறப்புக்களிலும் தொடர்வது கல்வி, மயக்கம் அறுப்பது கல்வி, வள்ளுவனார் தொட்டனைத்தூறும் மணற்கேணியைக் கற்றலுக்கு உவமை கொண்டார். கற்றலம், கற்பித்தலும் சிறப்பாக முழுமை பெறுவதற்கு மாணவர், ஆசிரியர், பெற்றோர் மூன்று பகுதியினருமே இணை வேண்டும். இத்தகைய ஒருங்கிணைப்பைத் திறம்பட நகர்த்தி பாடசாலையை வளம்பெருகச் செய்வது அதிபரின் மகத்தான கடமையே. அவ்வகையில் செயல் திறம்மிக்க பல அதிபர்களைக் கண்டது இப்பாடசாலை. அதனாலன்றோ இந்த 50ம் ஆண்டுகளில் இந்த மாபெரும் வெற்றியைக் கண்டுள்ளது இப்பாடசாலை.


சுவாமி விவேகானந்தர் கல்வியைப் பற்றிக் கூறுமிடத்து ''மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும். எத்தனைய கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தனது சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை'' என்றார். ஆகவே இப்பாடசாலை எதிர்காலத்திலும் பல சீரும் சிறப்பும் பெற்று வளரவும், இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் வெளியிடும் மலர் ஒளியுடனும், பொலிவுடனும் சிறப்புற மலரவும், பாடசாலை மென்மேலும் உயர்ந்த பணிபல புரியவும் வாழ்த்துவதுடன் பீடுகள் பலபெற்றுக் கல்வி கலைகளில் ஓங்க வேண்டும் என என்னிதயபூர்வமான ஆசியைக்கூறி அமைகிறேன்.

திருமதி.அம்பிகை-பாலசிங்கம்
முன்னாள் ஆசிரியை (1968-1972)

## காணிகளை அன்பளிப்புச் செய்தவர்கள்......




திரு.சின்னப்பொடி-தர்மலிங்கம்



திரு.திருவோணம்-சிவலிங்கம்



திரு.வல்லிபுரம்-சின்னத்தம்பி




திரு.சின்னத்தம்பி-சண்முகம்

## நினைவில் நிற்பவர்கள்......



திரு.க.கிருஷ்ணபிள்ளை




திரு.கா.கந்தசாமி

## நிமிர்ந்து நிற்கும் நினைவு......



# பொன்னொளி வீசும் அன்னையே



எமை வளர்த்த தாய்க்கின்று அகவை ஐம்பது
எங்கள் மனமோ உவகை எய்துது

தாழ்நிலத்தில் இருந்துகொண்டே எமை
மேலுயரச் செய்தவள் நீ - என்றும்
உனையே நெஞ்சில் பூசிக்கிறோம்

உன்னிடம் கற்று வந்த காலங்கள்தான்
எம் வாழ்வின் வசந்தகாலம் நாமும் வளர்ந்தகாலம்
அப்பசுமைக் காலம் நினைத்து உள்ளம் குளிர்கிறது
அதையிழந்த சோகம்தான் கண்கள் கசிகிறது

முன்னொருநாள் உன்னொரு கட்டிடம்
இடிந்தது தரையோடு சரிந்தது
நாமெல்லாம் அதிர்ந்தே போய்விட்டோம்
உனக்கினி வீழ்ச்சிதானா என்று
உறைந்தே போய்விட்டோம்

விழுந்தும் நீயெழுந்தாய் - சும்மாவா
மூன்று மாடிகளோடு மிளிர்ந்தாய்
அப்போதே வியர்ந்தோம் - உன்
எழிச்சி கண்டு சிலிர்த்தோம்

கலையில் எமக்கிருந்த ஆர்வங்கண்டு
களம்தந்து எமைவளர்த்தாய் தாயே
போட்டிக் களம்காண எமையனுப்பி
வெற்றிக்கொடி நாட்டி மகிழ்ந்தாய்

எமைப்பத்து மாதமல்ல வருடங்கள்
வயிற்றில் தாங்கியவள் நீ
மனமாரப் பலர் போற்ற அன்றே
உரமான கல்வி புகட்டியவள் நீ

ஓர் தந்தையாய் உடனிருந்து அறிவூட்டி
அவையின் கண் அமரவைத்து பூரித்தாய்
நிச்சயமாய் ஓர் நாள் - அவனியே
வியந்து கேட்கும் இவனெங்கே கற்றான்
வேறெங்குமல்ல எங்கள் பெருமை மிகு
இமையாணன் அரசினர் வித்தியாலயம்
ஒன்றேயென்று அவர் அறிவார்

எமதருமை பாடசாலைத்தாயே உன் பேர் விளங்க
உன் பட்டறையில் பயின்ற நாமிருப்போம்
ஏணியாய் இருந்தெமை உயர்த்திட்ட உத்தமியே
உனக்கொரு தேவையென்றால் கலங்காதே
உடனிங்கே நாமிருப்போம் உன்னோடு

திரு.தி.ஜனகன்
(பழைய மாணவன்)
சட்டத்தரணி.

# இலையுதிர் காலத்திலும் தளிர் விடும் மனசு



பள்ளி வளாகத்தில்
புள்ளி சிறகடிக்க
துள்ளித் திரிந்த
காலங்களின் நினைவலைகள்
பசுமையால்
இதந்தரும் கணங்களாய்
விரிகின்றன.

படித்த பள்ளிக்கூடம்
படிப்பித்த ஆசான்கள்
சுவர்களின் சித்திரங்கள்
இசைக்கும் சங்கீதங்கள்
அவை
கனவுகளை விதைத்த
காலங்கள்.

வேப்பமர நிழல்
தேக்குமர பழங்கள்
தேமா மர பூக்கள்
சவுக்கு மர பிரம்பு
தென்னை மர இளநீ
இப்பொழுதும்
வசந்தங்களை தொலைத்து
ஏங்கும் இதயமாய்
ரணப்படுகிறது.

வயல்வெளி நாற்று
தெருவோர புளியம்பழம்
சிவந்திருக்கும் பம்பாநைஸ்
நவராத்திரி நாவற்பழம்
வெளிக்கதவோர கச்சான்
ஞாபக இடுக்குகளில்
இதமாய் இதயத்தை
வருடுகிறது.

தொலைந்து காலங்களிலும்
மறைய மறுக்கும்
அன்புகள்
சுகமாய் இனிக்கும்
நட்புகள்
சோகத்திற்கும் இறகு
கொண்டு வருடும்
சந்தோசங்கள்.
அன்பான கற்பித்தல்கள்
அரவணைக்கும் கரங்கள்
கண்டிக்கும் தலைமை
மறக்க முடியா
அன்புச் சிறைகள்.

நடித்த நாடகங்கள்
படித்த பாடங்கள்
எழுதிய கவிதைகள்
எழுதாத கதைகள்
மீண்டும் மாணவனாய்
அழைக்கும் விசித்திரங்கள்.
சின்னச் சின்ன
சண்டைகள்
சில்லறைத் திருடல்கள்
முட்டுக்கால் தண்டனைகள்
முழங்கால் வலிகள்
திட்டுக்கள்
முசுப்பாத்திகள்
தொலைக்க விரும்பாமல்
தொலைந்து போன
மகிழ்ச்சிகள்

மாணவர்கள் ஒளிபெற
திரியாகக் கருகும்
ஆசிரியங்கள்.
பட்டாம் பூச்சியாய்
சிறகடிக்கும் மனத்திற்கு

பள்ளிப் பருவமே
கனவுகளின் வாசல்

மீண்டும் ஒரு மாணவனாய்
மாறத் துடிக்கும்
இளவயது
குழப்படிகள்

இலையுதிர் காலத்திலும்
தளிர்விட நினைக்கிறது
மனசு விருப்பமின்றி வெளியேறிய
பொழுதுகளில்
விடைபெறும் போது
சிதறிய கண்ணீர் துளிகள்
மெல்லத் துடைக்க
யாரும் அறியா திரும்பிய
கணங்கள்

இன்னுமின்னும்
பள்ளி வாழ்க்கையின்
துன்பங்களில்லா
இன்பங்கள் எத்தனையோ

புஸ்ப்பிக்கின்ற பூக்கள்
என்னவோ உதிர்வது
இயற்கையின் நியதி - ஆனால்
என் பள்ளி நினைவுகள்
மாத்திரம் உதிர்ந்திட
மறுக்கிறது - ஒரு
வானத்து சூரியன் போல.

ஆ.வினோதன்
(பழைய மாணவன்)
(ஆசிரியர்)
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

# நினைவுச் சுவடுகள்

மயக்கம் தரும் ரம்மியமான மாலை வேளை, குளு குளு வெனத்தென்றல் தடவிச்செல்ல, அமைதியாக இருந்த வீட்டின் முற்றத்து மேலாக சற்று ஓய்வாகச் சாய்வு நாற்காலியில் தலையை மெல்லச் சாய்த்தாள். கனத்துக் கொண்டிருக்கும் பாடசாலை நினைவுகள், உறவுகளின் துயரங்களும், நினைவுகளும் உள்ளத்தை நெருடத் தலையைச் சாய்த்தவள் சற்றே அயர்ந்து தூங்கினாள்.

பாயிற் சுருண்டு படுத்திருந்த தாயின் அழுகையொலி எங்கோ தொலைவில் கேட்பது போன்றதொரு உணர்வு "அம்மா நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் இருக்கிறன் தானே எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளுவன் இப்போ நீங்கள் ஓய்வாக இருங்கள்"

"இல்லை, பிள்ளை' எனக்கு ஏதோ உங்களையெல்லாம் யோசிச்சுப் பார்க்கச் சரியான கவலையாக இருக்குது" உங்களையெல்லாம் நானும், அப்பாவும் எவ்வளவு வறுமைக்குள்ளும் கஸ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினோம். இது யாருக்குத் தெரியும் இந்த ஆண்டவனுக்கும் கண் இல்லை" என்று கூறி மீளவும் ஓவென்று கதறி அழுதாள்.

"என்ன அம்மா, சரி ஏதோ காலத்தின் நியதி இப்படியா ஏதோ நடந்து போட்டு நீங்கள் சின்னண்ணாவை நினைச்சு அழுது அழுதே உங்களை அழிச்சுக் கொள்ளப் போறியள் பின்னால் இருக்கும் எங்களைப் பற்றிக் கொஞ்சம் சிந்தியுங்கள் சின்னண்ணாவின் எதிர்பார்ப்புக்களை எண்ணிப் பாருங்கள் இப்படியே மேகலா தனது தாயாருக்கு ஆறுதல் கூறித்தேற்றினாள்.

இரண்டு வாரங்களுக்கு முன் இறந்து போன மகனை நினைத்தே தாய் புலம்பிக்கொண்டே இருக்கிறாள், சீரான ஊண் இல்லை, உறக்கமில்லை.

எப்படி மறப்பது? மூத்தமகன், சிறந்த பிரயாசையுள்ள தொழிலாளி, குடும்பப் பொறுப்புள்ளவன், சகோதர பாசம் உடையவன் எவ்வாறு இருப்பினும் ஈடு செய்ய முடியாத இழப்பு.

மேகலா, தங்கச்சி, குடிக்கத் தண்ணீர் கொண்டு வா படிச்சியா? உனக்கு Schoolக்கு ஏதாவது தேவையா? இது மேகலாவின் அண்ணன் தினமும் வேலை முடிந்து வீடு வந்ததும் கேட்கும் கேள்விகள் மேகலாவைப் படிக்க வைத்து எங்கள் பாடசாலையில் அதிபராகப் பார்க்க வேண்டும். இது வறுமையிலும் அண்ணனின் அதீத ஆசையும், இலட்சியமுமாகும்.

மேகலாவும் படிப்பில் புலி, விளையாட்டிலும் கெட்டிக்காரி வறுமையிலும் செம்மையான வளர்ப்புடைய பிள்ளை அவளைத்தன்னை விற்றாவது படிப்பிக்கவேண்டும் என்ற அவா உடைய ஒரு உடன்பிறப்பு இன்று கண்முன் இல்லையே, என்றால் யாருக்குத் தான் பொறுக்க முடியும்.

கால் இயலாத தந்தை, சொத்துப்பத்துக்கள் வசதி வாய்ப்புக்கள் பெருமளவு இல்லாத ஒரு சாதாரண தரக் குடும்பம் அண்ணாவின் ஆதரவில் வாழ்ந்தவர்கள். இன்று என்ன செய்வது. வறுமை ஒரு புறம் வாட்ட, அண்ணனின் துயர் மறுபுறம் வாட்ட என்ன செய்வோம். என ஏக்கத்துடன் இருந்த நாம் எமது வீடு வளவை விற்றோம். அம்மாவின் சகோதரம் அப்பாவின் உறவுகள் என இருந்தும் என்ன பயன்? வீடு வளவை விற்ற காசைக் கொண்டு வாடகைக்கு ஒரு சிறு வீட்டை எடுத்து, மிகுதிப் பணத்தை வங்கியிலிட்டு அத்தோடு அம்மா பலகாரம் செய்து கடைகளுக்குக் கொடுத்து வியர்வை சிந்தி நெருப்பாக எரிந்து எங்களைப் படிக்க வைத்தார்.

காலங்கள் உருண்டோடின.

அண்ணனின் இலட்சியங்களைத் தன் இலட்சியமாகக் கொண்டு மேகலா கற்று வந்தார். A/L பரீட்சையில் உயர் பெறுபேறு பெற்றார். உயர் படிப்பை மேற்கொண்டாள் அக் காலத்திலேயே தானும் உழைக்க வேண்டும் காசு சம்பாதிக்க வேண்டும் அம்மாவுக்கு உதவவேண்டும் என உணர்ந்து கொண்டாள்.


தனது படிப்பை விட மாலை நேரங்களில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கமைத்து நடாத்துதல், படித்த பாடசாலையில் சிறிய உதவு தொகையைப் பெற்றுக் கொண்டு விசேட வகுப்புக்கள் நடாத்துதல் தவணைப் பரீட்சைக் காலங்களில் தரம் 1,2 மாணவர்களுக்கான வினாத்தாள்களை ஸ்ரென்சில் Cut செய்து கொடுத்துப் பணம் பெறுதல் என்று தன்னால் இயன்றவரை மேகலாவும் சிறிது சிறிதாகப் பணம் சம்பாதித்து அம்மாவின் கையில் கொடுத்துத் தன் கீழுள்ள சகோதரர்களின் கல்வியில் அக்கறை காட்டி வந்தாள்.

மேகலாவின் வீட்டு Tution அபிவிருத்தி அடைந்து போதியளவு வருமானத்தை ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது அவளுடைய எண்ணங்களுக்கமைய ஆசிரியத் தொழில் கிடைத்தது பெற்றோரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை அவளின் மகிழ்ச்சியும் அவ்வாறே தந்தை, தாய், சகோதரரைச் சந்தோசப்படுத்தி வாழ்ந்து வருங்காலத்தில் அவளின் மனதில் அடுத்த இலட்சியம் மெல்ல மெல்லத் தலை தூக்கியது அந்த உந்துதலுடன் தன் தொழிலைக் கரிசனையுடன் ஆற்றி வந்தாள் ஒவ்வோர் செயற்பாட்டிலும் அவளது அண்ணன் வந்து முன் நிற்பது வழமை. காலதேவனின் இரத்தச் சக்கரம் அவளுடைய இலட்சியத்துடன் உருண்டு கொண்டிருக்கின்றது. வழமை போல் அன்றைய தினம் அதிகாலை எழுந்து கடமைகள் ஆற்றிப் பரபரப்பாக பாடசாலைக்குத் தயாராகிச் சென்றாள். பாடசாலை அதிபர் ஒரு சில மணித்தியாலங்களின் பின்னர் தனது அலுவலகத்துக்கு வருமாறு அழைத்திருந்தார். அதற்கமைய மேகலா அதிபரின் அலுவலகம் விரைந்தாள்.

"சேர்" எக்ஸ் கியூஸ் மீ வரச்சொன்னீர்களாம் ஆம் மேகலா நீங்கள் எழுதிய அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து விட்டதாகக் கடிதம் கிடைத்திருக்கின்றது என்று கூறினார்.

அப்படியா சேர் எனக்கேட்டு மிகவும் சந்தோசமடைந்தாள் மேகலா. அதிபரும் மேகலாவைப் பாராட்டினார். மேகலாவின் பெற்றோரும் இச்செய்தி கேட்டுச் சந்தோசமடைந்தனர். ஆனால் இதைக் கேட்கவும் பார்க்கவும் சின்னண்ணா இல்லையே மேகலாவின் கண்களில் நீர்த்துளிகள் அரும்பின இச்செய்தி கிடைத்து இரண்டு மாதங்கள் தான் ஓடின அன்று சனிக்கிழமை காலை தனது வேலைகளில் ஈடுபட்டிருந்த மேகலாவை சைக்கிள் மணி அழைத்தது - எட்டிப் பார்த்தாள் வெளியே, கேற்றில் தபாற்காரன் ஓடிச்சென்று தபாலை வாங்கிப் பிரித்துப் பார்த்தவள் "அம்மா எனக்குஎங்கட ஸ்கூலுக்குப் பிரின்சிப்பலாக போகுமாறு கடிதம் வந்திருக்கு என்று ஆனந்தத்தோடு கூறினாள். அத்துடன் அவளது தூக்கம் கலைந்தது அவள் கண்டது கனவா அல்லது நினைவா? அண்ணனின் இலட்சியங்கள் நிறைவேறிய போதும் வாழ்க்கை நன்றாக அமைந்த போதும் இருபத்தொரு வருடங்களின் முன் உள்ள நினைவுச் சுவடுகள் என்றுமே அழியாது.

திருமதி. உலகேஸ்வரி சேதுபதி
(ஆசிரியை)
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்



## நாங்களும் மனிதர் !

எத்தனை தேசம்.... எத்தனை நாடு....
புலம் பெயர்ந்தோராய்ப் புகலிடம் கேட்டோம்
பாலை மணலும்.... பனியுறை நீரும்....
அன்னிய மண்ணில் அகதியாய்ப் போனோம்.

கொன்றைப் பூவுதிர் புற்றரை மீதில்
சொந்தங்களோடு கூடிக்களித்த
அந்தநாட் பொழுதுகள் இன்றெமக்கில்லை
அன்றைய நிலவுகள் இன்றிங்கில்லை.

எம் தேசமண்ணில் மலை சூழ் அழகும்
அலைபுரள் கடலும் அதன் நீழ் கரையும்
ஒற்றை நதியும் நிரையாய்ப் பனையும்
ஒரு கணமேனும் காணத்தவித்தோம்.

ஒரு நாட்பொழுதில் எம்தாய் மண்ணில்
நிமிர்ந்தே நின்று உரத்துச் சொல்வோம்
"எங்கள் தேசம் எங்கள் பூமி
அடிமைகளல்லோம் உரிமை மக்கள்".

ஆயுட்காலம் முடியும் போதும்
எங்கள் தளைகள் கழராவிட்டால்
இத்தனை கனவுகள் மனதில் கொண்டு
புதைந்தே போவோம் புதிதாய்ப் பிறப்போம்.

மனிதப் பிறப்புக் கிடைக்காவிடினும்
மனதை நெகிழ்ந்தும் மலராய்ப் பிறப்போம்
போராடிச் சோர்ந்த ஒரு சில இதயம்
புத்துயிர் பெறட்டும் - போதும் எமக்கு! .

**சுப்பிரமணியம் சதீஸ்வரன்**
**(பழையமாணவன்)**
**(விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)**

## வருவாயா விடியலே?

நடுங்க வைக்கும் நாய்க்குரைப்பு
பயங்காட்டும் பல்லி சொல்லல்
கலங்கச் செய்யும் காற்றின் உறுமல்
நிம்மதி இழந்த படுக்கை
நித்திரை இன்றிய இரவு
நிலையற்ற வாழ்வு
சிதிலங்களாகச் சிதைந்து
சிதறிவிட்ட எம் இருப்பை
சீரமைக்க வருவாயா விடியலே?

கடந்து சென்ற காலங்களின்
ரணமெல்லாம் காய்ந்து
அழியாத வடுக்களாய் எம்மனதில்
இருள் சூழ்ந்து ஒழியிழந்த முகங்களாய்
வசந்தத்தின் வரவுகளாய்
வாசல் திறந்து வைத்து
வழியெல்லாம் விழியாக
விடியலே உனக்காக நாம்

2010 வருகின்ற ஆண்டே
விடியல் தரும் தினகரனாய்
புலரிப் பொழுதது
புன்னகையைப் பூக்க வைக்க
உன் விடியலுக்காய்
ஏங்கும் எம்
வற்றிய கன்னங்கள்
உப்பி நிற்க
உதடுகள் மலர்ந்து
உவகை கொள்ள
ஊரைச் சூறையாடிய
சுனாமியாக அல்லாமல்.

கலவரங்களால் கலங்கிய எமது
மண்ணைச் சிதைத்து
மரங்களை முறித்து
உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி
இன்னொருமுறை
இடம் பெயர வைத்துவிட்ட
நிஷாவாக அல்லாமல்
நிம்மதியைத் தரும்
தென்றலாக
வருவாயா விடிலே?

திருமதி.பத்மராணி கருணாகரன்.



## முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் தொடர்பான ஒரு நோக்கு

20ம் நூற்றாண்டின் முதல்ப்பாதியில் பல உயிர்களைப் பலி கொண்ட சொத்துக்களை சாம்பலாக்கிய இரண்டு யுத்தங்களுக்கு உலகம் முகம் கொடுக்க நேர்ந்தது இவ்வாறான இரு யுத்தங்களும் ஆரம்பத்தில் ஐரோப்பாக் கண்டத்திற்குள்ளே ஏற்பட்டு பின்னர் படிப்படியாக அனைத்துக் கண்டங்களைச் சேர்ந்த நாடுகளுடனும் தொடர்புபட்டதனாலேயே இது உலகமகாயுத்தமென பெயர் பெறுகின்றது. இவ்வாறு இரண்டு பாரிய யுத்தங்கள் ஓய்ந்துள்ள நிலையிலும் கூட 3ம் உலக யுத்தமென்ற ஒன்று வராமல் தடைசெய்யும் அதிதீவிர முயற்சியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (United Nation organizotion) ஈடுபட்டு வருகின்றமை இங்கு ஞாபகப்படுத்த வேண்டிய ஒரு விடயமாகும். மேற்படி இரண்டு யுத்தங்கள் பற்றி நோக்கும் போது அவை ஆரம்பித்து முடிவடைந்த காலப்பகுதி, யுத்தம் ஏற்பட்டதற்கான காரணங்கள், யுத்தத்தில் ஈடுபட்ட பிரதான பங்காளி நாடுகள், ஏற்பட்ட உயிர் உடமைச்சேதவிபரம், போரின் இறுதி முடிவு என்ற ஒழுங்கு வரிசையில் ஆராயப்பட்டுள்ளது. இனி இரண்டு உலகப்போர்களினுள் நாம் பிரவேசிப்போம்.

### முதலாம் உலகமகா யுத்தம்.

உலகின் 6 கண்டங்களைச் சேர்ந்த 30 நாடுகள் பங்கு கொண்ட முதலாவது பாரிய யுத்தமாக இது அமைந்தமையினால் முதலாம் உலக மகாயுத்தமென கருதப்படுகிறது. முதலாம் உலக யுத்தமானது 1914 ஜீலை மாதம் 28ம் திகதி தொடக்கம் 1918 நவம்பர் மாதம் 11ம் திகதி வரை நாலாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றது. இவ் யுத்தம் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே தொடங்கிய போதும் பின்னர் ஐரோப்பியரின் அடிமை நாடுகளிலும் பரவியது அத்தோடு ஐக்கிய அமெரிக்காவும் இந்த யுத்தத்தில் பங்கு பற்றியதைத் தொடர்ந்து உலகமகா யுத்தமாக மாறியது.

### யுத்தத்திற்கான காரணிகள்

1ம் உலகப்போர் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட போதிலும் யுத்தத்திற்கான காரணிகள் அதற்கு முன்னரே 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தோற்றம் பெற்று விட்டன. இங்கு பல காரணங்கள் யுத்தத்திற்கு ஏதுவாக அமைந்த போதும் உடனடிக் காரணம் தொடர்பாகவும் முக்கிய சில காரணங்கள் தொடர்பாகவும் மட்டுமே விரிவாக நோக்கப்பட்டுள்ளது அவையாவன.

*. சரஜிவோ சம்பவம் (1914) - உடனடிக் காரணம்.
*. அல்சேஸ் - லொறைன் பிரச்சினை
*. பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை
*. கிழக்கு ஐரோப்பாவில் காணப்பட்ட நிலைமை

*. குடியேற்ற நாடுகளை கைப்பெற்றுவதில் ஏற்பட்ட போட்டி
*. ஜேர்மனியின் பேரரசுக் கொள்கை
*. ஐரோப்பா இரண்டு அணிகளாக பிரிந்தமை.

சரஜிவோ சம்பவம் (1914)

ஆஸ்திரியா நாட்டின் முடிக்குரிய இளவரசன் பிரான்சிஸ் பேடினந்தும் அவன் மனைவி சோர்பியும் 1914 ஜீன் மாதம் 28ல் சோர்பியாவின் நகரான சரஜிவோவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது பிரின்ஸிப் என்ற பொஸினிய மாணவனால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆஸ்திரியா நட்ட ஈடு கேட்ட வேளை சோர்பிய அதனை நிராகரித்தது. இதனால் 1914 ஜீலை 28இல் சோர்பியாவிற்கு எதிராக ஆஸ்திரியா போர்ப்பிரகடனம் செய்தது இங்கு ரஷ்யா சோர்பியாவிற்கு படை உதவி செய்தவேளை ஆஸ்திரியாவின் நெருங்கிய நட்புநாடான ஜேர்மனி ரஸ்யாவிற்கு எதிராக 1914 ஆகஸ்ட் 1ம் திகதி போர்ப்பிரகடனம் செய்தது.

ஐரோப்பா இரண்டு அணிகளாகப் பிரிதல்.

பிரான்சும், பிரித்தானியாவும் 1904இல் நட்புறவு உடன்படிக்கையை மேற்கொண்டதோடு 1907இல் ரஷ்யாவையும் இணைத்து "முக்கூட்டு நட்பு அணி" என மூன்று நாடுகளும் கூட்டுச் சேர்ந்தன. இவ்வாறே ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகள் இணைந்து "மத்திய ஐரோப்பிய வல்லரசு" என்ற அணியை உருவாக்கிக் கொண்டன.

ஜேர்மனிய பேரரசுக் கொள்கை

ஜேர்மனியரான பிஸ்மார்க் என்பவர் ஜேர்மனியின் ஐக்கியத்திற்கும் பாதுகாப்பிற்குமாக எதிர் நாடான பிரான்சைத் தனிமைப்படுத்தியது. ஆனாலும் பிரான்சின் நட்பு நாடான பிரித்தானியாவுடன் நட்புறவைப்போண விரும்பியது. ஆனபோதிலும் பிஸ்மார்க்கைத் தொடர்ந்து 1888இல் ஜேர்மனியில் கைசர் (பேரரசன்) பதவிக்கு வந்த 2ம் வில்லியம் என்பவன் பிஸ்மார்க்கின் இராஜதந்திரக் கொள்கையை புரிந்து கொள்ளாமையால் மொறக்கோ பிரச்சினையில் தலையிட்டு பிரான்சிற்கு நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் பெர்லின் - பக்தாத் புகையிரதப் பாதை அமைக்க துருக்கிக்கு உதவியதன் மூலம் பிரித்தானியாவுடன் முரண்பட்டுக் கொண்டான். இதைவிட ஜேர்மனிய கடற்படையை கட்டியெழுப்பும் நோக்குடன் M.M.M டொரநோட் கப்பல்களை அமைத்ததுடன் கீல் கால்வாயையும் ஆழமாக்கியதால் இதனைப் பிரித்தானியா தனக்கு விடப்பட்ட சவாலாகக் கருதியது.

முதலாம் உலகப்போரில் ஈடுபட்ட அணிகள்.

1ம் உலகப் போரில் நாடுகளின் பங்களிப்பு தொடர்பாக நோக்கும் போது போரின் முதற்கட்டம் சேர்பியாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையில் நடந்த பொழுதிலும் ஆஸ்திரியாவிற்கு எதிராக ரஷ்யாவும் பிரான்சும் போரில் பங்கேற்றன. ஆரம்பத்தில் பிரித்தானியா போரின் பங்கேற்காத போதும் ஜேர்மனி பெல்ஜியத்தின் மீது படையெடுத்தபோது 1914 இல் பிரித்தானியா ஜேர்மனிக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்தது. தொடர்ந்து மத்திய ஐரோப்பிய

வல்லரசு அணியாக இத்தாலி 1915 இல் லண்டன் இரகசிய ஒப்பந்தம் மூலம் நட்பு நாடுகள் அணியில் சேர்ந்து கொண்டது. ஜேர்மனியானது துருக்கி, பல்கேரியா முதலிய நாடுகளை சேர்த்துக் கொண்டது. இவ்வாறாக 1ம் உலகப் போரில் ஈடுபட்ட நாடுகள் அனைத்தும் இரண்டு அணிகளாகப் பிரிந்து நேசநாடுகள் (நட்பு நாடுகள்) எனவும் நட்பு நாடுகள் (மத்திய ஐரோப்பிய வல்லரசு) எனவும் செயற்பட்டன இவை தொடர்பான விபரத்தினை பின்வருமாறு காட்டலாம்.

நேசநாடுகள் - இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா, பெல்ஜியம், ருமேனியா

அச்சுநாடுகள் - ஜேர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, பல்கேரியா, வழங்கேரி

### யுத்தத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு

ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பாக் கண்டத்தைச் சேராதா ஒரு நாடாக இருந்த காரணத்தினால் யுத்தத்தின் ஆரம்பத்தில் பங்கு கொள்ளவில்லை இதை விட இந்நாடு கடைப்பிடித்து வந்த நடு நிலைமைப் போக்கு, அமெரிக்கர்களில் பெரும்பான்மையானோர் யுத்தத்தை விரும்பாமை, யுத்தத்தில் பங்குபற்றிய நாடுகளுக்கு உணவு, உடை, மருந்து, போராயுதங்கள் போன்றவற்றினை விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டியமை போன்ற காரணங்களும் பொருத்தப்பாடு உடையனவாக அமைகின்றன. இங்கு அமெரிக்கா நடுநிலைமைத் தன்மையினை வலியுறுத்த 1914 இல் அமெரிக்க ஜனாதிபதி வூட்றோ வில்சன் கூறிய "அமெரிக்கா நினைவிலும் செயலிலும் நடு நிலைமையைக் கடைப்பிடிக்கும்" என்ற வாசகத்தை நினைவு கூற வேண்டியுள்ளது.

இவ்வாறாக அமெரிக்கா ஆரம்பத்தில் விலகி நின்ற போதும் 1917இல் 1ம் உலகயுத்தத்தில் பங்குபற்றி நேசநாடுகள் அணியுடன் சேர்ந்து அச்சு நாடுகளைத் தாக்க உறுதுணையாக அமைந்திருந்தது இதற்கான காரணங்களை நோக்கும் போது

*. ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் நடாத்திய தாக்குதலில் 1915 மார்ச் 28ல் பலாபா,1915 மே 1 ல் கல்பைட் ஆகிய இரு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டபோது அமெரிக்கர்கள் இறந்தனர்.

*. வேறொரு சந்தர்ப்பத்தில் அதாவது 1915 மே 07 ல் அமெரிக்காவின் பயணிகள் கப்பலான லுசித்தானியா தென் அயர்லாந்துக் கடற்பரப்பில் வைத்து ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலால் 18 நிமிடங்களில் மூழ்கடிக்கப்பட்டதனால் அதில் பயணித்த 1098 பேர் மூழ்கி மாண்டனர் இவர்களில் 128 பேர் அமெரிக்கர்களாவர். மேற்போன்ற காரணங்களின் விளைவாக 1917 ஏப்ரல் 06 ல் ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனிக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டது.

### யுந்தத்தின் பால் ஏற்பட்ட உயிர் உடமைச் சேதங்கள்

இப்போரில் நேரடி மோதல்களை விட நவீன விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியான தாக்குதல்களே மேற்கொள்ளப்பட்டன. இதனால் கிராமங்கள், நகரங்கள், பயிர்ச்செய் நிலங்கள், கைத்தொழிற்சாலைகள், தொடர்பாடல் துறைகள் என்பன அனைத்தும் பாரிய அழிவுகளுக்குள் உட்பட்டன. குறிப்பாக 500 கோடி பவுண் செலவு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக பிரான்சில் மாத்திரம் 21.000 தொழிற்சாலைகள் 1659 பட்டினக்குடியேற்றங்கள் என்பன அழிந்தன அடுத்து மரணமடைந்தனர் 20 Million படையினர் காயமடைந்தனர்.

ஹிட்லரின் எழிற்சியும் ஜேர்மனி பலமடைதலும்

1ம் உலகம் போரின் பின்னர் ஜேர்மனியில் "அடோல்ப ஹிட்லர்" என்பவரால் கட்டளையிடும் அதிகாரம், சர்வாதிகாரம் ஆகிய தன்மைகள் கொண்ட "நாசிசவாதம்" எனும் கொள்கை மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. தந்திரமுள்ள அரசியல் வாதியாகவும் நாவன்மை கொண்டவனாகவும் விளங்கிய ஹிட்லர் பொதுமக்களை நேசநாடுகளுக்கு எதிராகத் தூண்டியதுடன் 1933ல் சர்வதேச சங்கத்திலிருந்து ஜேர்மனியின் உறுப்புரிமையை நீக்கியதுடன் 1936ல் ரயின்லாந்தையும், 1939 இல் செக்கோசெலவாக்கியாவையும் ஆக்கிரமித்தமையால் இந்தச்சம்பவங்கள் 2ம் உலக யுத்தத்திற்கான தூண்டுதல் காரணிகளாக அமைந்தன.

இத்தாலியில் முசோலினியின் செயற்பாடு

1ம் உலகப் போரின் பின்னர் இத்தாலியில் "முசோலியின்" என்பவனால் பேச்சுவார்த்தை அல்லாத கட்டுப்பாடுகளுடன் கூடிய செயற்பாடாக அமைந்த "பாஸிஸ வாதம்" எனும் சிந்தனை மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டது. இத்தாலி 1ம் உலகப் போரின் போது வெற்றி பெற்ற அணியில் இருந்த போதிலும் கூட எதிர்பார்த்த பிரதேசங்களைப் பெறமுடியாமையால் அரசியல், பொருளாதார, சமுகஸ்திரமின்மையால் பாசிசக் கொள்கையூடாக குடியேற்ற வேட்கையை ஏற்படுத்தி பேரரசாக இத்தாலியை எழிற்சியடையச் செய்யவேண்டுமென்ற முசோலினியின் ஆசையும் யுத்தத்திற்கு வழிவகுத்தது.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக் கொள்கை

NIPPON (நிப்போன்) நாடு என அழைக்கப்படும் ஜப்பான் கிழக்காசியாவைச் சேர்ந்த அபிவிருத்தியடைந்த ஒரு நாடாகும். இந்நாடு கைத்தொழில் வளர்ச்சியினால் சந்தைகளைப் பெறவும், அரசியலில் பேரரசாக வளர வேண்டுமென்ற ஆசையும் கொண்டிருந்தது இதன் விளைவாக சர்வதேச சங்கத்திலிருந்து விலகியதுடன் 1934 ல் வடசீனாவில் மஞ்சூரியாவையும், சீனாவின் துறைமுகங்கள், நகரங்கள் சிலவற்றையும் கைப்பற்றிக் கொண்டது.

இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்ட அணிகள்

2ம் உலகமகா யுத்தத்தில் நாடுகளின் பங்களிப்பு தொடர்பாக நோக்கும் போது 1939 ல் ஜேர்மனி போலந்தைக் கைப்பற்றிய போது பிரித்தானியாவும், பிரான்சும் ஜேர்மனிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தன. ஜேர்மனி ரஷ்யாவுடன் ஆரம்பத்தில் உடன்படிக்கை செய்தபோதும் ரஷ்யாவின் எல்லை விரிவுபடுத்தும் திட்டத்தினால் 1941ல் ரஷ்யாமீது படையெடுத்தது. 1940ல் ஜேர்மனி பிரான்ஸ் மீது மேற்கொண்ட படையெடுப்பிற்கு உதவியாக இத்தாலி ஜேர்மனியுடன் கூட்டுச்சேர்ந்தது. ஆசியாவில் ஒரு பேரரசாக உருவாக ஜப்பான் திட்டமிட்ட நிலையில் ஜப்பானின் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு பேர்ள்துறைமுகத்திலிருந்த அமெரிக்க கடற்படை தடையாக இருந்தது 1941 நவம்பர் 07ல் ஜப்பான் பேர்ள்துறைமுகத்தைத் தாக்கியது இதனால் 1941 ல் டிசம்பர் 08 ஐக்கிய அமெரிக்கா ஜப்பானுக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்தது.

இவ்வாறு போரிட்ட நாடுகள் நேசநாடுகள் எனவும் அச்சு நாடுகள் எனவும் இரு அணிகளாகப்பிரிந்தன அவற்றைப் பின்வருமாறு காட்டலாம் நேசநாடுகள் - பிரித்தானியா,

பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா அச்சு நாடுகள் - ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பல்கேரியா, ருமேனியா

**யுத்தத்தின் போது ஏற்பட்ட உயிர் உடமைச் சேதங்கள்**

இப்போரில் அதிகளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன குறிப்பாக போரின் முடிவில் 4 கோடி 50 இலட்சம்வரை கொல்லப்பட்டனர். ஜேர்மனி 1389 விமானங்களை இழந்தது பிரித்தானியா 792 விமானங்களை இழந்தது 100,000 (நூறாயிரம்) ஜேர்மனியப் படைகள் ரஷ்யாவிடம் சரணடைந்தன பேர்ள் துறைமுகத்தாக்குதலில் அமெரிக்கா 350 விமானங்களும் 5 யுத்தக் கப்பல்களும் அழிக்கப்பட்டன அமெரிக்க வீரர் 2300 பேர் இறந்ததுடன் 1100 பேருக்கு அதிகமானோர் காயமடைந்தனர். 1945ல் அமெரிக்கா ஜப்பானின் மீது மேற்கொண்ட அணுகுண்டுத் தாக்குதலில் 100,000 (நூறாயிரம்) பேருக்கு அதிகமான மக்கள் இறந்தது மட்டுமன்றி ஜப்பானின் இரு நகரங்களான ஹிரோசிமா நாகசாகி ஆகியன முற்றாக அழிந்து நாசமாகின.

**போரினால் ஏற்பட்ட விளைவுகள்**

போரினால் ஏற்பட்ட விளைவுகளை நோக்கும் போது அது பல்வேறு வழி முறைகளில் புதிய எழிற்சி நிலையினை ஏற்படுத்தியுள்ளது. அவை வருமாறு.

*. புதிய அரசுகளாக பின்லாந்து, போலந்து, ஹங்கேரி, அல்மேனியா, ருமேனியா, செக்கோசலவாக்சியா, யூகோஸ்சலவாக்கியா போன்ற புதிய சுதந்திர நாடுகள் தோன்றின.

*. யுத்த காலத்தில் பெருந்தொகையான பலத்தை சம்பாதித்துக் கொண்ட ஐக்கிய அமெரிக்கா சர்வதேச வல்லரசாக மாறியது.

*. தேசிய இன அடிப்படையில் பல அரசாங்கங்கள் தோன்றின இத்தாலியில் பாசிசம், ஜேர்மனியில் - நாசிசம், யப்பானில் - ஆள்புலப்படர்ச்சி, சீனாவின் விழிப்பு, துருக்கியன் புரட்சி ஆகியன நாட்டின் வாதத்தால் எழுந்தன.

*. பழைய நகரங்கள் சிலவற்றின் பெயர்கள் மாற்றமடைந்தன குறிப்பாக மெஜுப்பொத்தேமியா - ஈராக் என பெயர் மாற்றப்பட்டன.

*. சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டமை :- உலக சமாதானம் ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆட்ரோ வில்சனின் 14 அம்சத்திட்டப்படி 1920 இல் சர்வதேச சங்கம் உருவானது.

**யுத்தத்தின் முடிவு** :- 1ம் உலக மகாயுத்தம் 1918 நவம்பர் மாதம் 11ம் திகதி முடிவடைந்தது. இதன் பிரதி பலனாக பிரித்தானியா உள்ளிட்ட நேசநாடுகள் வெற்றி பெற்றன ஜேர்மனியை பிரதானமாகக் கொண்ட அச்சு நாடுகள் படு தோல்வி அடைந்தன. இதன் விளைவாக ஜேர்மனி மீதும் ஏனைய அச்சு நாடுகள் மீதும் "வேர்செயில்ஸ்" என்ற இறுக்கமான உடன்படிக்கை ஒன்று 1918 ஜீன் 28 ல் பலவந்தமாக நேசநாடுகளால் திணிக்கப்பட்டது. இரண்டு வருடங்களின் பின்னர் அதாவது 1920ல் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் தீவிரமுயற்சியின் பயனாக உலக சமாதானத்தை பாதுகாப்பதற்காக "சர்வதேச சங்கம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆயினும் இந்த அமைப்பானது பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்தமையால் அத்தோல்வி 2ம் உலகப் போர் என்ற ஒன்று உருவாக்குவதற்கு ஒரு மறைமுகத் தூண்டுதலாகவே அமைந்து விட்டது.

## இரண்டாம் உலகமகா யுத்தம்

சமாதான முயற்சிக்காக உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் தோல்வியின் பிரதிபலனாக 2ம் உலகப் போர் தொடங்கியது 1939 செப்டெம்பர் மாதம் தொடக்கம்1945 ஆகஸ்ட் மாதம் வரை 6 வருடகாலமாக உலகம் முழுவதும் இடம் பெற்ற யுத்தமே 2ம் உலக யுத்தமாகும் இந்த யுத்தம் ஆட்டிக் பனிப்படலம் வட ஆபிரிக்காவின் பாலைவனங்கள், பர்மா, அத்திலாந்திக் சமுத்திரம், தூரகிழக்கு பசுபிக் தீவுகள் ஆகிய பிரதேசங்களிலும் பரவலாக இடம் பெற்றது.

## யுத்தத்திற்கான காரணங்கள்.

2ம் உலக யுத்தம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாக அமைந்த போதும் இங்கு உடனடிக் காரணமும் ஏனைய காரணங்களில் சில முக்கிய விடயங்களும் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன.

அவை வருமாறு.

*. 1939 ல் ஜேர்மனி போலந்து மீது தாக்குதல் தொடுத்தமை - உடனடிக்காரணம்
*. ஹிட்லரின் எழிற்சியும் ஜேர்மனி பலமடைதலும்
*. இத்தாலியில் முசோலினியின் செயற்பாடு
*. ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கை
*. போர் அணிகளாக ஐரோப்பிய நாடுகள் பிரிந்தமை
*. சர்வதேச சங்கத்தின் தோல்வி

## ஜேர்மனி போலந்தைத் தாக்கியமை (1939)

1939 செப்ரம்பர் 1 ல் ஜேர்மனி ஹிட்லரின் தலைமையில் போலந்தைத் தாக்கியது. இதனால் போலந்தைப் பாதுகாப்பதெனெ ஒப்பந்தம் செய்திருந்த பிரித்தானியாவும் பிரான்சும் 1939 செபடரம்பர் 3ல் ஜேர்மனி மீது யுத்தம் தொடுத்தன.

## ஜப்பான் மீதான அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதல்

ஜப்பான் கடைப்பிடித்த ஆக்கிரமிப்புக் கொள்கையின் விளைவாக சுமாத்ரா, ஜவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ் தீவுகள், இந்தியா, இலங்கை தவிர தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் அனைத்தையும் ஜப்பான் கைப்பற்றியது இதனால் ஜப்பானை அடக்கும் நோக்குடன் அமெரிக்க ஜனாதிபதி ஹெரிட்ருமன் ஜப்பான் மீது அணுகுண்டு பிரயோகிக்க அனுமதி வழங்கினார். இதனால் 1945 ஓகஸ்ட் 6ம் திகதி அமெரிக்க போர்விமானமான B 29 எனோலாகே "சின்னப்பையன்" (Little boy) என்ற பெயர் கொண்ட அணுகுண்டை ஹிரோஸிமா நகரின் மீது வீசியது. அதே வருடம் ஓகஸ்ட் 9ம் திகதி "பெரியபையன்" அல்லது "தடித்தபையன்" (Big man) என்ற பெயர் கொண்ட அணுகுண்டை நாகசாகி நகரம் மீது வீசியது இந்த அணுக்கதிர் வீச்சு தாக்கம் காரணமாக 100,000 க்கும் அதிகமானோர் இறந்ததுடன் இன்றும் கூட ஜப்பானில் குறைபாடுடைய குழந்தைகள் பிறப்பது 2ம் உலகப்போரின் கொடூர விளைவாகும்.

போரினால் ஏற்பட்ட விளைவுகள்.

போரினால் ஏற்பட்ட விளைவுகளைப் பார்க்கும் போது உலகநாடுகள் பலவற்றில் முக்கிய திருப்புமுனைகள், மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக

*. பிரித்தானியாவும் பிரான்சும் உலகவல்லரசு நிலையை இழந்தமை
*. ஜேர்மனி என்பது கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி என இரண்டாகப் பிரிந்தது.
*. ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாக எழிற்சி அடைந்தன.
*. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேசியா, பர்மா போன்ற குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றன.
*. முதலாளித்துவமும் சோசலிசமும் எழிற்சியடைந்தன
*. அமெரிக்காவில் ஜோன்மார்ஷல் என்பவரால் போரினால் அழிவிற்கு உள்ளான நாடுகளுக்கு உதவ மார்ஷல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
*. உலக சமாதானத்திற்கும், நாடுகளின் அபிவிருத்திக்குமாக ஐக்கிய நாடுகள் உருவானது.

யுத்தத்தின் முடிவு :- 2ம் உலக யுத்தம் 1945 அகஸ்ட் மாதம் முடிவடைந்தது இந்தயுத்தத்திலும் பிரித்தானியா அடங்கலான நேசநாடுகள் வெற்றிபெற, ஜேர்மனி தலைமையிலான அச்சு நாடுகள் தோல்வியடைந்தன இந்நிலையில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கும், உலக சமாதானத்தையும் நாடுகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் 1943ல் டெஹ்ரான் நகரில் ஒன்று கூடிய பிரித்தானிய பிரதமர் வின்சன் சேர்ச்சில், அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், சோவியத் ரஷ்யா தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் எடுத்த தீர்மானத்தின் விளைவாக 1945 ல் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த மாநாட்டின் விளைவாக ஐக்கிய நாடுகள் சபை உருவானது.

1945 அக்டோபர் 24ம் திகதி முதல் இச்சபை செயற்படத் தொடங்கியது இதன் ஆரம்பத்தில் 50 நாடுகள் அங்கத்துவ நாடுகளாக விளங்கிய போதும் தற்போது 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் தலைமையகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளதுடன் பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, சமூக பொருளாதாரசபை, நம்பிக்கை பொறுப்புக்கள் சபை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் எனும் ஆறு கட்டமைப்புக்களைக் கொண்டு வெற்றியோடு இன்றும் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறாக உலகின் பல நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்த இரு வேறு கட்டங்கள் 1ம், 2ம் உலகப் போர்களென்ற பெயர்களுடன் மோதுண்ட நிலையிலும் அந்த யுத்தங்களைத் தடுப்பதற்கு சர்வதேச சங்கம், ஐக்கிய நாடுகள் சபை என்பன எழிற்சியடைந்த நிலையில் சர்வதேச சங்கம் தனது சமாதான முயற்சியில் தோல்வியடைந்த போதிலும் ஐக்கிய நாடுகள் சபை 1945ல் தோன்றி இன்றுவரை நிலைகுலையாது செயற்பட்டு வருவதனால் 3ம் உலகப்போர் என்ற இன்னொரு யுத்தம் ஏற்படாமல் தடுக்கப்பட்டு வருகின்றமை அனைத்துலகும் அறிந்த உண்மையே.

உசாத்துணை நூல்கள் :-
*. தரம் - 11 பாடப்புத்தகம்
*. 2007 - வெளியீடு
*. வினாவிடைத் தொகுப்பு
வரலாறு
தரம் - 11
நா.மயில்வாகனம் (2008)

தொகுப்பு
திரு. K. சிறீகாந்தராசா
( V. K. Sri )
(பழையமாணவர்)
ஆசிரியர்
யா/ மணற்காடு றோ.க.த.க. பாடசாலை.

## மானிட அபிவிருத்தியில் நவீன விஞ்ஞான தொழில் நுட்பவியலில் விளைவுகள்

உலகிலே எண்ணற்ற விலங்குகள், வாழ்கின்றன இந்த விலங்குகளுள் ஒன்றாக, அவற்றோடு அவற்றைப் போல மனிதனும் வாழ்ந்தான் இது பழங்கதை, ஆனால், இன்றோ மனிதன் தான் வாழும் புவிச் சூழலை மட்டுமன்றி அண்டம் முழுவதையுமே தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்று, வெற்றியும் கண்டு வருகின்றான். எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்று கூறுமளவிற்கு மனிதன் வளர்ச்சி அடைந்து வருகிறான்.

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ஒன்றின் மீது மற்றொன்று தங்கியுள்ள செயற்பாடுகளாகும். கருத்தியல் வடிவாகி நிற்பது விஞ்ஞானம், காட்சி வடிவாகி நிற்பது தொழில்நுட்பவியல் இன்றைய அறிவியல் தொழில்நுட்பம் மேலை நாட்டில் உருவானவை. ஆனால் எங்கும் அவை நீண்ட பாரம்பரியம் உள்ளவை அல்ல. பதினாறாம் நூற்றாண்டில் இருந்து தொடங்கியவைதான் அறிவியல் முறைக்கு வித்திட்டவர் கலிலியோ, அவர் காலத்திலிருந்து தொடங்கி அறிவியல் இன்று கற்பனைக்கும் எட்டாத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது முன்னேறிய நாடுகளில் மக்களுடைய அன்றாட வாழ்க்கையின் ஒரு கூறுபாடாக அறிவியல் உருவாகியிருக்கிறது. ஓர் அங்கமாக இடம் பெற்றிருக்கிறது. அன்றாட வாழ்வினின்று பிரித்துப் பார்க்க இயலாத அளவிற்கு ஒன்றி நிற்கின்றது. நம்மைப் பொறுத்தவரை அது நமது நீரோடும், நிலத்தோடும், காற்றோடும் கலந்ததாக இல்லை நமது நாட்டின் வயலிலும் வாய்க்காலிலும், காட்டிலும், மேட்டிலும் நிறைந்து வளரும் செடி, கொடி போல் பரவவில்லை. பாதுகாக்கப்படும் சூழ்நிலையில் ஒதுங்கி வளரும் "குரோட்டன்" செடி போல இருக்கிறது. பாமர மக்களுக்கு அது மேம்பாட்டுக் கருவியாக அறிமுகமாகவில்லை.

இன்று விஞ்ஞானம் தொழில்நுட்பவியலும், அவற்றின் பிரயோகமும் சமூக வாழ்க்கையினதும் பண்பாட்டினதும் ஒன்றிணைந்த அம்சங்களாகிவிட்டன. விஞ்ஞான அறிவு, உலகினைப் புரிந்துகொள்ள மனிதன் செய்த முயற்சிகளின் விளைவாகும். அத்துடன் மனிதனுக்கு அவசியமான சகல துறைகளிலும் அவ்வறிவு பயன்படுத்தப்பட்டு பல முன்னேற்றங்கள் காணப்பட்டன. உண்மையில் மனிதனின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சக்திமிக்க கருவியாக விஞ்ஞானம் கருதப்படுகின்றது. தேசிய உற்பத்திப் பெருக்கத்துக்கும் விஞ்ஞானம் முக்கிய பங்களிப்பினைச் செய்கின்றது. இவ்விடயத்தில் தொழில்நுட்பமும் கைத்தொழில்மயமாக்கமும் மூலவளத்தேய்வு, சூழல் மாசுபடல், சுற்றாடலில் ஏற்படும் மாற்றம் ஆகிய புதிய பிரச்சினைகளையும் உருவாக்கின்றன. இந்நிலையில் குறிப்பாக 21 ஆம் நூற்றாண்டில் சகல நாடுகளும் முறையாகவும், பொறுப்புணர்வுடனும் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தவேண்டும். என்ற கருத்து மேலோங்கி வருகின்றது. இதனூடாகவே அபிவிருத்தி மற்றும் வாழக்கைத் தரத்தை உயர்த்துதல் தொடர்பான இலக்குகளைச் சரிவர அடைந்து கொள்ள முடியும்.

மனிதனின் வளர்ச்சி பல்வேறு கட்டங்களிலே படிப்படியாக திகழ்ந்து வருகிறது. மனிதன் தனது வளர்ச்சியின் முதலாவது கட்டத்தில் எல்லாப் பணிகளுக்கும் உடலின் தசைகளைப் பயன்படுத்தி வந்தான். அவ்வாறு பயன்படுத்தும் போது சிந்தனையோடு பயன்படுத்தினான். தனது பணியை எளிதாக்கி அதிக பயனைப் பெறுவதே அவனது சிந்தனையின் நோக்கமாக இருந்தது. உடலுழைப்பிற்குப் பதில் பொறிகளைக் கொண்டு வேலை செய்விக்க அவன் அறிந்து கொண்டான். இச்சிந்தனைப் புரட்சியே தொழிற் புரட்சிக்கு வழிவகுத்தது. மனித வளர்ச்சியில் தொழிற்புரட்சி ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்த வளர்ச்சிக்கெல்லாம் மனித மூளையே அடித்தளமாக அமைந்தது. ஆனால் இன்று மனித மூளையையே பிரதி செய்யும் புதிய கருவிகள் உருவாகி வருகின்றன. காசு அளவிலான நுண் சதுரங்கள் இன்று மூளையையே ஓய்வுகொள்ளச்

செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளன. மனித வளர்ச்சியில் புதிய பாச்சலாகத் தோன்றியுள்ள சாதனங்கள் எல்லாம் இலத்திரனியல் என்று வளர்ந்து வரும் துறையின் சாதனங்களே. இன்று எங்கும் எதிலும் இலத்திரனியலின் ஆட்சியே நிலவுகின்றது. எனவேதான் இன்றைய காலகட்டத்தை இலத்திரனியல் யுகம்'' என்கிறோம். இன்று மனித குலம் பெற்றுள்ள வளர்ச்சிகளுக்கெல்லாம் இலத்திரனியல் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

இன்று நாம் வானவெளி யுகத்தில் வாழ்கிறோம் பல்வேறு கோள்களுக்கும் மனிதன் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டு வருகிறது. இவற்றால் உடனடியான பயன்கள் ஏற்படாமற் போகலாம். ஆனால் போக்குவரத்து செய்திப் பரிமாற்றம், காலநிலை ஆய்வு முதலியவை பற்றிய ஆய்வுக்குக் கோளிடைச் செலவு முயற்சிகள் பெரிதும் உதவிவருகின்றன. இவை மனித இனத்தின் உடனடி வளர்ச்சிக்கு உதவியாக உள்ளன.

எமது உடலைப் "பொல்லாப் புழுமலி நோய் புன் குரம்பை'' என்று ஒருவர் பாடினார் எம்மை அறியாமலே பல நோய்க்கிருமிகள் எம்முடலுட் புகுந்து தொல்லை புரிகின்றன உடல் இழையங்கள் திடீரென வேலைநிறுத்தம் செய்கின்றன. சகலகலாவல்லவனாக மருத்துவருடைய கண்முன்னாலேயே இவை மனித உயிரைக் குடித்துவிடுகின்றன "அறுவை மருத்துவம் வெற்றி'' ஆனால் நோயாளி இறந்துவிட்டார் என்று மருத்துவர் விளக்கமளிக்கிறார். இந்தக் குறைபாடுகளை எல்லாம் வெல்ல இலத்திரனியல் வழிகாட்டுகிறது. லேசர் எனப்படும் ஒருவகைக் கதிர் "கத்தியின்றி இரத்தமின்றி'' அறுவச்சிகிச்சை செய்து முடித்துவிடுகிறது. ஒரே கணத்தில் உடலின் குறைகளை உடனுக்குடன் அறிந்து, அறிவித்து மருத்துவக் கட்டளைகளை வழங்கி, உயிரைக் காக்கும் அமுதமாக இலத்திரனியல் வளர்ந்து வருகிறது.

இன்றைய உலகில் தன்னிறைவு காணாத மனிதன் இன்னும் இன்னும் மேலே மேலே, இன்னும் மேலே என்று முன்னேற விரும்புகின்றான் இன்றை நிலையை அடிப்படையாகக் கொண்டு நாளைய உலகைக் கற்பனை செய்கிறான். எச்.சீ உவெல்சின் "காலப்பொறி'', பாரதியாரின் "ஞானரதம்'' இவ் அடிப்படையில் எழுந்த கற்பனைகளே "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின்'' என்பது குறள்நெறி. மனித இன வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் விஞ்ஞானிகள் காலந்தோறும் இத்தகைய எதிர்காலக் கற்பனைகளை வெளியிட்டு அவற்றை அடைவதில் வெற்றியும் கண்டு வருகிறார்கள். இந்த அடிப்படையிலேதான் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்களையும் அறியவேண்டும் நாளுக்கு நாள் மாறிவரும் வேகத்தோடு நாமும் சேராவிட்டால் இந்நூற்றாண்டின் வியத்தகு முன்னேற்றங்களிற் பங்கேற்காத துரதிஷ்டசாலிகளாகிவிடுவோம்.

ஆதிமனிதன் ஒருநாள் பணி செய்ய எதுவுமின்றி எதேச்சையாக தன் பத்து விரல்களையும் பார்த்து வியந்தான் என்று வரலாறு கூறுகிறது. இதுதான் கணிணியின் முதல் கட்டம் எனவும் கூறலாம். கையடக்கமான கணிப்புப் பொறி முதல் றொபோ எனப்படும் செயற்கை மனிதன் வரை எல்லாமே கணிணி என்ற வகையுள் அடங்கும் பலர் ஒன்றிணைந்து செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் ஒரு கணிணியே செய்யக் கூடிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதனால் மனித வளர்ச்சியின் வேகம் பல மடங்கு அதிகரித்துள்ளது. ஆசிரியர் மாணவனுக்கு மகிழ்ச்சியோடு கற்பிக்கிறார். மாணவர்கள் சிலர் பின்தங்கியவர்கள் திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள். முதலில் பொறுமையாக விளக்கிய ஆசிரியர் படிப்படியாக பொறுமையிழந்து கோபிக்கிறார். எத்தனை முறை கேட்டாலும் பொறுமையிழக்காது கற்பிக்கும் ஆசிரியராகக் கணிணி வளர்ந்து வருகிறது வகுப்பிலே மாணவன் தூங்கி வழியும் போது ஆசிரியர் தண்டனை தருகிறார். ஆனால் கணிணி ஆசான் தூங்கவைத்துவிட்டுக் குழப்பமற்ற கலக்கமற்ற மனநிலையில் கற்பிக்கிறார்.

சங்கடமான மையல் முதல் சந்திரப்பயணம் வரை தொழில்நுட்பக் கருவிகளின் ஆட்சி நிலவுவதை மேல் நாடுகளிற் காண்கிறோம். அங்கு மனித இனம் மாபெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. இலத்திரனியல் யுகம் என்ற பேரரசின் வெளி எல்லையில் நாம் இன்று பார்வையாளராக நிற்கிறோம் நாமும் உலகோடு சமமாக வாழ தொழில்நுட்ப வளர்ச்சியை எமதாக்கிக் கொள்ள வேண்டும் இன்னும் ஒரு தலை முறைகளில் மனிதத் தலைமுறை அல்ல, கணிணித் தலைமுறைதான் மனித மூளையின் சிந்தனைக்கு மிக அண்மையான செயற்கை நுண்மதி உருவாகிவிடும் அப்போது போட்டி, பொறாமை, பேராசை முதலியனவுள்ள இயற்கை நுண்மதியை முன்னதுவென்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி ஏற்படும் என்று அறிவுலகம் நம்புகிறது. மனிதன் நோயின்றி , பசியின்றி, பட்டினியின்றி முழுநிறை மனிதனாக அமரநிலைபெற்று வாழமுடியும். தொழில் நுட்பம் வளர வேண்டும். அப்போதுதான் நாமும் உலகக் குடிமக்களாகத் தலைநிமிர்ந்து நிற்கமுடியும்.

ம.ஜெயகவிதா
(ஆசிரியர்)
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

# தேர்ச்சிமட்டக்கற்றலில் 5 " E "
## (Competency based learning)

மாறிவரும் உலகில் மாற்றங்களும் சகஜமானவை கல்விக்களத்தில் முன்னர் நூல்களை மனப்பாடம் செய்து அறிவுமையப் பரீட்சையில் வெற்றியீட்டிய பின்னும் சமூகத்தில் இசைந்து போகமுடியாது வாழ்க்கையில் தோல்விகளை தாங்கிக் கொள்ளமுடியாமல் துவண்டு போனவர்கள் பலர் இதனை நிவர்த்தி செய்ய கல்விமுறையில் புதிய உக்திகளை கொண்ட கலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது கற்றலின்போது மாணவர்கள் பல்வேறு வழிகளில் அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்ளவும் தேடிப் பெற்றவற்றை மனதில்பத்திரப்படுத்திக் கொள்ளவும், அவ்வாறு பத்திரப்படுத்திக் கொண்டவற்றை நடைமுறையில் பயன்படுத்திப்பார்த்து வெற்றி பெறவும் இப்புதிய கலைத்திட்டம் வழி சமைக்கின்றது.

தேர்ச்சிகளை அடிப்படையாகக்(Competency based )கொண்ட மாணவர்மையக் (Child Centred)கற்றல் (learning) செய்முறையினை வெற்றிகரமாக நடாத்த செயற்பாடுகளை(Activity based)அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் படிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன.


* அத்தியாவசிய தேர்ச்சிகள் இனங் காணப்படுகின்றன.
* தேர்ச்சிபெறுவதற்கான தேர்ச்சிமட்டங்கள் இனங்காணப்படுகின்றன.
* தேர்ச்சிமட்டத்தை அடைவதற்கான விடய உள்ளடக்கம்
* அறிவு, மனப்பாங்கு, திறன், ஊடாக தேர்ச்சிமட்டங்களை மாணவர் அடைவதற்கான கணிப்பீடு.(Assessment) , மதிப்பீடு( Evaluation), அவற்றிற்கான நியதிகள் (Norms).
* மாணவரை வழிப்படுத்தும் தேர்ச்சி, நோக்கிய கற்றல் படிமுறைகள் கற்றல் படிமுறைக்கான காலம், தரவிருத்தி உள்ளீடுகள்.

தேர்ச்சி என்பது அறிவு (Knowledge) மனப்பாங்கு (Attitude), திறன்கள் (Skill) ஆளிடைத் தொடர்புகளால் தனியாளைச் செயற்படுத்துதல் ஆகும்.

தேர்ச்சி பெறுவதற்கு நீண்ட காலம் தேவை கற்கும் காலத்தில் ஆசிரியரிடம் இருந்தும், சகபாடிகள் மூலம், கற்றறிந்தோர் மூலமாகவும் இறுதியில் அனுபவங்கள் ஊடாகவும் கற்றுக்கொள்கின்றார்கள். ஆசிரியரிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு எளிதாக தேர்ச்சியை, பல தேர்ச்சி மட்டங்களில் கற்றுத் தேறுகின்றனர். இதற்காகவே செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயற்பாடுகளால் ஒருவர் தேடி ஆராய்ந்து அனுபவங்களூடாக அறிவையும், விளக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக உள்ளது. இவற்றினை கட்டுருவாக்க கற்றற் செயன்முறையினூடாக தேர்ச்சிகளை அடைய உதவும் "5 E Method" என்கின்றோம்.

5 " E " (Method) முறை

| | | | |
|---|---|---|---|
| ❋ $E_1$ ⟶ | Engagement | கற்றல் செய்முறையில் இணைதல் |
| ❋ $E_2$ ⟶ | Exploration | தேடல் |
| ❋ $E_3$ ⟶ | Explanation | விளக்கல் |
| ❋ $E_4$ ⟶ | Elaboration | விரித்தல் |
| ❋ $E_5$ ⟶ | Evaluation | மதிப்பிடல் |



$E_1$ Engagement (இணைதல்)

விடயப்பரப்பை கற்றலுக்காக மாணவரை ஈர்ப்பதற்கும் கற்றலை இலகுபடுத்துவதற்குமாக ஆசிரியரால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாட்டுப் படிமுறைகள் இணைதல் ஆகும்.

இதற்காக ஆசிரியர் பயன்படுத்தக் கூடியவை

பளிச்சிட்டு அட்டைகள் (Flash Card), சுவரொட்டிகள், செய்தித் தலைப்புகள், படங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், கவிதைகள், கலந்துரையாடல்கள்.

$E_2$ Exploration :- தேடல்

தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக மாணவர் குழுமுறையில் தேடலில் ஈடுபடலும் முன்வைக்கப்பட்ட பிரச்சனைக்கு தீர்வு காணலும். (சிந்தித்தல், அனுமானித்தல், ஆராய்தல், தகவல்சேகரித்தல், தீர்மானம் எடுத்தல், பிரச்சனை தீர்த்தல் என்பன மாணவர் பணிகளாகும்.)

$E_3$ Explanation விளக்கல்.

மாணவர் தேடி அறிந்தவற்றை முன்வைத்து விளக்குபவர். ஒரு குழு முன்வைத்தலில் ஈடுபடும்போது ஏனைய குழுக்கள் அவற்றை செவிமடுப்பதும் பின் தமது குழுவின் தேடலை முன்வைத்தலும் வேண்டும்.

$E_4$ Elaboration விரித்தல்

குழு முன் வைத்தலின் போது விடுபட்டுப் போனவையும் ஏனைய குழுக்களின் புதிய தகவல்களும் தெளிவற்றுக் காணப்படுவனவும் ஆசிரியரால் தொகுத்து தெளிவுபடுத்தப்படும்.

$E_5$ Evaluation மதிப்பீடு

குறித்த தேர்ச்சியை மாணவர் அடைந்துள்ளாரா? என்று தீர்மானிக்க ஆசிரியரால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடு ஆகும்.

❊ மாணவர் தேடலில் ஈடுபடும் போது கணிப்பீட்டையும் விளக்கமளித்தல், விபரித்தல், விரித்தலில் ஈடுபடும் போது மதிப்பீட்டினையும் ஆசிரியர் நடத்த வேண்டும்.

இம்முறையின் நன்மைகள் (Advantages)

❊ மாணவர் குழுக்களாக இயங்குவதால் தமக்கிடையே பரிமாறிக்கொள்வதாலும் சகபாடிகளிடமிருந்து (Peer group) கற்றுக் கொள்ளும் இயல்பு அதிகரித்து அறிவு பெருகுகின்றது.

❊ எல்லா மாணவரும் கற்றலில் ஈடுபடும் சந்தர்ப்பம் வாய்க்கின்றது.

❊ பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுவதால் மாணவர் கடமைகளை பொறுப்புடன் ஆற்றும் திறன் வளர்கின்றது.

❊ தலைமைத்துவப் பண்பு அதிகரிக்கின்றது.

❊ தர்க்க அறிவு விரிவடைகின்றது.

❊ புதிய உத்திகள் தோன்ற வழிவகுக்கின்றது.

❊ சுயகற்றலுக்குத் துணை புரிகின்றது.

திருமதி.ராதா-ரவீந்திரன்
ஆசிரியை(ஆங்கிலம்)
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

# உலகமயமாக்கல்

- இ.சு.முரளிதரன் -

உலக மயமாக்கல் என்பது எந்தவொரு தனித்த கருத்தமைவிலும் முடக்கப்பட்டுவிட முடியாத பல் பரிமாணமுள்ள சமூக நிகழ்வின் தொகுதியாகும். சமூக பொருளாதார அரசியல் கலாசார சூழல் விடயங்களில் தேசிய சர்வதேச தொடர்பினை விளக்குவதாக அமைந்துள்ளது. உலக நாடுகளையும் அதில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் செயல் முறையாக உள்ளது. தொழில்நுட்பம், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உலக மயமாக்கலைத் தீவிரப்படுத்தியது. சோவியத் ஒன்றியத்தின் உடைவினால் சர்வதேச அரசியலில் ஏற்பட்ட திருப்பங்கள் உலக பொருளாதார ஒன்றிணைவின் தேவையினைத் தோற்றுவித்தன. தேசிய சந்தைகளை சர்வதேச சந்தைகளில் இணைக்கும் செயல் முறையாக உலக மயமாக்கல் அமைந்துள்ளது. மேலைத்தேய அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிகளான சர்வதேச நாணய நிதியம் (I M F) உலக வங்கி (W B) உலக வாத்தக அமைப்பு (W T O) பல்தேசிய நிறுவனங்கள் இணையம் என்பன உலக மயமாக்கல் செயல் முறையை முன்னெடுத்துச் செல்கின்றன.

உலகமயமாக்கல் பொருளாதாரம் சார்ந்த நிகழ்வாகக் காணப்பட்டாலும், அத்தோடு குறுக்கி விடுவது அந் நிகழ்வின் பன்முகத்தன்மைக்கு எதிராக அமைகின்றது. முதலாளித்துவத்தின் தன்மை பற்றியும் உலகத்தை ஆட்கொள்ள வல்ல மூலதனத்தின் உள்ளார்ந்த ஆற்றல் பற்றியும் 1848 இல் மார்க்சும் ஏங்கல்சும் எழுதிய கம்யூனிஸ்கட்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அரசியலில் பிருத்தானியா வகித்த இடத்தினைக் கைப்பற்றிய அமெரிக்கா. இராணுவரீதியான ஆக்கிரமிப்பை நிகழ்த்தாது வர்த்தகம் அறிவுசார் சொத்துரிமை என்ற பெயரில் நாடுகளைக் கைப்பற்றியத வளரும் நாடுகளில் கல்வி. மருத்துவம், பண்பாடு என்பன யாரால் தீர்மானிக்கப்படுகின்றனஎன்ற வினாவிற்கான விடை இதனை நன்கு புலப்படுத்தும். சமூகவியலாளர்கள் உலகமயமாக்கலை மேலைத்தேயமாக்கல் என்றே (Globalization is westernalization) சுட்டுகிறார்கள். அரபு உலகில் அமெரிக்க மயமாக்கல் என்பதற்கு உரிய இடக்கரடக்கலாகவே உலகமயமாக்கல் அமைந்துள்ளது.

வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் உலகமயமாக்கலானது குறைந்தளவான அனுகூலங்களையும் அதிகளவான பிரதிகூலங்களையும் கொண்டுள்ளது. உலகமயமாக்கலால் பரந்து விரிந்த சந்தை வாய்ப்புக்கள் உருவாகின்றன. பெருமளவு முதலீடுகளையும், தொழில் நுட்ப வசதிகளையும் பெறக்கூடியதாக உள்ளது உள்நாட்டு உற்பத்தியின் தரம் சர்வதேச தரத்திற்கு உயரும் வாய்ப்பு நெருங்கியுள்ளது. பல் தேசிய நிறுவனங்களூடாக வருகின்ற முதலீடுகள் தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்படுத்த முனைகின்ற தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்களால் விரைவான தொடர்பாடல், குறைந்த செலவிலான போக்குவரத்து, கணனிமயமாக்கல் போன்றன நிகழ்கின்றன. பிராந்தியங்கள் கடந்த பண்பாட்டு ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. மூடநம்பிக்கையற்ற விழிப்புணர்வுமிக்க சமுதாய உருவாக்கம் சாத்தியமாகின்றது நுகர்வு வசதி அதிகரிக்க மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது.

உலகமயமாதலின் நன்மைகள் நாடுகளிடையே சமமாகப் பகிரப்படவில்லை வளர்முக நாடுகள் வறுமை, வேலையின்மை, எழுத்தறிவின்மை, போசாக்கின்மை, நோய் என்னும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன "பொருளாதார அபிவிருத்திக் கொள்கையின் நோக்கங்கள்

பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் வறிய சமூகத்தினரை மையப்படுத்தியே இருக்கவேண்டும் ” என்று நோபல் பரிசுபெற்ற இந்தியப் பொருளியல் அறிஞர் அமர்தியாசென் குறிப்பிடுகின்றார். புதிய வர்த்தக கோட்பாடுகளின்படி வலுவுற்ற மேற்குலக நாடுகளுடன் நலிவுற்ற வளர்முக நாடுகள் போட்டி போட்டு முன்னேற வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றன. பல்தேசிய நிறுவனங்கள் தேசிய பொருளாதார உள்ளார்ந்த விரிவாக்கத்திற்கு தடையாக உள்ள சூழலில் உலகச் சந்தையோடு போட்டியிடும் வல்லமையைப் பெறுவது அத்தியாவசியமானது எனினும் “இந்தியா உலகச் சந்தையோடு போட்டி போட்டால்த்தான் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் ” என முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் கூறியது நகை முரணாகவே உள்ளது.

உலக மயமாக்கலால் அதிக வாய்ப்புக்களை செல்வந்த நாடுகளே பெறுகின்றனபல் தேசிய நிறுவனங்களின்(உ-ம் கோக், பெப்சி, சொனி, நஷனல், மைக்ரோ, சொப்ற்) தலைமையகங்கள் செல்வந்த நாடுகளிலேதான் காணப்படுகின்றன. வளர்முக நாடுகளின் வாழ்க்கைத் தரத்திற்கும் செல்வந்த நாடுகளின் வாழ்க்கைத் தரத்திற்கும் இடையேயான இடைவெளி அதிகரித்து வருகின்றது. வளர்முக நாடுகளிலும் அடிமட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் உயர் மட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குமான இடைவெளி அதிகரிக்கின்றது.

1973 இல் செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையேயான வருமான வீதம் 44:1 ஆக இருந்தது. 25 வருடங்கள் கழித்து (1999 - 2000) 77:1 ஆக மாற்றமடைந்துள்ளது என ஐக்கிய நாடுகள் பேரவையின் மானிட வளர்ச்சி அறிக்கை குறிப்பிடுகின்றது.

இயந்திரமயமாக்கலால் ஊழியச் செறிவான தொழில்நுட்பமுறை கைவிடப்படுகின்றது. தடையற்ற வர்த்தகம் வறியவர்களின் தொழில் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றது. சர்வதேச சந்தையில் தக்கன பிழைக்கும் என்ற பண்பு நிலையினைக் காணக்கூடியதாகவுள்ளது இதனால் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சிறுதொழில்உரிமையாளர்கள், சிறு விவசாயிகள் என்போர் நட்டம் அடைகின்றனர்.

1977 இல் இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது உலக தேயிலை வர்த்தகத்தில் பிரதான இடத்தை வகித்த இலங்கை தற்போது கென்யா போன்ற நாடுகளுடன் பலத்த போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது மேலும் குளிர்சாதனப்பெட்டி இறக்குமதியின் பின் உள்நாட்டுக் குளிர்சாதனப்பெட்டி தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உயிரினப் பன்மை அழிதல், எல்லை தாண்டிய மாசுபாடு, உலகம் வெப்பமடைதல், தொழிற்சங்க உரிமை மறுப்பு, தொழிலாளர் பாதுகாப்பின்மை போன்ற பிரதி கூலங்களையும் உலகமயமாக்கல் உற்பத்தி செய்துவிடுகின்றது. சுற்றுச் சூழல் போராளிகள், விலங்கின உரிமைப் போராளிகள், மனித உரிமை ஆதரவாளர்கள். பெண்ணியல்வாதிகள், தொழிற்சங்க தீவிரவாளர்கள் போன்றோர் உலகமயமாக்கலை எதிர்க்க முற்படுகின்றனர். இஸ்லாமிய மற்றும் மத அடிப்படை வாதத்தைக் கொண்ட இனப்பிரிவாலும் அவை சார்ந்த அரசுகளாலும் நெருக்கடிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. நவீகத் துவத்திற்கு எதிரான கருத்தியல் கொண்ட பின்லேடனால்

அமெரிக்காமீது நடத்தப்பட்ட தாக்குதல் (2001 செம்ரெம்பர் 11) உலக மயமாக்கலுக்கு சிறு தடையாக அமைந்தது. இதனால் ஆயுதமேந்திய அரசு சாராதோரின் போராட்ட நியாயங்களை அழிக்க வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. போராட்டம் - தீவிரவாதம் என்பவற்றிற்கிடையேயான எல்லைக் கோடுகளை அமெரிக்கா தன் வல்லாதிக்க பரப்புரைகளால் இல்லாமல் செய்ய முயன்றது ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்கு நேர்ந்த விபத்தினையும் இதனைப் பின்புலமாகக்கொண்டு நோக்குதல் பொருத்தமாக அமையும்.

உலகமயமாக்கலால் நிகழ்கின்ற வருமான சமமின்மை பல்வேறு சமூக விளைவுகளைத் தோற்றுவித்து விடுகின்றது. போதைப்பொருள், விபச்சாரம், ஆயுதபேரம், கறுப்புப்பணம், HIV, பெருக்கம் போன்றன துரித கதியில் வளர்ச்சிபெற உலகமயமாக்கல் காரணமாக அமைகின்றது. தொலைக்காட்சி, செல்லிடத்தொலைபேசி போன்றவற்றினை வாங்க வருமானம் போதாத சந்தர்ப்பத்தில் சட்டவிரோத வருமானங்களை பெறமுயல்கின்றனர். செல்வந்த நாடுகளை நோக்கி நகருகின்றனர். அந்நாடுகளில் சட்ட விரோதமாக குடியேற முயல்கின்றனர்.

கல்வி உலகமயமாக்கப்படுகின்றது என்பதன் பொருள் பில்கேட்சுக்கு பொருத்தமான கல்விமுறையை உருவாக்குவதென்பதாகும். எனவே இது எல்லோருக்கும் கல்வி என்பதை சாத்தியமற்றதாக்கிவிடும் பல்தேசிய நிறுவனங்களின் உற்பத்திப் பாண்டங்களை நுகர்வோனாகவும், அவற்றை சந்தைப்படுத்துவோனாகவும். இன்றைய இளம் மாணவர்களை உருவாக்கும் கல்விமுறையினை வளர்முக நாடுகள் கைக்கொள்கின்றன. இம் முறை ப்ரோயிலர் கோழிவளர்ப்புடன் ஒப்பிடப்படுகின்றது. நடிகர் கமலஹாசனின் அன்பே சிவம் திரைப்படமானது உலக மயமாக்கலை விமர்சிப்பதாக அமைந்துள்ளது. இந்திய விளிம்பு நிலை மக்களின் வாழ்வு எவ்வாறு சுரண்டப்படுகின்றது என்பதை பல்தேசிய நிறுவனத்தின் விளம்பரப்பட இயக்குனருக்கு விளக்குவதாக இத்திரைப்படம் அமைகின்றது. இந்துத்துவ அரசியல் முதலாளிகளையும் கடுமையாக விமர்சிக்கின்றது. அனைத்து மதங்களின் அடிப்படை வாதமான பல்தேசிய நிறுவனங்களின் வருமானத்திற்கு தடைக்கல்லாக அமைவதனையும் தெளிவுபடுத்துகின்றது.

உலகமயமாக்கலானது சூழலில் அளவுகடந்த மாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றது உணவுக்கும் மரத்திற்கும் நார்ப்பொருள்களுக்கும் ஏற்பட்டுள்ள தேவையின் அதிகரிப்பு பூமியின் சூழலமைவுகளின் மீது கடுமையான நிர்ப்பந்தத்தை விளைவித்துள்ளது ஆபிரிக்காவில் சகாராவுக்கு உட்பட்ட நாடுகளில் ஒட்டுண்ணியால் ஏற்படும் நோய்களின் பரவலைத் தடுக்க உலகமயமாக்கலே தடையாக உள்ளது ஒட்டுண்ணிகளை எதிர்க்கும் மருந்துகளின் விலை வளரும் நாடுகளால் வாங்கமுடியாதுள்ளதால் அமெரிக்க ஐக்கியநாடு அவற்றை உற்பத்தி செய்வதையே நிறுத்தி விட்டது.

உலகமயமாக்கலானது மொழிகளின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது, சர்வதேச தொடர்புகளில் சில மொழிகளே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன பல மொழிகள் காலஓட்டத்தில் காணாமற் போய்விடும் 16ம் நூற்றாண்டில் 7 மில்லியன் மக்கள் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிருந்தனர் 1990 இல் 350 மில்லியன் மக்கள் ஆங்கிலத்தை தாய் மொழியாகவும் 400 மில்லியன் மக்கள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் கொண்டிருந்தனர். இசை, நடனம், திரைப்படம். உணவு போன்ற அனைத்திலும் கலப்புச் செய்முறை

தோற்றம் பெற்று வருகின்றது. உள்நாட்டு இசைமீதான ஈடுபாடு அகல, மேற்கத்தேச இசையோடான பற்றுதல் அதிகரித்து வருகின்றது. சிந்தனையற்ற விளம்பரங்களின் ஆதிக்கம் வலுவடைகின்றது இரண்டு வயதுள்ள குழந்தைகள் கூட தாங்கள் பார்க்கும் வணிகச் சின்னங்களுக்கு விசுவாசம் காட்டுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. துரித உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளோ குறைந்த ஊட்டச்சத்துடன் காணப்படுகின்றன.

வாழ்வியல் மாற்றத்தால் "நூடில்ஸ்" அன்றாட உணவுகளில் ஒன்றாகிப் போனது "கீ பேத்டே" "காதலர் தினம்" "டிஸ்கோத்" "பீசா" போன்ற புதிய கலாசார மாற்றங்கள் தமிழர் வாழ்வில் நுழைகின்றன. திரைப்படங்கள் பிரதேச அடையாளங்களைக் கைவிட்டு அமெரிக்கச் சாயலோடு வெளிவரத்தொடங்கியுள்ளன. இந்தியத் திரைப்படங்கள் பல்வேறு விருதுகளைப் பெற்றபோது ஆங்கில மொழிப்படங்களுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் ஒஸ்கார் விருதிற்கே மதிப்பளிக்கும் மனோபாவம் அதிகதரித்து வருகின்றது ஜம்பர், ஜீன்ஸ், ரீசோட் என ஆடைகளில் வேறுபாடு ஏற்படுவதோடு பால்வேறுபாடின்றி அணிகின்ற பண்பாடும் உருவாகியுள்ளது. கருமையான மயிருக்கு நிறம் தீட்டும் மேற்குலக நாகரிகம் நம்மவரிடமும் புகுந்துள்ளது தென்னம் குரும்பைகளில் ஈர்க்குத்தி தேர் செய்து விளையாடிய கிராமத்திற்கு சிறுவர்கள் குஞ்சு ஒழுங்கைகளில் கிரிக்கட் விளையாடிக் கொண்டு இருக்கின்றார்கள் உலகமயமாக்கலானது தடுத்து நிறுத்திவிட முடியாத நிகழ்வாக உருமாறி விட்டதென்பது நிதர்சனமாகும் எனின் வேகத்தடை போட்டேனும் பூமியையும் மனித நேயத்தையும் வாழ்வியல் ஒழுக்க நெறிகளையும் நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்தல் அவசியமான கடமையாகக் கருதப்படுகின்றது.

உசாத்துணை


☆ உலகமயமாக்கல் - மிகச்சுருக்கமான அறிமுகம் அடையாளம் வெளியீடு

☆ அபிவிருத்திப் பொருளியல் இதழ் 3 2002 யாழ்/ பல்கலைக்கழக வெளியீடு

☆ உலகமயமாக்கலும் மார்க்சியமும் அடையாளம் வெளியீடு

☆ பிரவாதம் தொகுப்பு 1 ஜனவரி - ஜீன் 2002 சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு

☆ அரங்கம் - யாழ்/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வெளியீடு

☆ சுட்டுவழி சஞ்சிகை இதழ் 2 2003

☆ தூண்டி இதழ் 7 ஜனவரி - மார்ச் 2004

# சமயங்கள் பற்றி சில பார்வைகள்

-ப.ஜோதீஸ்வரன்-

அறிமுகம்:- மானிட வாழ்வியலில் சமயங்கள் மகத்தான இடம் பெற்று விளங்குகின்றன. வாழ்வியலில் அரசியல், பொருளாதாரம், கல்வி, வரலாறு, தத்துவம் எனும் சிந்தனைகள் எவ்வாறு முதன்மை பெறுகின்றனவோ அவ்வாறே சமயங்களும் முதன்மை பெறுகின்றன. நெறி பிறழாத அறநெறி வாழ்விற்கு சமயங்களே அத்திவாரமாக அமைகின்றன. மானிட இனம் உலகில் பிறந்து வளர்ந்து பாலர் பருவம் தொடக்கம் மரணிக்கும் வரை அவர்கள் வாழ்வில் சமயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மனிதன் மனிதனாக வாழ சமயங்கள் வழி வகைகளை வகுத்து வழங்குகின்றன. இன்று உலகிலே செல்வாக்குச் செலுத்தும் நாம் அறிந்துள்ள அனைத்துச் சமயங்களும் ஒவ்வொரு காலகட்டத்தில் தோற்றம் பெற்றவையாக விளங்குகின்றன. சமயங்களில் அனேகமானவை ஆண்களாலே தோற்றுவிக்கப்பட்டு ஆண்களிற்கு நன்மை வழங்கி ஆண்களிற்கே சிறப்புத் தருபவையாக விளங்குகின்றமை ஆய்விற்குரியது. கடந்த காலங்களிலே காலத்திற்குக் காலம் ஒவ்வொரு சமயம் தோற்றம் பெற்றிருந்தது எதிர்காலத்திலும் பல புதிய சமயங்கள் தோற்றம் பெறுமா? என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

1. சமயம் என்பதன் பொருள் விளக்கம்.

சமயம் என்ற சொல் பொதுவாக "பக்குவப்படுத்தல்" என்பதனையே குறித்து நிற்கின்றது. அதாவது மனிதனை நேரிய வழியில் நெறிபிறழாது வாழச்செய்வதனையே குறிக்கின்றது. சமயம் என்ற சொல் வழி, நெறி, மார்க்கம் என பல பெயர்களினால் தமிழிலே அழைக்கப்படும். பொதுவாக சமயம் என்ற சொல்லாட்சி குறித்த ஒரு நேரத்தில் தோன்றும் உணர்வு நிலையினைக் குறித்து நின்றது.

ஆங்கில மொழியில் சமயம் என்ற சொல்லிற்கு நேர்ப் பொருள் தரும் சொல்லாகப் பயன்படும் "Religion" எனும் சொல் இரு பொருட்களில் விளக்கி நிற்பதனை அவதானிக்க முடிகின்றது.

அவையாவன:-

அ) இறைவன் பற்றிய விளக்கத்தை சில அடையாளங்கள் மூலமும் நிகழ்ச்சிகள் மூலமும் கூறுவது.

ஆ) இறைவனோடு இணைப்பது அல்லது பிணைப்பது

இவ்வாறு விளங்கும் சமயத்திற்கு பலர் பல்வேறுபட்ட விளக்கங்களை வழங்கி உள்ளனர் இவ்வகையில் ஒரு சாரார் மனித நிலைக்கு மேற்பட்ட ஆற்றல்களை விளக்கும் கற்பித்தல் நெறியே சமயம் எனக் கூற, வேறொரு சாரார மனிதனது குறிக்கோளையும் அந்த இலட்சியத்தை அடைவதற்குரிய மார்க்கங்களைக் கூறுவதே சமயம் "எனக் கூற, மற்றுமொரு சாரார்" புலனறிவிற்கு

அப்பாற் பட்டு நிற்கும் இறைசக்தியை கட்புலனாகக் கூடிய வகையில் திருவுருவங்களாக அமைத்து வழிபாடியாற்றுவதே சமயம் "எனக் கூற, பிறிதோர் சாரார்" சமயம் என்பது நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டது அதற்கமைய கொள்கைகளையும் வணக்க முறைகளையும் கொண்டது. எனவும் பலவகையில் பொருள் விளக்கம் வழங்கி இருந்தனர்.

இவ்வாறு பல பொருள் விளக்கம் வழங்கப்பட்ட சமயங்களில் அறமும் அன்புமே முதன்மையான கூறுகளாகக் கொள்ளப்படுகின்றன.

## 2. சமயங்களின் வகைகள்

மனிதருக்கு மட்டுமே மொழிகளைத் தோற்றுவித்து, கற்று, கற்பித்து, பயன்படுத்தி வளர்க்கும் ஆற்றல் காணப்படுகின்றது. மொழிகள் மானிடத்தின் சிறப்பம்சம். மொழி மனித மனம் கடந்த உண்மை. இவ்வாறான மொழியினைப் போலவே சமயங்களும் சிறப்புடையவையாக விளங்குகின்றன. இலக்கியங்களும் இலக்கணங்களும். மொழிகளை எவ்வாறு நிலைப்படுத்த முயல்கின்றனவோ அவ்வாறே சமயங்களும் அனுபூதிமான்களின் திருமுறைகள், கிரியைகள், சடங்குகள், நிறுவனங்கள் என்பவற்றினூடாக சமயங்களை நிலைப்படுத்த முயலுகின்றன எனலாம்.

உலகிலே பல நூற்றுக்கணக்கான சமயங்கள் உள்ளன. அவற்றினை கீழ்வரும் இருவகைகளாக வகுத்து நோக்கிக் கொள்ளலாம்.

1) பழஞ்சமயங்கள் இவை ஆதி சமயங்கள் என்ற பெயரினாலும் அழைக்கப்படுகின்றன.

2) வரலாற்றுச் சமயங்கள் இவை உயர் சமயங்கள் எனவும் ஆன்மீகச் சமயங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

### 2.1. பழஞ்சமயங்கள்

வரலாற்றுச் சமயங்கள் தோற்றம் பெறுவதற்கு முன் தோற்றம் பெற்ற சமயங்களே பழஞ்சமயங்கள் இவை மனித இனம் தோற்றம் பெற்ற காலத்திலேயே தோற்றம் பெற்றுவிட்டன எனலாம் பல இலட்சம் வரலாறுடையவையாகத் திகழும் இப்பழஞ்சமயங்கள் உலகமெங்கும் பல இடங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு தோற்றம் பெற்றன எனலாம்.

ஏறத்தாழ 3000 ஆண்டுகள் வரலாறு உடையவையாக விளங்கும் வரலாற்றுச் சமயங்களுடன் ஒப்பிடும் போது பழஞ்சமயங்கள் மிகநீண்ட வரலாறு உடையவை. பழஞ்சமயங்களின் பரிணாம வளர்ச்சியே வரலாற்றுச் சமயங்கள் எனலாம். பழஞ்சமயங்கள் பல இடங்களிலே வரலாற்றுச் சமயங்களின் உள்ளீடுகளாக உறைந்து விட்டன. ஆயினும் அவற்றின் அம்சங்கள் இன்றும் பல இடங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன.பழஞ்சமயங்கள் இன்றும் உயிரோடு தனித்து விளங்கும் பல இடங்கள் உள்ளன.

பழஞ் சமயங்கள் இன்று எம்மிடையே காணப்படும் கிராமிய வழிபாட்டு முறைக்கு ஒத்தவையாக விளங்குகின்றன. நம்பிக்கைகள், வழிபாட்டுப் பழக்க வழக்கங்களும் ஒற்றுமைப் பாடுடையவையாகவே விளங்குகின்றன. பழஞ்சமயங்ளை மூடக்கொள்கையுடையவை, காட்டுமிராண்டித்தனமானவை என கருதப்படும் தன்மை இன்று மாறிவரும் போக்கினைக்

காணமுடிகின்றது. வரலாற்றுச் சமயங்களிற்கு வழங்கப்படும் உயர் சமயங்கள், ஆன்மீகச் சமயங்கள் எனும் பெயர்கள் பழஞ்சமயங்களைக் குறைப்படுத்துவனவாகவே அமைகின்றன. ஆயினும் இவை பொருத்தப்பாடுடைய கருத்து அல்ல.

பழஞ் சமயங்களின் சிறப்புக்கள் இன்று பரவலாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. உடமையற்ற, ஏற்றத்தாழ்வற்ற, ஆண் ஆதிக்கமற்ற பெண்களை சமமாக மதிக்கின்ற சுதந்திரமான பழஞ்சமயங்கள் எமக்கு பல வழிகளிலும் வழிகாட்டுகின்றன என்று காரல் மாக்ஸ், சிக்மண்ட் புராய்ட், ரூஸோ போன்ற பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பழஞ்சமயங்களில் இறப்பு, தோல்வி, அவமானம், ஏமாற்றம், விரக்தி, நோய், பிணி, போன்ற துன்பங்களை நீக்க வேண்டியும் அழகு, இன்பம், உண்மை, வெற்றி, போன்ற நன்மைகளை நாடியும் பிரார்த்தித்தல் சிறப்பிடம் பெற்றன.

பழஞ்சமய வழிபாட்டு முறைகளில் இயற்கை வழிபாடு காணப்பட்டது. தம்மால் கட்டுப்படுத்த முடியாத சக்திகளை வழிபட்டனர். குறியீடு வழிபாடு சிறப்பிடம் பெற்றது.அதாவது ஆறு,கடல், சூரியன், சந்திரன், தீ, காற்று, மழை, உயிரினங்கள், தாவரங்கள் முதலானவை குறியீடுகளாக வழிபட்டனர். ஆடல்,பாடல்,சடங்குகள்,மரபுகள்,வழிபாட்டில் காணப்பட்டன. தாய்த் தெய்வ வழிபாடு சிறப்பிடம் பெற்றிருந்தது. படங்கள் வரைந்தும் உருவங்கள் சமைத்தும் வழிபட்டு வந்தனர். சில குறிப்பிட்ட பொருட்களில் இறைசக்தி அல்லது கடவுள் உறைவதாகவும் நம்பிக்கை கொண்டு வழிபட்டனர்.

பழஞ்சமயங்களின் குடும்ப தெய்வ வழிபாடு, குழுத்தெய்வ வழிபாடு, ஆவிவழிபாடு போன்ற வழிபாடுகளும் காணப்படுகின்றன.குடும்ப தெய்வ வழிபாட்டு முறையில் மரணமடைந்த முன்னோரில் ஒருவரையோ சிலரையோ ஒரு குடும்பத்தினர் குறியீட்டால் வழிபடும் மரபு உள்ளது. இது இன்று எங்களின் மத்தியிலும் மரணித்தோரின் படங்களை வைத்து வழிபடும் முறையின் தொன்மையையே புலப்படுத்தி நிற்கின்றது. அவ்வாறே இரத்த உறவுடையோர், கூட்டாக வழிபடுதல். குழுத் தெய்வ வழிபாடாக" கருதப்பட்டது.குழுத்தெய்வ வழிபாடே குடும்பத் தெய்வ வழிபாட்டினை விட பழமையானது.

ஒருவரது மரணத்தின் பின்னும் வாழ்வு தொடருகின்றது என்ற நம்பிக்கை மனிதருக்கு நம்பிக்கையும் ஆறுதலும் அளிப்பதாக இருந்தது. இதனால் ஆவி வழிபாடு பழஞ்சமயங்களின் முக்கியமான பண்பாக காணப்பட்டது. இவ்வழிபாடு பிற்கால நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருக்கலாம். ஆவிகளைப் பற்றிய நம்பிக்கையே பிற்காலத்தில் பேய், பிசாசு, தேவதை, தேவர்களை பற்றிய நம்பிக்கைகளான பரிணமித்திருந்தன.

பழஞ்சமயங்களில் தவறான வழிபாட்டு முறைகளும் மூடநம்பிக்கைகளும் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. இதில் நரபலியிட்டு வழிபடும் முறை முக்கியமானது ஆயினும் இது எல்லா இடங்களிலும் இருந்தது எனக் கூறமுடியாது. சாதி உட்பிரிவுகளுக்கெனத் தனியான தெய்வங்களும் பழஞ்சமயங்களில் வழிபட்டன.

பழஞ் சமயங்களானவை வரலாற்று சமயங்களைப் போலன்றி நிலை வடிவம் கொள்வதில் அதிக அக்கறை கொண்டிருக்கவில்லை. பழஞ்சமயங்களைக்கடைப்பிடிக்கும் மக்களிடையே ஓரளவிற்கு போட்டிகள், பூசல்கள், பகைமைகள் காணப்பட்டிருந்தாலும் இன்று நாம் கடைப்பிடிக்கும் சமயங்களைப் போலன்றி பொதுவாக சமய அடிப்படையிலான முரண்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 2.2. வரலாற்றுச் சமயங்கள்

உலகிலே தோற்றம் பெற்ற பழஞ்சமயங்களிற்குப் பின்பு தோற்றம் பெற்றவையே வரலாற்றுச்சமயங்கள் எனலாம். இச்சமயங்களிற்கு வழங்கப்பட்ட உயர் சமயங்கள் ஆன்மீகச் சமயங்கள் எனும் வேறு பெயர்கள் பழஞ்சமயங்களை இழிவு படுத்துவது போலவும் வரலாற்றுச் சமயங்களை இழிவு படுத்துவது போலவும் அமைவு பெற்றிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு விளங்கும் வரலாற்றுச்சமயங்கள் வரலாற்றைக் கொண்டவை. இவற்றில் இந்து சமயம், கிறிஸ்துவம், இஸ்லாமியம், பௌத்தம், சமணம், சீக்கியம், யூதசமயம், பார்சி சமயம், கன்பூசியம், தாவோ சமயம்,ஷிண்டோ சமயம் போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம். இவை தவிர இன்று சமயம் என்ற அங்கீகாரம் பெற பல புதிய போக்குகள் முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 2.2.1 இந்து சமயம்

மனித நாகரீகத்தின் தொடர்ச்சியான மிகநீண்ட வரலாறுடையது இந்து சமயம், வைதீக சமயமாகிய இச்சமயம் சிந்து சமவெளி நாகரிகத்திற்குப் பின் ஆரியர் வருகைக்குப் பின் முகிழ்ந்தது எனக் கருதலாம். இது மிகப் புராதனமான சமயமாக விளங்கிய போதிலும் பல புதிய துணிச்சலான வளர்ச்சிகளைப் பெற்று என்றும் இளமைத்துடிப்புடன் திகழ்கின்றது இந்த சமயமானது பழஞ்சமயங்கள் முதல் அனைத்து சமயப் போக்குகளையும் தன்னகத்தே கொண்டு சமய ஒருமைப்பாடுடைய மதமாகவும் திகழ்கின்றது.

கால வெள்ளம் கொண்டுவந்து சேர்த்திடும் மூட நம்பிக்கைகள் முதலான மாசுக்களை அகற்றிவிடும் ஜீவ ஆற்றல் இந்து சமயத்திற்கே உரியது. இச்சமயத்தின் தோற்றத்திற்கு தனி ஒருவரோ. ஒரு மறை நூலோ காரணமில்லை பலரிஷிகள், ஞானிகள் என்போரின் தொடர் முயற்சியினாலும் வேதங்கள், உபநிடதங்கள் பகவத்கீதை ஆகியவற்றாலும் இந்து சமயம் உருவாகிறது எனலாம்.

இந்து சமயம் தீமையிலிருந்து நன்மைக்கு, துன்பத்திலிருந்து, இன்பத்திற்கு, இருளிலிருந்து ஒளிக்கு, பொய்மையிலிருந்து உண்மைக்கு, வெறுப்பிலிருந்து அன்பிற்கு சாவிலிருந்து நித்திய வாழ்விற்கு வழிகாட்டும் இடைவிடாத தொடர் பரிணாமமாக விளங்குகின்றது. இச்சமயமானது இறையியல், வாழ்வியல், சமூகம், வரலாறு, கலை, தத்துவம், அறவியல், சோதிடம், வானியல், அரசியல், பொருளாதாரம், கணிதவியல், மருத்துவவியல் போன்ற பல உயர் அம்சங்களை தனது நாகரிகத்தில் உள்ளடக்கிக் கொண்டுள்ளது அதன் சிறப்பு என்றே கூறலாம்.

### 2.2.2. கிறிஸ்தவ சமயம்

பாரெங்கும் பரவியுள்ளதும் பாரினிலே அதிகளவிலான மக்களினாலும் பின்பற்றப்படும் சமயமாகவும் விளங்குகின்றது. இது கி.பி. முதலாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்று கிறிஸ்தவம் ஒருவகையில் வலுவான நிறுவன அமைப்பு ரீதியானது. விவிலியம்(பைபிள்) எனும் ஒரு திருமறையைக் கொண்டது. ஓர் இறைவனை மையமாக கொண்டது. ஆயினும் இச்சமயத்தில் உலகத்துப் பண்பாடுகள் அனைத்தும் ஒருங்கே சங்கமித்துள்ளன எனலாம். இதனால் அது “பன்மியக்காடாக” காட்சி தருகின்றது.

கிறிஸ்தவ சமயத்தின் பிரதான அம்சங்களினை அதன் திருமறையாகிய விவிலியத்தினூடாக அறியலாம். விவிலியத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்பவையே. “ஏற்பாடு” என்றால் “ஒப்பந்தம்” என்பதாகும். பழைய ஏற்பாடு என்பது இஸ்தேல் மக்களோடு கடவுள் சீனாய் மலையில் மோசே வழியாகச் செய்த ஒப்பந்தம் எனவும். புதிய ஏற்பாடு இயேசுகிறிஸ்து வழியாக இறைவன் செய்த ஒப்பந்தம் எனவும் கருதப்படுகின்றது. இவ்வாறு விளங்கும் கடவுளின் திருவார்த்தையாகிய திருமறை கிறிஸ்தவரின் ஆன்மீக உணர்வாக விளங்குகின்றது.

கிறிஸ்தவ சமயத்தின் வரலாற்றில் “திருச்சபை” பிரதான இடம் வகித்திருந்தது திருச்சபை என்பது ஆலயம், இறைவனை வழிபடும் மக்கள் கூட்டம் என்ற இரண்டையும் குறிக்கின்றது. இவை இரண்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. ஆலயம் என்பது இறைநம்பிக்கை உள்ளவர்கள் ஒரு குடும்பத்தினராக வழிபடுவதற்கு தவறாமல் சந்திக்கும் ஒரு இடம் எனலாம். அவ்வாறே திருச்சபை மக்கள் கூட்டம் என்பது கிறிஸ்துவின் உடலாகும். எனவே தான் ஆலயம் கிறிஸ்துவை குறிக்கும் விதமாக சிலுவையின் வடிவில் கட்டப்பட்டுள்ளது. மானிடம் தனது ஒன்றிப்பை, மீட்பைக் கண்டறிந்த இடமே இத்திருச்சபை. அது உலகம் இறைவனோடும், மானிடரோடும் ஒப்புரவாகும் இடம் அது இவ்வுலகிலே “கிறிஸ்துவின் சிலுவை எனும் துடுப்பு பரிசுத்த ஆவி எனும் ஆற்றல் ஆகியவற்றின் துணை கொண்டு பயணம் செய்யும் ஒரு படகு” எனக் கூறுவது மிகையாகாது.

### 2.2.3. இஸ்லாமிய சமயம்

உலகிலுள்ள சமயங்களில் ஒன்றாக விளங்கும் இஸ்லாமியம் கி.பி ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோற்றம் பெற்று இன்று உலகில் பல்வேறான பாகங்களிலும் வியாபித்துள்ள மதமாக விளங்குகின்றது. இஸ்லாம் எனும் அரிய பொக்கிசம் ஏனைய சமயத்தவர்களுக்கு ஒரு மறை பொருளாகவே இருந்து விட்டது. இஸ்லாமியத்தின் பரந்து விரிந்த ஆழ்ந்த இறையியல் வளங்களை இஸ்லாமியங்களில் பலர் அறியாத நிலை உண்டு இஸ்லாம் எனும் அற்புதச் சோலையின், ஆழ்கடலின்,பரந்த முடிவற்ற வானவெளியில் திருமறை நூலாக “திருக்குர்ஆன்” திகழுகின்றது.

“இவ்வுலகம் எல்லாவற்றினையும் படைத்துப் பரிபாலனம் செய்பவன் இறைவனே” என்ற கருத்து காலம் காலமாக இவ்வுலகில் நிலவி வந்தாலும் இறைவன் பற்றிய கருத்துத் தெளிவும், கோட்பாடுகளும் பலவாறாக பல்வேறான காலகட்டங்களில் எடுத்துக் காட்டப்பட்டே

வந்துள்ளன. இவ்வகையில் உலக சமய வரலாற்றிலே கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பல நிகழ்ந்தன. ஆன்மீக வாழ்விற்கும், உலகியல் வாழ்விற்குமிடையே மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த இத்தகைய சூழலிலே இஸ்லாமிய சமயம் ஆன்மீக வாழ்வினையும் உலகியல் வாழ்வினையும் ஒருங்கே இணைத்து வழிகாட்டும் சமயமாக கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இவ்வுலகிலே தோற்றம் பெற்றது எனலாம். அதாவது சமயநெறியையும் மனித சமூக நெறியையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தி வழிப்படுத்தி இறைவனால் உருவாக்கப்பட்டதே இஸ்லாமிய சமயம் எனலாம்.

இவ்வுலகிலே எவ்வாறு ஒவ்வொரு சமயமும் அந்தந்தக் காலங்களிலே தோன்றிய இறைவனுடைய திருத்தூதர்களால் அறிமுகம் செய்யப்பட்டதோ அவ்வாறே இஸ்லாமிய சமயமும் பல்வேறு காலங்களிலே இவ்வுலகில் அறிமுகம் செய்யப்பட்டது. கடைசியில் கி.பி 631ம் ஆண்டில் முழுமையுடைய சமயமாக இஸ்லாம் அமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி எல்லாம் வல்ல இறைவனாகிய "அல்லா" வின் கடைசித்தூதர் பெருமானார் "நபிகள் நாயகம்" அவர்களது காலத்தில் நடந்தேறி வரலாற்று சம்பவங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இவ்வாறு விளங்கும் இஸ்லாமிய சமயத்தின் நோக்கம் மனித மேம்பாடேயாகும். இந்த மேம்பாட்டிற்கான வழிமுறைகளையே இஸ்லாமிய சமயம் வாழ்க்கை நெறி முறைகளாக எடுத்து இயம்புகின்றது.

### 2.2.4 சமண சமணம்.

பாரத தேசம் உபகரித்த வரலாற்றுச் சமயங்களில் சமணசமயமும் ஒன்று இது தொன்மையான சமயம். இது சாஸ்திரிய நம்பிக்கை அற்ற வேதத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு சமயமாக விளங்குவதனால் அவைதீகநெறி என்றுஞ் சொல்லப்படுகின்றது. பௌத்த சமயத்தைப் போன்று இதுவும் சத்திரிய இயக்கம் சார்ந்தது.

சமணமதமானது சைனமதம், ஜீனமதம், நிகண்டமதம், ஆருகதமதம், சியாத்வாதமதம், அநேகாற்றவாதமதம் போன்ற பெயர்களினாலும் குறிப்பிடப்படுகின்றது. "சீரமணர்" என்ற சமஸ்கிருதச் சொல்லே தமிழில் சமணர் என வழங்கப்படுகின்றது. "சிரமணர்" என்பதன் பொருள் "துறவினள" என்பதாகும். சமண, சமயத்தைக் கடைப்பிடிப்போர் சைனர்/ ஜீனர், ஆருகதர், அமணர், நிக்கந்தர், பிண்டியர், என பலவாறாக அழைக்கப்படுவர்.

சமணர்கள் தமது சமயத்தை மிக நீண்டபாரம்பரியத்தைக் கொண்டது என்பர். ரிஷபதேவர் தொடக்கம் மகாவீரர் வரை இருபத்துநான்கு தீர்த்தங்கரர் அவ்வப்போது தோற்றம் பெற்று சமண சமயக் கொள்கைகளை எடுத்துக்கூறியதாகக் கருதப்படுகின்றது. தீர்த்தங்கரர்கள் என்றால் "புதிய வழியைக் கண்டவர்கள்" என்பதே பொருள். இவர்கள் "ஜீனர்கள்" எனவும் அழைக்கப்படுவர். ஜீனர்கள் எனும் சொல் வெற்றியாளர்கள், புலன்களை வென்றவர்கள், தன்னை அடக்கி ஆண்டு உயர்நிலை அடைந்தவர்கள், புதிய ஒளியைக் காட்டுபவர்கள் என பல பொருள் பட்டு நிற்கின்றது.

இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் முதலாவது தீர்த்தங்கரராக விளங்குபவர் ரிஷபதேவர்" என்று விஷ்ணு புராணம், பாகவத புராணம் என்பவற்றிலே குறிப்புக்கள் உள்ளன.

தீர்த்தங்கரர்களில் கடைசித் தீர்த்தங்கரர்களாகிய பார்சுவநாதர், மகாவீரர், எனும் இருவரைப்பற்றியே ஓரளவு வரலாற்றுத் தவகவல்கள் கிடைத்துள்ளன இவர்களில்மகாவீரர்கி.மு. 540 இல் வாழ்ந்தவராகவும் மகாவீரருக்கு 200 வருடங்களிற்கு முன்பு பார்சுவநாதர் வாழ்ந்ததாகவும் கருதப்படுகின்றது.

அகிம்சை, துறவறம், ஒழுக்கம் என்பவற்றினைக் கடைப்பிடிப்பதன் மூலம் பூரண ஞானத்தினைப் பெற்றுப் பிறப்பிலிருந்து விடுபடலாம் என்று கூறும் சமண சமயம் "கடவுள் இல்லை" என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. சமணம் ஆன்மாவையே மூலதத்துவமாகக் கொள்ளுகின்றது. இன்பத்தையே அனைவரும் விரும்புவர். துன்பத்தை யார் நாடுவர்? ஆன்மாதான் அதனை நாடும் அந்த ஆன்மா விடுதலையே சமணத்தின் அடிப்படையான குறிக்கோள் எனவே சமணமானது. அற ஒழுக்கச் சமய முறையாகும். மேலும் சமணத்தின் கதவு அனைவருக்கும் திறந்தே உள்ளது. அதில் சாதி, சமய, மொழி வேறுபாடு கிடையாது. இந்த உலகமே நிஜமானது எனக் கூறும் சமணம் இவ்வுலக பன்மிய இருப்பைப்பற்றி விளக்குகின்றது. சமணத்தின் அடித்தளம் பன்மிய அணுகு முறையே.

### 2.2.5 பௌத்தசமயம்

இந்திய தேசத்தில் தோற்றம் பெற்ற அவைதீக மத நெறிகளில் பௌத்தசமயமும் ஒன்று கி.மு.563 தொடக்கம் கி.மு. 483 வரை வாழ்ந்தவரான கௌதம புத்தர் என்பவரது போதனைகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற சமயமே பௌத்தசமயம் இம்மத நெறி மூவகைப் பிரமாணங்களை ஏற்றுக் கொள்கை வகுத்ததனால் கடவுள் கொள்கையினை மறுப்பதனால் பௌத்தம் "நிரீஈஸ்வரவாதம்" என அழைக்கப்படுகின்றது.

பிறப்பதும் துன்பம், வாழ்வதும் துன்பம் இறப்பதும் துன்பம் எனக்கூறி துறவினை வலியுறுத்தும். பௌத்தம் எந்த ஒரு பொருளும் உண்மைப் பொருள் அல்ல என்பதனால் "சூனியவாதம்" பேசுகின்றது. மேலும் அனைத்துப் பொருட்களும் கணத்துக்குக் கணம் மாறுகின்றன எனக் கூறி கணபங்க வாதம் பேசுகின்றது பௌத்தத்தில் மாற்றம் என்பது அழிவினையே குறித்து நிற்கின்றது.

பௌத்தத்தின் திருமறைகளாக "திரிபிடகம்" விளங்குகின்றது. இந்துமதத்தில் வேதங்கள் எப்படியோ அவ்வாறே பௌத்த மதத்தின் "பிடகங்கள்" விளங்குகின்றன புத்தபகவான் தனது கையால் எதுவுமே எழுதி வைக்கவில்லை அவர் போதனைகளை அவரது சீடர்கள் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டு பின்பு எழுதினார்கள். இவ்வாறு எழுதிய ஏடுகளை அவர்கள் பெட்டிகளில் வைத்துக் காத்து வந்தமையால் அவை "பிடகங்கள்" எனப்பட்டன "பிடகம்" என்பதன் பொருள் "பெட்டி" என்பதாகும் பிடகம் மூன்றாகும் அவையே "திரிபிடகம்" எனப்படும் அவையாவன வினய பிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம் என்பவையே.

கௌதம புத்தரது நிர்வாணத்திற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு பௌத்த தருமம் பல கிளைகளாகப் பிரிவடைந்தது. அவைகளில் ஹீனயான பௌத்தம், மகாயான பௌத்தம் என்ற இரண்டும் பிரதானமானவை.

கீனயான பிரிவைச் சேர்ந்தவர்கள் வாசனைகள், நல்லவை அல்லாதவை, என இருவகையாக இருக்கின்றன என நம்புவதோடு துறவை வலியுறுத்துகின்றவை.

மகாயான பௌத்தரோ தீய வாசனைகளை ஒழிந்து நல்ல வாசனைகளை வளர்க்க வேண்டும் என்றார்கள். தீய வாசனைகள் ஒளிந்து விடுகையில் மனிதன் புத்தனாகிவிடுகின்றான் என்பது இவர்களது நம்பிக்கை புத்தனானபிறகும் மற்ற எல்லோரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கையில் தமக்குமட்டும் சுகம் எதற்கு என்ற எண்ணத்தினால் இவர்கள் நிர்வாணத்தை விரும்புவதில்லை.

ஆரம்ப காலங்களில் பௌத்தம் இந்து மதத்தில் இருந்து மாறுபாடுடைய மதமாக விளங்கிய போதிலும் காலப்போக்கில் அது இந்து மதக் கொள்கைகள் பலவற்றை தன்னகத்தே ஏற்றுக் கொண்டு இந்துமதத்துடன் ஒற்றுமைப் பாடுடைய மதமாக விளங்குவதனை இன்று காண முடிகின்றன.

**2.2.6 சீக்கிய சமயம்**

சீக்கியர்களின் சமயமே சீக்கிய சமயம் எனலாம் இச்சமயம் 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் "பஞ்சாப்" பிரதேசத்தில் உருவான சமயம் எனலாம் இந்துசமயம் - இஸ்லாமிய சமயம் எனும் இரண்டு சமய நெறிகளிலும் கூறப்படும் விழுமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே சீக்கிய சமயம்.

சீக்கிய சமயத்தின் முதல்வர் "குருநாதக்" என்பவராவார் குருநாதக் தொடக்கம் குருகோவிந்தர் வரை பத்து குருமார்கள் சீக்கிய சமயங்களின் தலைவர்கள் ஆவார். அதாவது சீக்கிய சமயம் கி.பி. 1469-1539 வரை வாழ "குருநாதக்" என்பவரின் சிந்தனையின் விழைவால் உருவாக்கல் பட்டு அவருக்கு பின்பு வழிவழியாக வந்த ஒன்பது குருமார்களின் உபதேச மொழியினாலும் ஞான உரைகளினாலும் பூரணத்துவம் பெற்ற மதமாகத் திகழுகின்றது.

சீக்கியர் எனும் சொல்லிற்கு "சீடர்கள்" என்பதே பொருள் இதனாலேயே சீக்கிய சமயத்தை மகாகவி பாரதியார் "சீடர்மார்க்கம்" எனக்கூறுவார். பௌத்தத்தை தந்த கௌத புத்தருக்கும் சீக்கியத்தைத் தந்த குருநாவுக்கும் சில வியக்கத்தக்க ஒற்றுமைகள் உண்டு இடையிலேயே உருதுக்கவிஞர் இக்பால் அவர்கள் இந்தியதேசம் உற்பத்தி செய்த அற்புதமான இரண்டு ஞானிகள் கௌதபுத்தருக்கும் குருநாவுக்கு என்பவர்களே எனக்குறிப்பிட்டுள்ளார்.

சீக்கிய சமயத்தின் புனிதநூல் "ஸ்ரீகுரு கிரந்த சாகிப்" என்பதாகும் சீக்கியர்களின் மூலநூலாகிய இதனையே ஆதிகிரந்தம்/ குருகிரந்தம் என்ற பெயரினால் அழைப்பர். "வாழும்குரு" என மதிக்கப்படும் இந்நூலை சீக்கியர் நாளாந்தம் வழிபடுவர்.

சீக்கியம் ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தும் சமயமாகும் சீக்கியத்தின் அடிப்படை இந்து இறையென்றோ இஸ்லாமிய இறை என்றோ வேறுபட்ட இறைவன் இல்லை என்பதே இதனாலேயே குருநாதன் "பாதைகள் இரண்டாயினும் இறைவன் ஒன்றென அறி" எனக் கூறியிருந்தார் சீக்கியர் தமது வழிபாட்டுத் தலங்களை இன்று "குருத்துவாராக்கள்" என்றே அழைப்பர் இதன் பொருள் "குருதங்குமிடம்" என்பதாகும் குருத்துவாராக்களில் எந்தச்சமயக்கடவுளின் உருவமும் இடம் பெறுவதில்லை ஓர் விசாலமான அறையின் நடுப் பகுதியில் "குருகிரந்தம்" என்ற புனிதநூல் வைக்கப்பட்டிருக்கும் சீக்கியரின் தலைமைக் "குருத்துவாரா" இன்றைய பஞ்சாப் மானிலத்தில் அமிர்தசரஸ் நகரத்தில் விளங்குகின்றது. அதுவே "பொற்கோயில்" என வழங்கப்படுகின்றது. மிகவும் அகன்ற சதுர வடிவான ஒரு குழத்தின் நடுவில் இப் பொற்கோயில் அமைந்துள்ளது. சீக்கியர் தமது குருத்துவாராக்களில் "குருகிரந்தம்" எனும் புனித நூலில் உள்ள சீக்கியக் குருமார்களின் பாடல்களை மிக உருக்கமாக இசையோடு பாடிமகிழுவர் இதுவே சீக்கியரின் வழிபாட்டு முறையாகவும் அமைகின்றது.

முடிவுரை

மானிட வாழ்வியலை நெறிப்படுத்துவதற்கு உலகில் பல்வேறான சமயங்கள் பரிணாமவளர்ச்சி பெற்றுள்ளன. ஒவ்வொரு சமய நெறியும் பல்வேறான வாழ்க்கை நெறிகளைப் புகட்டுகின்றன. சமயங்கள் தோன்றிய பல்வேறான காலச் சூழலுக்கேற்ப அவைகள் போதிக்கும் நெறிமுறைகளும் சான்று பகருகின்றன சமயங்கள் ஒவ்வொன்றும் தத்தமெக்கென தனித்துவத்தையும், பல்வேறான வாழ்வியல் நெறிகள்அடங்கிய பொதுத்தன்மைகளையும் பெற்றுள்ளன. சமயங்களின் வரலாற்றை அறியும் போது இந்நிஜத்தன்மை நன்கு புலப்படும். இவ்வகையிலே மானிட வரலாற்றில் காலத்தால் முன் பின்னாகத்தோன்றி உலக மக்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்த சமயங்களில் ஆதி சமயங்கள் எனும் பழஞ்சமயங்களும் மற்றும் வரலாற்றுச் சமயங்கள் என்று சிறப்பிக்கப்படும் .இந்து சமயம், நமணசமயம், பௌத்த சமயம், சீக்கியசமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாமிய சமயம், மற்றும் கி.மு. மேற்கு ஆசியாவில் தோற்றம் பெற்ற யூதசமயம் கி.மு 6ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற பேர்ச்சியாசவில் (ஈரான்) தோற்றம் பெற்ற பார்ச்சி சமயம், சீனாவில் தோற்றம் பெற்ற கன்பூசிய சமயம், தாவோயிச்சமயம், ஜப்பான் தேசத்தில் தோற்றம் பெற்ற ஷிண்டோசமயம், பேர்சியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதும் இஸ்லாமிய சமயத்தின் புதிய மறுமலர்ச்சி எனப்பாராட்டப்பட்டதுமான பகாய் சமயம் போன்ற பல சமயங்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

# கலைகளில் சிறந்தது சங்கீதமே அதை வளர்த்திடல் சந்தோசமே

இனிமை தரும் இசையின் எல்லையை யார் கண்டார்? மூலம் முடிவு என்னும் முறையை அறிந்திட முயற்சி செய்வோர்க்கெல்லாம் முழுமையாகத் தோன்றுவது இசை. இசை வடிவானவன் இறைவன். இறைவனும் அசரீரியே ஒலிக்கும் உருவம் இல்லை காற்றிலே கரைந்து காதிலே புகுந்து தேனென ஒலிப்பது இசைஞான சக்தியாகிய கல்வியின் தெய்வம் சரஸ்வதிதேவியின் கையிலே வீணையும், பரமாத்மாவாகிய கிருஷ்ணரின் கையிலே வேங்குழலும், சிவபிரானின் கையிலே உடுகக்கயும், நந்தியின் கையிலே மிருதங்கமும், நாரதர் தும்புருவும் (தம்புரா) இப்படி இசையின் சிறப்பினை யாரும் அளவிடமுடியாது. அளவுகோலும் இல்லை. இறைவனின் அடிமுடி தேடிய மாதிரி, இசையும் அடிமுடி இல்லாதது.

சுருதி மாதாவும் லயபிதாவும் சேர்ந்து உருவாக்கிய இசைநாக ஒலி வடிவம் காற்றிலே பரவி காற்று புகுமிடமெல்லாம் சென்று பரவசமூட்டுகின்றது. இத்தகைய சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு கீதம், வாததியம், நிருத்தியம் என்பனவும் தோன்றி சிறப்புற வளர்ந்துள்ளது. இக்கலை ஒருவருக்கு(இயற்கையிலேயே)பிறக்கும் போதே அமைய வேண்டும். அல்லது பரம்பரையாகவோ, சூழல் வசதிகளைப் பொறுத்தோ அமையும்.இப்படி அமைவது பிறவிப்பயனே. மொழி, கலாச்சாரஎ வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு இசை வெவ்வேறு இசையாக அமைந்தாலும் இசையின் நோக்கம் ஒன்றே. எல்லா இசைகளும் மக்கள் தம் வாழ்க்கையின் தேவைக்கு ஏற்றவாறு நவரச உணர்வுகளை ஏற்படுத்தி மனதிற்கு சந்தோசத்தை ஏற்படுத்ததுகின்றன. எல்லா மதங்களிலும் ஆன்மீகத்தை மேம்படுத்த இணைந்து செல்கின்றது. இசை. பிறக்கும் போது ஒலியுடன் பிறக்கும் குழந்தை தனது வளர்ச்சியிலும் அதாவது தனது முடிவுகாலம் வரை ஏதோவொரு விதத்தில் இசையுடன் இணைந்து வாழ்கின்றது. எந்தமொழி பேசினாலும் அம்மொழியும் இசையும் இணையும் போது மனதில் ஏதோ ஒரு உணர்ச்சியினை ஏற்படுத்துவது சங்கீதமே. மக்களிடையே எல்லா சமய சம்மந்தமான, கலாச்சார சம்மந்தமான நிகழ்ச்சிகளிலும், இசையும், இசையோடு சேர்ந்து இயல் நாடகம் ஆகியனவும் கலந்து மனதிற்கு ஏற்றவாறு சுகத்தினைக் கொடுக்கின்றது இசை.

இத்தகு சிறந்த இசையை உலகம் கேட்கின்றது, பார்க்கின்றது, ரசிக்கிறது, சந்தோசப்படுகிறது. ஆனால் அதனை வளர்ச்சி குறையாமல் மேன்மேலும் வளர்க்க முன்வர வேண்டும். இசைஞானம் பெற்றவர்கள் புண்ணியவான்கள் என்பது ஆன்றோர் கருத்து எமது ஆன்றோர் கற்றுக் காப்பாற்றி எல்லோருக்கம் வழங்கிய இசை வடிவங்களை இன்றுள்ள இசைக் கலைஞர்களும் உணர்ந்து கற்று நாம் தெரிந்தவற்றை இனிவரும் நம் சிறாருக்கும் உவந்து ஊட்ட வேண்டும். அப்போது தான் கலைஞன் உண்மையான கலைஞன் ஆகின்றான்.

குருகுல வாசத்தில் கற்று வளர்ந்த கலைஞர்களுக்கும், இன்றைய மாணவர்களாக இருந்து கற்று வருபவர்களுக்கும் நியை வேறுபாடுகள் உள்ளன. எல்லோருக்கும் கலைஞானம் இல்லாவிட்டாலுமஇறைவனால் உருவாக்கப்படும் உயிர்களில் எல்லாம் 01% மாவது இசைக்கலை இல்லை என்று சொல்லமுடியாது. கேட்கவோ, ரசிக்கவோ, உணரவோ முடியும். பறவைகளும் பாடுகின்றன, ஆடுகின்றன தமது உணர்ச்சிகளை ஒலி மூலம் வெளியிடுகின்றன. விலங்குகளும் கேட்கின்றன, மகிழ்கின்றன அதாவது உணர்கின்றன. ஒலியை உணரும் தன்மை உலகில் உள்ள யாவற்றிற்கும் உண்டு. ஏனெனில் நாத வடிவான இறைவனின் படைப்பல்லவா!

இன்றைய உலகில் நடைபெறுகின்ற கல்வி முறையில் இரச ஞானக்கலைகளாகிய நுண்கலைகளை யாவரும் கற்றுத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு இலகுவான வழிகள் இருந்தும் தொடர்ந்து கற்றுத் தெளிபவர் சிலரே. மாணவப் பருவத்தில் அழகியற்கல்வி என ஊட்டப்படும் இசையினால் மகிழ்ச்சியாக கற்றல் இடம்பெற்று ஞாபக சக்தி அதிகரிக்கும். கற்பித்தல் சுமையாக இல்லாது சுவையாக இருந்து அறிவு வளர உதவும். இவ்வாறு ஆரம்பக் கல்வியில் தொடங்கிய அழகியல் இசை உயர்ந்து இடைநிலையாகி மேலும் வளர்ந்து உயர்நிலைக் கல்விக்கு உயர்கிறது. ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்களது எண்ணங்கள் மிகவும் கூடுதலாக இருந்து, மிகவும் குறைந்து தேய்ந்து ஒரு சிலவாகின்றன. காரணம் நுண்கலைகளில் நாட்டமின்மை என்று கூறமுடியாது.

ஏனைய பாடங்களால் ஏற்படும் சுமை, வீட்டிலும் பாடசாலையிலும் படிப்பதோடு நில்லாமல் மேலதிக ஊட்டற் கற்றல்கள், ஆறுதல் இல்லாத கற்பித்தல், கற்றல் சூழல் இல்லாமை, ஏற்ற பாடத் தெரிவு இல்லாமை போன்ற நெருக்கடிகளால் நுண்கலைகளில் திறமையுள்ளவர்களும் தமக்குரிய வழியிது என்று உணராது ஏதேதோ வேறு கற்றல் நெறிகளைப் பின்பற்றுவதாலும் அவர்களின் கலை ஆர்வம் தடைப்படுகிறது.

இப்படியான பிரச்சினைகளால் எமது வருங்கால இளைஞர் சமுதாயம் பாதிப்படையாது இருப்பதற்கு பெற்றோர், ஆசிரியர் அல்லது வேறு யாராவது, ஒரு தனியாளின் ஆளுமையின் அடிப்படை ஆற்றல்களை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற பாடநெறியினில் ஊக்குவித்து நெறிப்படுத்தினால் சிறந்த ஒரு சமுதாயம் உருவாகலாம். இசைக்கலை கோபத்தினையும், அகங்காரம், ஆணவம் போன்ற தேவையற்ற குணங்களையும் அடக்கி நற்குணங்களை வளர்க்க வல்லது. சிறந்த நற்பண்புகளை வளரச் செய்வது. இசையினால் நோய்கள் குணமடைகின்றன. மூளைக்கு ஆறுதலைத் தந்து நினைவாற்றல் அதிகரிக்கவும் உதவுகிறத.

இத்தகைய சிறப்புமிகு இனிய சங்கீதக் கலையின் மகிமையை உணர்த்த பெற்றோரும் பெரியோரும் ஆசிரியர்களும் தமது பிள்ளைகளை ஆற்றல் மிக்கவர்கள் ஆக்குவதற்கு முன்வரவேண்டும். எல்லா சிறார்களும் நுண்கலையை விரும்புவார்கள். அவர்களது ஆற்றலை அறிந்து அவர்களுக்கு ஏற்ற கலையினை தெரிந்து ஊக்கம் எனும் பசளையை கொடுத்து வளர்வதற்கு சிறந்த வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். "அவர்களின் வளர்ச்சியே எங்களது மகிழ்ச்சி" என உணர்ந்து சக்திமிகுந்த கலைஞர்களாக முன்வரவேண்டும்.

நுண்கலைகளாகிய கீதம், வாத்தியம், நிருத்தியம், சிற்பம், சித்திரம் யாவும் மனிதனை மனிதனாக்குவனவாகும். ஒவ்வொன்றிலும் சிறப்பக்கள் நிறையவுண்டு. எனவே எம்மக்களை சிறந்தவராக, உயர்ந்தவராக, ஆன்மீக சக்தியுள்ளவராக வளரச் செய்து மகிழ்வோமாகா.

**செல்வி சரோஜா தம்பு (கலர்பூஷணம்)**
**இளைப்பாறிய உதவிக்கல்வி பணிப்பாளர்(இசை)**

# " இலங்கைப் பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும்" ஒரு கண்ணோட்டம்

திரு.இ.தமிழ்மாறன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்

இலங்கைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் தேவைகள் பற்றி கல்வியியலாளர்கள் 1960 களின் போதே பல்வேறு அறிக்கைகளையும் வெளியிட்டனர். அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. எனினும் 1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையிலேயே பின்வரும் விடயங்கள் பாடசாலை வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது.

* பாடசாலைச் சேவையின் ஒரு முக்கிய கூறாக வழிகாட்டலும் ஆலோசனையும் கணக்கிடப்பட்டு, பாடசாலையில் பின்வரும் இரு விடயங்கள் கொண்டதாக அது இருந்தது.

1. மாணவர் ஆளுமைப் பதிவேடு, விருத்திப்பதிவேடுகள் பேணல்
2. தொழிலுக்கு வழிகாட்டல்

* மாணவர் பெறுபேற்று அறிக்கையில் காலத்திற்கு காலம் பதிவு செய்யப்பட்ட தகவல்களினதும் ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து பெறப்பட்ட ஏனைய தொடர்பான தகவல்களின் அடிப்படையில் மாணவர் ஆளுமை விருத்திப்பதிவேடு அமையும். இதனடிப்படையில் மாணவரின் நடத்தைகளின் அடையாளங்களை முன்னதாகவே கண்டுகொள்ளவும் நேரத்தோடு பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பெற்றோருக்கு பிள்ளையின் பிறழ்வான நடத்தைகளை எடுத்துரைக்கவும் முடியும்.

தொழிலுக்கு வழிகாட்டலானது பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்கும்.

1. பாடசாலைக்கு வெளியேயுள்ள வாழ்க்கையைப்பற்றி நடைமுறையான அம்சங்களைப் பற்றிப் பொதுவான அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு உதவுதல்.
2. கிடைக்கக்கூடிய தொழில் வாய்ப்புகள் பற்றியதும் வருமான வீச்சுப் பற்றியதுமான குறிப்பான தகவல்களை வழங்குதல்.
3. மாணவர்களது செயற்றிறன், இயல்சக்தி, ஆகியன பற்றி யதார்த்தபூர்வமான மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்குப் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உதவுதல்.

* வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாட்டுத்துறையில் ஆசிரியர்களுக்கு சிறப்புப்பயிற்சி வழங்குவதற்கு ஆசிரியர் கல்லூரிகள் வாய்ப்பளிக்கும்.

* இடைக்கால நடவடிக்கையாக வேலைக்களம், கருத்தரங்குகள் போன்றன வாயிலாக வேலை உலகு பற்றிய தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு போதிய தொகையளவான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் ஏனைய வேலைத்துறைகளிற்கான குறுகிய கால விடுவிப்புக்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

* வழிகாட்டலையும் ஆலோசனையையும் வழங்கும் ஆசிரியர்களுக்காக தகுந்த வெகுமதிகளை வழங்குவதற்கான நிகழச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

* பாடசாலைக் கொத்தணிகள் ஒவ்வொன்றிலும் மூலாதாரப் பாடசாலையிலே ஸ்தாபிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் ஆலோசனை அலகுடன் வழிகாட்டல் ஆலோசனை கூறல் ஆகியவற்றின் சேவைகள் கொத்தணி ஒன்றின் அடிப்படையிலமைக்கப்படும்.

* இவ்வாறு ஸ்தாபிக்கப்படும் அலகுகளுக்குத் தொழில் வழங்கல், தொழில் வழங்கலும் மனிதவளப்பயன்பாடும் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் ஏனைய முகவர்களுடன் கல்வி அமைச்சும் சேர்ந்து தேவையான தகவல்களை வழங்கும். வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் ஆகியவற்றின் செயற்றிட்டத்தை இயக்கவும் இணைக்கவும் கல்வி அமைச்சில் ஒரு தனியான அலகு ஸ்தாபிக்கப்படும்.

இதன் பின்னர் 1997 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தின்படி பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையில் பின்வருமாறு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கு தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல், கல்வி ஆற்றுப்படுத்தல் மற்றும் சீர்மியம் கவனஞ் செலுத்தியுள்ளது. கல்விக்கும் தொழிலுக்கும் உள்ள தொடர்புகளைச் சீர்ப்படுத்தவும் பொருத்தமானவருக்கு பொருத்தமான தொழிலை பொருத்தமான காலங்களிலே அறிந்து கொள்ளச் செய்வதிலும் ஆற்றுப்படுத்தல் துணைசெய்கின்றத. இளைஞர்கள் மத்தியிலே தோன்றும் கல்வி சார் விரக்திகளையும் தொழில் சார் விரக்திகளையும் தீர்ப்பதற்கு இந்நடவடிக்கை ஓர் உபாயமாக அமையும்.

புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக முன்மொழியப்பட்ட 13 அம்சங்களிலும் தொடர் தொழில் வழிகாட்டலும் சீர்மியம் அல்லது ஆலோசனைச் சேவையும் முக்கியமாக அமைந்துள்ளன. தமது உளப்பாங்கு,உளச்சார்பு, ஆற்றல்கள், சுயபடிமம் முதலியவற்றுக்குப் பொருத்தமான கற்கைநெறியைத் தெரிவு செய்யவும் தொடர் தொழிலைத் தெரிவு செய்யவும் மாணவர்க்கு உதவும் வண்ணம் ஆசிரியர்களுக்கு பயிற்சி தரப்படும். இதற்காக குறித்த அலகொன்று கலவி அமைச்சு மட்டம், மாகாணக் கல்வித் திணைக்கள மட்டம், வலயக் கல்வித் திணைக்கள மட்டம் என்பவற்றில் அமைக்கப்படும். நாட்டில் நிலவும் தொழிற்கோலங்கள், விரிவடையும் தொழிற்கோலங்கள் முதலியவை பற்றிய விளக்கங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்படும். மேலும் தொடர் தொழில் சார்ந்த தகவல்கள் பற்றிய தரவுத் தளம் அமைத்தல் தொடர்பான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. தொழிலின் இயல்புகள், அவற்றின் நுழைவுக்கான தகுதிகள், தொழிலின உள்ளே காணப்படும் மேல் நொக்கிய அசைவுகளுக்கான சந்தர்ப்பங்கள், புதிய தொழில் வாய்ப்புகள் முதலியன பற்றி விரிவானதும் புதுப்பிக்கப்பட்டதுமான

தகவல்கள் தரவுத்தளத்தினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு உடனுக்குடன் பெறக்கூடியவாறு தயார் நிலையில் வைக்கப்படும்.

தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல், சீர்மியம் முதலானவற்றை வளப்படுத்தும் பொருட்டும் வினைத்திறன்படுத்தும் பொருட்டும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் விரிவுபடுத்தப்படவுள்ளன. குழச்செயற்திட்டங்கள், கூட்டுறவு வேலைத்திட்டங்கள், தலைமைத்துவ மேம்பாட்டு நடவடிக்கைகள், மனச்சுகம்தரும் பொழுது போக்கு நடவடிக்கைகள், விழுமிய மேம்பாட்டுத்திட்டங்கள் முதலியவை இணைக்கலைத்திட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும். தொடர் தொழில் வழிகாட்டல் தொடர்பான நூல்கள், கையேடுகள், கண்காட்சிகள் முதலியவற்றை ஒழுங்கமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழிற்பரிமாணங்கள் மொழியுடனும், தொடர்பாடலுடனும் இணைந்தவையாதலால் ஆங்கிலத்திலும் தேசிய மொழியிலும் தேர்ச்சி பெறுவதற்குரிய ஒன்றிணைந்த நடவடிக்கைகள் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும். ஆற்றல்களையும் திறன்களையும் மதிப்பிடுவதற்கும் விதந்துரைகள் வழங்குவதற்கும் திட்டநுட்பமான கணிப்பீட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேர்வுகள் தொடர்பான அகல்விரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பரீட்சைகள் அதிகாரசபை ஒன்றை அமைத்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுவருவதும் துரிதமானதும் சிக்கனமானதுமான சமூக பொருளாதார அமைப்பினுள் பெரும்பாலும் பல்வகையான கஸ்டங்களிற்காளாகின்ற முக்கிய பிரிவினராக அமைவது சிறுவர்களாவார்.இதனால் பாடசாலை செய்முறைக்குள் சகல பாடசாலைகளிலும் மாணவ ஆலோசனைச் சேவையொன்று ஆரம்பிப்பதன் தேவை எழுந்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் முறையான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படுவதோடு 2002 ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் சகல பாடசாலைகளிலும் இவ்விடயம் குறிப்பிட்டுள்ள முறைக்கேற்ப நிகழிச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவ் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

பல்வேறு வகையான உடல்,உளம் சார் பிரச்சனைகளை எதிர்நோக்கும் பாடசாலைச் சிறுவர்களுக்கு கல்வியினால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை 1.அடைவதற்கு மாறாக அமைந்துள்ள தடைகளை குறைத்து உரிய கல்விச் செயற்பாட்டில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு வாய்ப்பை வழங்குதல்.

2. பூரண ஆளுமைப்பண்புகளைக் கொண்ட ஒருவராகவும் சமூகத்தோடு இணைந்த நபராகவும் பாடசாலையிலிருந்து சமூகத்தினுள் பிரவேசித்தல்.

3. மாணவர்களுக்கு அவர்களின் பலத்தையும் பலவீனத்தையும் இனங்கண்டு சுய அபிவிருத்தி காண்பதற்கான வாய்ப்பை வழங்கல்.

4. மாணவர்கள் பற்றிய அறிக்கைகளை நடைமுறைப்படுத்தல் அவர்களின் பாடச்சாதனங்களின் ஆளுமைத் தன்மைகள் மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதன்மூலம் எதிர்காலத் தொழில்வாய்ப்புக்ள் பற்றிய சரியான எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு வாய்ப்பளித்தல்.

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்கான ஆசிரியர் குழுவைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்கள் தகைமைகளாக கவனத்திற்கொள்ளப்படுகின்றன.

* 10 வருடங்களிற்கு மேலான சேவையுடையவர்கள்
* ஆலோசனைச் சேவை பற்றிய விருப்பமும்அர்ப்பணிப்பும் உள்ளவராய் இருத்தல்
* மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் அவர்களுடன் புரிந்துணர்வுடனும் செயற்படற்கூடியவராக இருத்தல்.

அத்துடன் பட்டதாரிகள் மற்றும் ஆலோசனைச் சேவை பற்றிய பட்டப்பின் பட்டதாரிகளுக்கு இவை பொருத்தமற்றது. அவர்கள் மேற்படி பட்டத்துடன் ஆலோசனைகள் பற்றிய பிரயோகச் செயற்பாடுகளை மாத்திரம் பெற்றிருந்தால் போதுமானது.

மேலும் இவ் ஆசிரியர்களின் பிரதான கடைமைப் பொறுப்புக்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். அவை

1. பாடசாலை ஆலோசனைச் சேவையை ஆரம்பித்து மாணவர்களுக்கத் தேவையான சந்தர்ப்பங்களில் தம்மைச் சந்தித்து ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளைத் திட்டமிடல்.
2. மாணவனானவன் கற்றல் நிகழ்ச்சிகளில் ஈடுபடுபவராக இருப்பதாலும், ஒரு குடும்ப அங்கத்துவனாக இருப்பதானாலும், தன் எதிர்காலங்கருதி ஒரு தொழில் உலகுக்குள் நுழையவேண்டியிருப்பதானாலும் அவ்வவ் விடயங்கள் சார்பான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. பொறுப்பாசிரயர் அதிபர்,ஏனைய ஆசிரியர் குழாத்துடனும் இணைந்து திட்டமிடல்.

I. மாணவர் தொடர்பான அறிக்கைகள் பேணல், சமயாசமயத் தலையீடகள் மூலம்

II. சகல வேலைத்திட்டங்களையும் பற்றி அதிபர் மூலமாக ஆசிரியர்குழாம், மாணவர்கள், பெற்றோர் என்போருக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல்.

III. ஆலோசனைப் பிரிவொன்றை நடாத்துதல்.

IV.ஆலோசனைச் செயற்பாட்டின்போது இரகசியங்களைப் பேணல்.

V. நடைமுறைப்படுத்தும் கோவைகளின் இரகசியத்தன்மையைப் பேணல்.

மேலும் பௌதீக வள ஏற்பாட்டைப் பொறுத்தவரை, குறைந்த பட்சம் 20 ஓ 20 சதுர அடிகளைக் கொண்டளவான இடவசதியைக் கொண்டதாக இவ்வலகு காணப்படுதல் அவசியமாகும். பாதுகாப்பாக மூடி வைக்கக்கூடிய கதவும் அதற்குப் புறம்பாக ஒரு மேசையும் மூன்று கதிரைகளும் கோவைகள் வைப்பதற்கான அலுமாரியொன்றும் ஒன்றும் இருப்பது அவசியமாகும்.

வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியரின் தொழில் விருத்திக்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக நிபுணர்களின் வழிகாட்டல்களை கல்வியமைச்சு திட்டமிட்டு தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் அமுல்படுத்துதல். ஆத்துடன் பயிற்சி நடவடிக்கைகளை பிராந்திய, மாகாண, தேசிய மட்டங்களில் நடாத்துவதுடன் தொடர்பான உயர்மட்ட பாடநெறிகளும் நடாத்தப்படும். ஒவ்வொரு ஆசிரியரும் ஆரம்பப் பயிற்சியைப் பெற்றபின்னரே சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

அத்துடன் தாம் பெற்ற பயிற்சிகளினடிப்படையில் தரத்திற்கேற்ப வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவார்கள்.

* உதவி மாணவ ஆலோசகர்
* மாணவ ஆலோசகர்
* சிரேஸ்ட மாணவ ஆலோசகர்

வழிகாட்லும் ஆலோசனை தொடர்பாக பாடசாலை அதிபரின் பொறுப்புக்கள் வருமாறு:

1. ஆலோசனைப் பிரிவை அமைப்பதற்குத தேவையான வசதிகளை வழங்குதல்
2. தன்னுடையதும் தனது ஆசிரியர் குழாத்தினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
3. ஆசிரியர்கள், மாணவர்கள் ,பெற்றோர்கள் தொடர்பில் செயற்பாடுகள் பற்றி வலியுறுத்தல்.
4. உள்ளக மேற்பார்வை, மதிப்பீடு. பொருத்தமான பாடநெறி என்பனவற்றிற்காக உரிய ஆசிரியரை ஈடுபடுத்தல்.

வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாட்டில் ஏனைய ஆசிரியர்களின் கடைமைகள் பின்வருமாறு

1. பாடசாலை நேரத்தில் எச்சந்தர்ப்பத்திலும் ஆலோசகரைச் சந்திப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்.
2. ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் பற்றி சிறந்த மனப்பாங்கை மாணவர்களுக்கு ஏற்படுத்துதல்.
3. வகுப்பில் பாடவேளையில் பாடமொன்றில் ஈடுபட்டுள்ள போதிலும் நியாயமான ஒரு நிலைமையில் மாணவருக்கு ஆலோசகரைச் சந்திப்பதற்கான அவகாசத்தை வழங்கவேண்டும்.

இவ்வேலைத்திட்டத்தின் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

கோட்டக் கல்வி வலுவலக மட்டத்தில் மூன்று மாதங்களிற்கொரு தடைவை கோட்டக் கல்வி அலுவலருடன் வழிகாட்டல் ஆலோசனைப் பாடப் பொறுப்பாசிரியர்கள் சேர்ந்து கூட்டமொன்று நடாத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேவையான வசதிகளைச் செய்து கொள்ளவேண்டும். நான்கு மாதங்களிற்கொருமுறை முன்னேற்ற மீளாய்வுகள் கோட்டமட்டத்திலும் ஆறு மாதத்திற்கொருமுறை கல்வி அமைச்சு மட்டத்தில் அவ்வவ் மாகாணங்களில் நடைபெறும் நிகழ்ச்சித்திட்டங்ள் சம்பந்தமான மதிப்பீடு நடைபெறும்

திறனாய்வு

வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கைப் பாடசாலைகளில் மேற்சொன்னவாறு பல்வேறு ஏற்பாடுகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் பல்வேறு பிரச்சனைகள் காணப்படுகின்றன. மேலும் இதற்கென ஒரு பொறுப்பாசிரியர் நியமிக்கப்பட்டாலும் அவருக்குரிய வாரத்திற்கான வேலைக்கான மணித்தியாலங்கள் தெளிவாகக்குறிப்பிடப்படாமை. ஆதலால் குறித்த தேவையுடையவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்குரிய சேவைகள் வழங்கப்பட்டாலும் அவை முழுமையாக அமுல்படுத்தமுடியவில்லை.

* மாணவர்கள் தம்மை முற்றுமுழுதாக இனங்காட்டாமை. இதனை அவர்கள் ஏனையவர்களிற்கு தெரியப்படுவதை விரும்பாத நிலையில் இடம்கொடுப்பதில்லை.
* பாடசாலை நிர்வாகங்களின் மேலான தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை.
* பெற்றோர் இது தொடர்பான போதிய விழிப்புணர்வைக் காண்டிருக்காமை.
* போதியளவு பயிற்சிகளைப் பெறாத ஆசிரியர்களே இன்னமும் சேவையிலீடுபட்டு வருகின்றனர்.
* சமுதாயப் பார்வை ஆரோக்கியமற்ற நிலையிற் காணப்படுகின்றமை
* கோட்டமட்ட நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளபோதும் அவை சிறப்பான முறையில் செயற்படமுடியாமை.
* பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்ட மேற்பார்வை சரியான முறையில் வலுப்படுத்தவேண்டியுள்ளமை.

போன்ற விமர்சனக்கண்ணோட்டங்கள் பலவற்றையும் தாண்டி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவை முன்னெடுக்கப்படவேண்டிது தவிர்க்கப்படமுடியாததாகின்றது.

உசாத்துணை நூல்கள் :-

1. கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் - சபா.ஜெயராசா
2. வழிகாட்டலும் ஆலோசனையும் - விமலா கிருஸ்ணபிள்ளை
3. அகவிழி - ஜனவரி 2009 வெளியீடு (மா.சின்னத்தம்பி)
4. கல்வி அமைச்சு சுற்றுநிருபங்கள் - 2001/16, 2008/03

கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் - இலங்கை

# உட்படுத்தல் கல்வி மனப்பாங்கு மாற்றமும் சவால்களும்
# (Inclusive Education - Attitude Changes and Challenges)

**இ.இராஜேஸ்கண்ணன்**
**விரிவுரையாளர் சமூகவியல் துறை**
**யாழ் பல்கலைக்கழகம்.**

## 1. முகவுரை

"அனைவருக்கும் கல்வி" என்பது ஒரு கோட்பாடாக இன்று முனைப்புப் பெற்றுள்ளது. இந்தக் கோட்பாட்டு இலக்கினை நடைமுறையில் அடைந்து கொள்வதற்கு பல்வகை முன்னெடுப்புக்களை கல்வியுலகம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக கல்வி மறுசீரமைப்பு, கலைத்திட்ட உருவாக்கம், ஆளணி நியமனங்கள், ஆசிரிய கல்வி என பல்வேறு முன்னெடுப்புக்கள் சாத்தியமாக்கப்பட்டு வருகின்றன. அதே வேளையில். "அனைவருக்கும் தரமான கல்வி" என்ற கோட்பாடும் வளர்ந்துள்ளது. இந்தநிலையில்தான் விசேட தேவை உள்ளவர்களுக்கான கல்வி என்ற அடித்தளத்தில் "உட்படுத்தல் கல்வி" எண்ணக்கரு ரீதியாக முனைப்புப் பெற்று இன்று நடைமுறைச் சாத்தியம் பெறவேண்டிய ஒரு செயன்முறையாக மாறியுள்ளது.

"கல்வி" என்பது ஒரு சமூகத்தின் தனித்துவம் வாய்ந்த நிறுவனம் இது சமூகத்தின் பிரதிபலிப்பாக மேற்கிளம்புகின்ற அதேநிலையில் சமூகப்பிணக்குகளுக்கான தீர்வுகளையும் சமூக மாற்றத்துக்கும் மற்றும் மேம்பாட்டுக்குமான அடிப்படைகளையும் தருதல் அவசியமாகின்றது. இதனால் கல்விச்செயல்முறைகளில் உருவாக்கப்படுகின்ற புதிய புதிய சிந்தனைகள் அவற்றின் சமூகப் பயன்பாட்டுடனும் சமூக எதிர்பார்ப்புக்களுடனும் ஒன்றிணைந்தே நோக்கப்படுதல் வேண்டும் "உட்படுத்தல் கல்வி" என்பது வெறுமனே ஒரு எண்ணக்கருவாகவும் கோட்பாடாகவும் அன்றி சமூகத்தேவைகளுடன் இணைந்த ஒன்றாக நோக்கப்பட வேண்டும். அவ்வாறு நோக்கப்படும் போது அதன் சமூகத் தேவை என்ன? அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சமூக ரீதியான சாத்தியங்கள் மற்றும் அசாத்தியங்கள் எவை? அதன் சமூகப் பயன்கள் எவை ? போன்ற சில கேள்விகளுக்கான பதில்களை நாம் அறிந்திருக்க வேண்டிய தேவை உள்ளது.

எந்தவொரு சமூக நிறுவனத்திலும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் அறிமுகமாகும் போது அதனை அமுல்ப்படுத்தும் பொறி முறைகள் (Implementing Mechanism) மாத்திரம் சவால்களை எதிர்கொள்வதில்லை. சமூகமும் அதன் செல்வாக்கு நிலைக்கு உட்படும் மாறாக சமூகத்தில் நிகழ்போக்கிலும் சில வகை சாதகமான மாற்றங்களும் எதிர்பார்க்கப்படும். இந்த அடிப்படையிலேயே "உட்படுத்தல் கல்வி" என்ற சமகால கல்வி செயன்முறையின் அமுலாக்கத்தினை சமூகவியல் அடிப்படைகளில் இந்த கட்டுரை நோக்க விளைகின்றது.

## 2. விசேட கல்வியும் உட்படுத்தற் கல்வியும்

உட்படுத்தற் கல்வி என்பது விசேட கல்வித்துறை சார் தேவைகளில் ஒன்றாகி உள்ளது. சாதாரண வகுப்பறைகளிலே தங்கள் கற்றலை மேற்கொள்வதில் விசேட தேவை உள்ள மாணவர்களுக்கு இடர்ப்பாடுகள் உள்ளன. விசேட தேவை உள்ளவர்களுக்கு தனித்துவமான கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள், கற்பித்தல் நுட்பங்கள், வழக்கத்தில் உள்ளன. இவற்றைப் பிரயோகித்து பார்வை - கேட்டல் குறைபாடு உடையவர்கள் உடல் வலு

குன்றியவர்கள் போன்றவர்களுக்கு கல்வி வழங்கும் ஏற்பாடாகவே விசேட கல்வி என்பது அமைகின்றது. இந்தத் தேவைக்காக ஏற்கனவே பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

விசேட கல்வி வழங்குவதற்கான ஏற்பாடுகளில் ஆரம்பத்தில் அரசின் தலையீடுகள் போதுமானதாக அமைந்ததா என்பது கேள்விக்குரியதே. செவிப்புலன்- விழிப்புலன் அற்றவர்களுக்கான பாடசாலை, அங்கவீனர்களுக்கான பாடசாலை, பார்வை அற்றவர்களுக்கான "பிறெயில்" முறை போன்ற பல விசேட கல்வி முன்னெடுப்புக்கள் வந்தன, 1961 இல் ஜெயசூரிய அறிக்கை 1962 இல் கென்மோர் அறிக்கை 1979 இல் போகொட பிரேமரட்ண அறிக்கை என்பவற்றைத் தொடர்ந்து விசேட கல்விக்கான நடைமுறைச்சாத்தியமான செயற்பாடுகள் மிக முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இவை யாவும் விசேட கல்வித் தேவை உடையவர்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளையே கொண்டிருந்தன.

ஆரம்பத்தில் இலங்கையில் தீவிர மன எளிச்சி சார் தடைகள் உள்ளோர், கற்றல் வலுவற்றோர், மொழிதல் வலுவற்றோர்கள், பன்னிலை வலுவற்றவர்கள், பார்வைக்குறையுள்ளோர், கேட்டற்குறையுள்ளோர், உடலுறுப்பு குறையுள்ளோர், சுகவாழ்வு குறையுடையோர், மூளைபாதிப்புடையோர், தன்னுள் ஆழ்பவர்கள் போன்ற பலரவகை விசேட தேவையுடையவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான தனித்துவமான கல்வி ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதுவே விசேட கல்வி எனப்பட்டது. இவர்கள் மாத்திரமன்றி மீத்திறன் மிக்க கொடுப்பினை மிக்க ஆற்றல்கள் உள்ள மாணவர்களைக்கூட விசேட கல்விபெற வேண்டியவர்களாகவே கருதினர்.

இத்தகைய விசேட தேவை உடையவர்களை விசேடமாக குறித்து ஒதுக்கப்பட்ட நிலையில் வைத்து கற்பிப்பதை விடுத்து அவர்களையும் சாதாரண வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் உட்படுத்திக் கற்றலில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே "உட்படுத்தல் கல்வி" எனப்படுகின்றது. இந்த எண்ணக்கருவின் உருவாக்கத்தின் பின் குறைபாடுடையோர், வலுவற்றோர், வலுக்குறைந்தோர், அங்கவீனர்கள் என்ற சொற்பிரயோகங்கள் கைவிடப்படவேண்டியவையாகின. பதிலாக "மாற்றுவலுக்கொண்டோர்" என்ற பிரயோகம் மேலெழுந்துள்ளது. ஏனெனில் இவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் "விசேடமான", "மாற்றான்" தனித்துவத் திறமைகள் உள்ளன. அவற்றை வெளிக்கொணர்வதற்கு இயல்பான மாணவர்களுக்குரிய வகுப்பறைச்சூழலும், சமூகச்சூழலுமே அவசியம் என்ற கருத்து செல்வாக்குப் பெற்றுள்ளது. அதாவது ,எல்லாப்பிள்ளைகளுக்குமான பொதுக்கல்விக் கோலத்திலுள்ள மாற்றுவலுவுள்ளபிள்ளைகளும் அடக்கப்பட்டு அந்தச் சூழ்நிலையிலே வைத்து அவர்களின் தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றை நிறைவேற்றும் ஏற்பாடுகள் வடிவமைக்கப்படல் வேண்டும் என்பதே உட்படுத்தல்க் கல்வியின் மையநோக்காகும்.

மாற்றுவலுவுள்ள பிள்ளைகளும் இந்தச்சமூகத்தின் மனிதர்களே. ஏனையவர்களைப்போல அவர்களும் சமுதாய வாழ்வின் ஒவ்வொரு பொருண்மைகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதில் உரித்துடையவர்களே. சகல பிள்ளைகளிடையிலும் வேறுபாடுகளை விட ஒற்றுமைகளே அதிகம் இதனால் குறைந்தளவு வேறுபாட்டின் அடிப்படையில் பிள்ளைகளிடையே வேறுபாடு காட்டுதல் அவர்களின் உரிமைகளை மறுப்பதாகும். எந்தவொரு பிள்ளையும் ஒத்தவயதுப்பிரிவினருடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதே சிறந்தது என்ற அடிப்படையில்தான் விசேட தேவை உள்ள மாணவர்களை உட்படுத்தல் என்பது இன்றைய

கல்வி உலகில் முனைப்புப்பெற்ற கோட்பாடாகியுள்ளது.

### 3.சமூக மனமும் உட்படுத்தற் கல்வியும்

விசேட தேவையுள்ள மாணவர்களைச் சாதாரண வகுப்பறைகளின் உட்படுத்தலின் போது சமூகத்தின் மனோபாவம் என்ன என்பது சிந்திக்க வேண்டிய ஒரு அம்சமே. பெற்றோர், ஆசிரியர்கள், ஏனையசமூக நிறுவனங்கள், அரசு என்று தொடரும் சமூகக்கூறுகள் ஒவ்வொன்றினதும் பங்களிப்புகள் மற்றும் பலவீனங்கள் என்ன என்பது குறித்து ஆராய வேண்டும்.

உலகளாவியரீதியில் சட்டரீதியாக இதற்கான பல ஏற்பாடுகள் வந்துவிட்டன மனித உரிமைகள் சாசனம்,சிறுவர் உரிமைகள் சாசனம் என்பவற்றின் வாயிலாக இதனை அறியலாம். சிறுவர் உரிமை சாசனத்தின் 23ஆம் 28ஆம் உறுப்புரைகள் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் சுயபலம், கௌரவம், கண்ணியமான வாழ்வு, சமுதாயத்தில் பெறும் வாய்ப்புக்கள், அவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, ஆற்றலின் அடிப்படையிலான கல்வி என்பன பற்றி மிகவிரிவாக விளக்குகின்றன. இவற்றின் பின்னணியில்தான் விசேட தேவை உள்ளவர்களுக்கான உட்படுத்தற் கல்வி என்ற எண்ணக்கரு விருத்திபெற்றது. எனினும் எமது சமூகத்தில் இதனை அமுல்படுத்தும் போது மாற்றப்பட வேண்டிய அடிப்படை மனோபாவங்களும் எதிர்கொள்ள வேண்டிய சவால்களும் அதிகமாகவே உள்ளன. இத்தகைய சவால்களை பின்வரும் இருவகைகளில் ஆராயலாம்.

#### 3.1 சமூகமட்டத்திலான சவால்கள்.

1) பொதுவாக மாற்றுவலுவுள்ள பிள்ளைகளை சமூகம் இரக்கத்துடன் பார்க்கும் நிலை தொடர்கின்றது. இதனால் சாதாரண மனிதர்களிலிருந்து அவர்கள் பலசந்தர்ப்பங்களில் அந்நியப்படுத்தப்படுகின்றார்கள் அல்லது அந்நியமாகின்றார்கள். சமூகத்தின் இந்த "பார்வைக்கோணாறு" உட்படுத்தல் கல்வி வகுப்பறை வரை தொடருமாயின் அதுபாரிய சவாலாக அமையலாம். உடலில் ஏற்படும் ஒரு குறைபாடு என்பது ஒட்டுமொத்தமாக ஒரு சாதாரண பிள்ளையிலிருந்து விசேட தேவையுள்ள பிள்ளையை முற்றிலும் வேறுபடுத்திப் பார்க்க வாய்ப்பினைத் தந்துவிடுவது மிகவும் அபத்தமான ஒரு சமூக மனோபாவமாகும்.

2) சமூகமட்டத்தில் பல்வேறு அடிப்படையிலான "அடுக்கமைப்பு" முறைகள் உள்ளன. அவை தவிர்க்கவியலாது வகுப்பறைகளிலும் பிரதிபலிக்கின்றன. பொருளாதாரம், வர்க்கம், சாதி போன்ற அடிப்படைகளிலான அடுக்கமைப்பின் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவோ அவ்வாறு உடற்குறைகளும் வகுப்பறைகளில் மாணவர்களிடையே ஒரு "அடுக்கமைப்பை" உருவாக்கி விடாது பார்த்துக்கொள்ளவேண்டிய நிலையுள்ளது.

3) உட்படுத்தல் கல்வி தத்துவத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக வலுவற்ற பிள்ளைகள் சாதாரண மாணவர்களுடன் வகுப்பறைகளிலே சேர்ந்து ஊடாடுவதனால் சமூகச்சூழலுக்கு பொருத்தப்பாடடைவது வலியுறுத்தப்படுகின்றது. இதனால் "சமபங்காளிகள்" என்ற உணர்வு நிலை மாற்றுவலுவுள்ளவர்களிடத்தில் ஏற்படுகின்றது என்ற எதிர்பார்ப்பு உள்ளது ஆனால் இயல்பான சமூகச் சூழ்நிலையில் சாதாரணநிலையிலுள்ள பிள்ளைகளின் பெற்றோர் அங்கவீனம் போன்றவற்றுக்கு உட்பட்ட பிள்ளைகளிடத்தில் தமது பிள்ளைகளுக்கு நிகரான மாற்றுவலு உள்ளது என்பதனை பொதுநிலையில் ஏற்க மறுப்பவர்களாகவே, உள்ளனர். இந்த

மனோபாவத்தினை மாற்றிக்கொள்ள பெற்றோர் முனைதல் வேண்டும்.

4) மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் இயல்பாகவே உளவியல் ரீதியான தாழ்வு மனப்பான்மை நிலையில் பெரும்பாலும் இருப்பது எமது சமூகச்செயற்பாடுகளினிடை தவிர்க்கவியலாத ஒன்றாகும். இவர்கள் சாதாரண மாணவர்களுடன் சமநிலையில் இயங்கும்போது சில சந்தர்ப்பங்களில் இந்த மனப்பான்மை அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படக்கூடிய நிலைகளும் உள்ளன. இதனை தவிர்ப்பதற்கான மனோபலத்தை அந்த மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழிசமைப்பது மிக அவசியமான பணியாகி விடுகின்றது. இந்தச்சவாலை வெற்றிகொள்ள வேண்டியவர்களாக ஆசிரியர்களே விளங்குவர்.

5) மாற்று வலுவுள்ள பிள்ளைகளின் பெற்றோர் சார்பிலும் முக்கியமானதொரு மனநிலை மாற்றம் வேண்டப்படுகின்றது. அதாவது, தங்களது பிள்ளைகள் பராமரிக்கப்படவேண்டியவர்கள், இயல்பாகச் சமூகச் சூழலுக்குப் பொருந்த முடியாதவர்கள், சவால்களை எதிர்கொள்ள முடியாதவர்கள், என்றுமே கவனமெடுப்பவர்களின் உதவி நாடிநிற்பவர்கள் என்ற மாற்றவியலாத எண்ணம் உள்ளவர்களாக இருப்பர் இவற்றை மாற்றிக் கொண்டு தங்கள் பிள்ளைகளின் உள வளர்ச்சிக்கும், சமூகப் பொருத்தப்பாட்டுக்கும் உந்துசக்தி வழங்கக் கூடியதாக தமது மனோபாவத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக வேண்டும்.

### 3.2 கல்வியுலகின் சவால்கள்.

சமூக ரீதியில் பல சவால்கள் இருப்பினும் அவற்றை விட அதிகளவு சவால்களைக் கல்விசார் உலகு சந்திக்க வேண்டியுள்ளது. நிர்வாக நிலை, கற்றல் கற்பித்தல் முறைகள், ஆசிரிய வளங்கள், கலைத்திட்ட நடைமுறைகள் போன்ற பல்வேறு அம்சங்களிலும் அந்தச் சவால்கள் வெற்றிகொள்ளப் படவேண்டியுள்ளன. அவற்றில்,

சாதாரண மாணவர்களின் செயற்பாடுகளை உள்ளடக்கிய பாடசாலைகளையும், கல்விச்செயற்பாடுகளையும், நிர்வகித்த கல்வி நிர்வாக அமைப்புக்கள் விசேட தேவை உள்ள பிள்ளைகளை உள்வாங்கும் போது நிர்வாக போக்குகளில் மாற்றங்களை உள்வாங்கவேண்டிய தேவைகள் உள்ளன விசேடமான பயிற்சி பெற்ற ஆசிரிய வழிகாட்டுனர்கள் ஆலோசகர்கள் என்பவற்றுக்கு அப்பால் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி வேண்டி சில ஒத்துழைப்புக்களை (Collaborations) உருவாக்க வேண்டி ஏற்படும்.

வகுப்பறையை பொறுத்தவரை ஏற்கனவே விசேட கல்வி ஆசிரிய நியமனங்கள் உள்ளபோதிலும், மாற்றுவலுவுள்ள பிள்ளைகளைக் கையாள்திறன் விருத்திபெற்ற ஒரு கணிசமான ஆசிரியவளம். அவசியப்படும் கல்வியியல் கல்லூரிகளிலும் ஏனைய சில நிறுவனங்களிலும் இதற்கான ஆசிரியர் கல்வி நடைமுறைகள் ஏற்கனவே அறிமுகமான போதிலும், நடைமுறைச் சாத்தியமாக்கும் ஆசிரியவளம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்கான கற்றலுக்கான உபகரணக் கையாட்சி மிக முக்கியமான ஒன்றாகும். சாதாரண வகுப்பறையில் இதன் பிரயோகத்தை உறுதிசெய்து கொள்ளல் என்பது முக்கியமான முயற்சியாகும்.

கற்பித்தல் நுட்பங்களில் சாதாரண வகுப்பறைக்குரிய பொதுவான முறையியல்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் மாற்றுவலுவுள்ள மாணவர்கள் வகுப்பறைத் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கக் கூடிய வகையில் குழுச் செயற்பாடுகள் போன்றவற்றை ஏற்படுத்தி செய்யவேண்டிய தேவைகள் உள்ளன.

இத்தகைய வகுப்பறைகளில் ஆசிரியர்களின் குழுக்கற்பித்தல் (Team teaching) அணுகுமுறை விரிவாக்கம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் உள்ளன. துறைசார் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பாட நிபுணத்துவமுள்ள ஆசிரியர்களும் வகுப்பறைகளில் ஒன்றிணைவதன் மூலமாக ஏற்பாடுகள் சாத்தியமாக்கப்பட வேண்டும்.

வகுப்பறைகளில் பரீட்சை நோக்குகள், மதிப்பீட்டு நடைமுறைகள் என்பவற்றுக்கு அமைவான கலைத்திட்ட முன் நகர்வில் கூடிய அக்கறை செலுத்த வேண்டிய நிலைமைகள் உள்ளதுடன் புறக் கலைத்திட்ட விடயங்களில் கண்ணியத்துடன் கூடியதான ஏற்பாடுகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

என்பன சில ஆகும்.

## 4. முடிவுரை:-

உட்படுத்தல் கல்வி தொடர்பான கொள்கைகள் இத்தகைய சவால்களை வெற்றி கொள்வதையும் நோக்கமாகக் கொண்டே அமைந்தன எனினும், நடைமுறையில் எந்தவொரு சமூகம்சார்ந்த கல்வியுலகு சார்ந்த சவால்களும் எதிர்கொள்ளப்பட்டு வெற்றிகாணும் நிலையில்தான் அதன் சமூகப் பயன் நோக்கு நிறைவேறுகின்றது. மாற்று வலுவுள்ள பிள்ளைகள் எங்கள் சமூகத்தின் தவிர்க்கவியலா வகிபங்குகள் என்பதற்கு அப்பால் எமது சமூக மேம்பாடு பற்றிய சிந்தனைகளில் வலுப்படுத்தப்பட வேண்டிய பிரிவினர் என்ற வகையில் "உட்படுத்தல் கல்வி" என்பது எமது சமூக மேம்பாட்டுக்கான ஒரு பக்கத்துக்கான கதவினை அகலத்திறந்து விடுவதால் அதற்கான சவால்களை வெற்றி கொள்வதில் ஆசிரியர்கள், பெற்றோர், கல்வி நிர்வாகம், சமூக நிறுவனங்கள். சமூகப் பணிமையங்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது எமது பொறுப்பு.

# The role of the first language in the teaching and learning of English as a second language

**K.Sanmuganathan,**
**(M.A, B.A, PGD in Edu)**
**Lecturer in English language**
**University of Jaffna**

Second language use in the language classroom needs to be maximized wherever possible, by encouraging its use and by using it for classroom management. However, the findings from the research done by various scholars show that the first language has a small but important role to play in communicating meaning and content. This role is important across all four strands of a course.

In a well balanced second language course, there are roughly equal opportunities for learning through the four strands of

1. meaning focused input - learning through listening and reading
2. meaning focused output - learning through speaking and writing
3. language focused learning - learning through deliberate attention to language features
4. fluency development - learning through working with known material across the four skills at a higher than usual level of performance.

**L2 use**

Research done on this area has shown that the first language of learners can play a useful role in some of these strands and the aim of this article is to clearly identify those parts of a language course where there is value in using the L1. Before doing this, it is good to look at ways of increasing the use of the L2.

Where learners have little opportunity to meet and use the L2 outside the classroom, it is very important that L2 use is maximized in the classroom. One obvious way to do this is carry out classroom management in the L2, English. Classroom management involves things like telling the class what to do (e.g. take your books, turn to page 7), controlling behaviour (e.g. be quiet, sit down), explaining activities (e.g. get into pairs). This requires a little bit of careful thought by the teacher so that the vocabulary and structures used in the language of classroom management are also generally useful. If the use of English in classroom management is done in a planned, consistent way, then classroom management can be a very effective opportunity for learning through meaning focused input. A very useful piece of classroom-based research would be to identify through observation the functions and forms of the language of classroom management, and then devise a classified list of useful sentences that make use of generally high

frequency words and grammatical structures. In this way the role of the L1 in classroom management can be minimized and in turn, the role of the L2 can be increased.

In classrooms where the learners all share the same L1 or first language, there is a tendency for tasks which should be done in the L2 such as conversation activities, discussion of intensive reading, preparation for writing etc to be done in the L1. There are many reasons for this L1 use. Firstly it is more natural to use the L1 with others who have the same L1. Secondly, it is easier and more communicatively effective to use the L1, and thirdly, using the L2 can be a source of embarrassment particularly for shy learners and those who feel they are not very proficient in the L2.

There are however some times when use of the L1 can have very positive effects on learning and we will now look at these in relation to the four strands.

**First language use and meaning focused input and output**

Meaning focused tasks can carry a heavy cognitive load. Not only do learners have to focus on what to say or what is being said, they also have to focus on how to say it or how it is being said. Lameta-Tufuga (1994) examined the effects of having learners discuss a task in their first language before they had to carry it out in writing in the second language. That is, they had the opportunity to fully understand the content of the task through the medium of their first language, before they performed the written task in English. The first language discussion of the task had some interesting features. Firstly, the learners were all very actively involved in coming to grips with the ideas. Secondly, the first language discussion included quite a lot of the second language vocabulary which would be used in the later task. Thus the discussion not only helped learners to get on top of the content, but it also helped them gain control of relevant L2 vocabulary in a very supportive L1 context. Knight (1996) also made a similar finding. As a result, the learners who did the preparatory L1 discussion in groups did much better on the L2 written task than other learners who did preparatory L2 discussion even though that discussion was in the same language as the subsequent written task. There is thus a useful role for the L1 in helping learners gain the knowledge needed to reach a higher level of L2 performance. Whenever a teacher feels that a meaning based L2 task might be beyond the capabilities of the learners, a small amount of L1 discussion can help overcome some of the obstacles.

**First language use and language focused learning**

There are numerous ways of conveying the meaning of an unknown word. These include a definition in the second language, a demonstration, a picture or a diagram, a real object, L2 context clues, or an L1 translation. In terms of the accuracy of conveying meaning, none of these ways is intrinsically better than any of the others. It all depends on the particular word concerned. However, studies comparing the effectiveness of various

methods for learning always come up with the result that an L1 translation is the most effective (Lado, Baldwin and Lobo 1967). This is probably because L1 translations are usually clear, short and familiar, qualities which are very important in effective definitions (McKeown 1993). When the use of an L1 translation is combined with the use of word cards for the initial learning of vocabulary, then learners have a very effective strategy for speeding up vocabulary growth (Nation 2001: 296-316). Although there are frequent criticisms raised of learning L1-L2 word pairs, these criticisms are not supported by research. The direct learning of L2 vocabulary using word cards with their L1 translations is a very effective method of learning.

The finding derived by Nation Paul receives some support from studies of dictionary use. Learners' dictionaries can be classified into two major types - those that only use the L2 (monolingual dictionaries like the Oxford Advanced Learners Dictionary, the Longman Dictionary of Contemporary English and the Cambridge Learners Dictionary), and those that make use of the L1 (bilingual or bilingualised dictionaries like Lifco Dictionary). A bilingualised dictionary is a monolingual dictionary with L1 translations included. Monolingual dictionaries usually contain a wealth of useful information and in an attempt to make them accessible for lower proficiency learners, the definitions are often within a controlled vocabulary. The definition vocabulary usually consists of around 2000 words. Thus to use a monolingual dictionary effectively learners need to have a effective receptive vocabulary of 2000 words. Most learners of English as a second language do not achieve this until they have been studying English for five to six years. It is not surprising then that surveys of dictionary preference (Laufer and Kimmel 1997) and learner use show that learners strongly favour bilingual or bilingualised dictionaries. To effectively use a monolingual dictionary, learners need to have a large enough vocabulary (at least 2000 words) and need to be able to interpret definitions, which are much more difficult than L1 synonyms.

Increasingly, languages borrow a lot of words from English. Encouraging learners to notice this borrowing and to use the loan words to help the learning of English is a very effective vocabulary expansion strategy. This involves deliberately exploring L1 and L2 relationships. Even greater help is available where the L1 has a family relationship with English as is the case with languages (Ringbom 1987). The L1 clearly has a very important role to play in the deliberate learning of vocabulary.

**First language use and fluency development**

Fluency development tasks need to involve language items that are already familiar to the learners, need to involve largely familiar content, and need to include some kind of encouragement to perform faster than usual. This encouragement can take the form of time pressure as in speed reading. The L1 can have a small role to play in preparing the learners for such tasks to make sure that the material they are working with is truly familiar. This preparation can involve helping learners recall L1 stories and information that they then work with in the L2, or getting learners to use the L1 to discuss and become very familiar

with L2 input, such as newspaper articles, TV news reports, short factual texts, that is then used as the basis for L2 fluency tasks.

## L1 and L2

In most of the roles of the L1, there is the common theme that the L1 provides a familiar and effective way of quickly getting to grips with the meaning and content of what needs to be used in the L2. It is foolish to arbitrarily exclude this proven and efficient means of communicating meaning. To do so would be directly parallel to saying that pictures or real objects should not be used in the L2 class (Nation 1978). All the arguments against L1 use similarly apply to the use of pictures, real objects, and demonstration. The L1 needs to be seen as a useful tool that like other tools should be used where needed but should not be over-used.

## Encouraging L2 use

In classes where learners all share the same first language or national language, teachers need to use a range of options to encourage learners to use the L2 as much as possible (Nation 1997). The following range of options is based on the idea that there are several reasons why learners use the L1 when they should be using the L2. These reasons include low proficiency in the L2, the naturalness of using the L2 to do certain jobs, shyness in using the L2, or simply a lack of interest in learning the L2. Here are some of the ways of dealing with these obstacles to L2 use.

1. Choose manageable tasks that are within the learners' proficiency.
2. Prepare learners for tasks by pre-teaching the language items and skills needed.
3. Use staged and graded tasks that bring learners up to the level required.
4. Get learners to pretend to be English speakers.
5. Make the L2 an unavoidable part of the task. Retelling activities, strip stories, completion activities, and role plays all require the use of the L2.
6. Repeat tasks to make them easier.
7. Inform learners of the learning goals of each task so that they can see how using the L2 will help them achieve a clear short term learning goal.
8. Discuss with the learners the value of using the L2 in class.

with L2 input, such as newspaper articles, TV news reports, short factual texts, that is then used as the basis for L2 fluency tasks.

## L1 and L2

In most of the roles of the L1, there is the common theme that the L1 provides a familiar and effective way of quickly getting to grips with the meaning and content of what needs to be used in the L2. It is foolish to arbitrarily exclude this proven and efficient means of communicating meaning. To do so would be directly parallel to saying that pictures or real objects should not be used in the L2 class (Nation 1978). All the arguments against L1 use similarly apply to the use of pictures, real objects, and demonstration. The L1 needs to be seen as a useful tool that like other tools should be used where needed but should not be over-used.

## Encouraging L2 use

In classes where learners all share the same first language or national language, teachers need to use a range of options to encourage learners to use the L2 as much as possible (Nation 1997). The following range of options is based on the idea that there are several reasons why learners use the L1 when they should be using the L2. These reasons include low proficiency in the L2, the naturalness of using the L2 to do certain jobs, shyness in using the L2, or simply a lack of interest in learning the L2. Here are some of the ways of dealing with these obstacles to L2 use.

1. Choose manageable tasks that are within the learners' proficiency.
2. Prepare learners for tasks by pre-teaching the language items and skills needed.
3. Use staged and graded tasks that bring learners up to the level required.
4. Get learners to pretend to be English speakers.
5. Make the L2 an unavoidable part of the task. Retelling activities, strip stories, completion activities, and role plays all require the use of the L2.
6. Repeat tasks to make them easier.
7. Inform learners of the learning goals of each task so that they can see how using the L2 will help them achieve a clear short term learning goal.
8. Discuss with the learners the value of using the L2 in class.

Mishima, T. 1967. An experiment comparing five modalities of conveying meaning for the teaching of foreign language vocabulary. Dissertation Abstracts 27: 3030-3031A.

Nation, I.S.P. 1997. L1 and L2 use in the classroom: a systematic approach. TESL Reporter 30, 2: 19-27.

Nation, I.S.P. 1978. Translation and the teaching of meaning: some techniques. ELT Journal 32, 3: 171-175.

Ringbom, H. 1987. The role of the first language in foreign language learning. Clevedon: Multilingual Matters.

Suntharesan, V. 1994. The role of mother tongue in the teaching of English as a second language. University of Jaffna.

# எளிமையின் அழகியல்

## கருணாகரனின் கவிதைகளை முன்வைத்து

தேவராசா ஜெகன்
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்.

**எளிமை கனமான விஷயங்களுக்கு எதிரானது அல்ல. பல்வேறு பரிசோதனைகள், படிப்பினைகள் இவற்றின் வாயிலாக அடைந்த அனுபவங்களை வெளிப்படுத்தும் முறையில் உள்ள பக்குவமே எளிமை. கவிதை எளிமையாக இருந்தால் தனது புலமையின் மீது சந்தேகம் வந்துவிடுமோ எனும் அச்சத்தால் கவிஞர்கள் இதை தவிர்த்துவிடும் காலம் போய்விட்டது. இன்று எளிமை ஓர் அழகியலாக உருவெடுத்துள்ளது.[1]**

**கரிகாலன் -**

தொண்ணூறுகளுக்குப் பின்னரான நவீன தமிழ்க் கவிதைகளின் போக்குகள் பற்றி கரிகாலன் தமது நூலில் குறிப்பிடுகையில், அதன் ஒரு கூறாக எளிமையின் அழகியலாய் அமைந்த கவிதைகளை எடுத்துக்காட்டும் போது, மேற்கூறிய கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இக்கருத்தினைப் பார்த்தபோது எனது சிந்தனை ஓட்டத்தை கிளர்த்திய விடயம் பெரும்பாலான ஈழத்துக் கவிதைகள் எளிமையின் அழகியலாய் இருப்பதுதான்.

இத்தோடு சேர்த்துப் பார்க்க வேண்டிய இன்னுமொரு விடயம் ஈழத்துக்கவிதைகளின் இத்தகைய போக்கு தமிழக விமசர்சகர்களின் மனதில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பது. இதற்கு உடனடியாகச் சொல்லக்கூடிய பதில் அவர்களில் பெரும்பாலானோர் ஈழத்துக் கவிதையின் எளிமையினையும், அதன் அழகியலையும் விளங்கிக் கொள்ளவில்லை என்பதே. இதனால் ஈழத்துக் கவிதைகளை தனியே எளிமையானது என்று புரிந்து கொள்ளக்கூடாது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். எல்லாக் கவிதைகளையும் போல அவையும் பன்மைத்துவ அழகியல் கொண்டவைதான்.

ஈழத்துக் கவிதைகள் பற்றி தமிழக விமர்சகர்களது பார்வை குவிகிற போது அவர்களில் பெரும்பாலானவர்களிடம் நிலவுகிற கருத்து, அவை தீவிர அரசியல் பேசுகின்றன பெரும்பான்மையான தருணங்களில் இவை பிரசாரமாக 'மாறிவிடுகின்றன. இதனால் இவை பெரும்பாலும் நேர்கோட்டுத் தன்மையாக அல்லது தட்டையானதாக அமைகின்றன என்பதாகும். உதாரணமாக, ஈழத்துக் கவிதைகள் பற்றி அடிக்கடி தனது கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற தமிழக விமர்சகளுள் ஒருவரான ஜெயமோகனின் பின்வரும் கருத்து இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. "தமிழ்நாட்டுக் கவிதைகளையும் ஈழக் கவிதைகளையும் ஒப்பிட்டுப் பேசும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி அமைவதுண்டு, பெரும்பாலும் மேடையில், கேள்வி - பதில் உரையாடல்களின் போது. முக்கியமான வேறுபாடாக எவருக்கும் கண்ணில் படுவது நடைதான். தமிழ்நாட்டுக் கவிதைகள் செறிவான உள்ளளுத்தம் கொண்ட துண்டுபட்ட உரைநடையில் அமைந்துள்ளன. ஈழக் கவிதைகள் யாப்பில் இருந்து விடுபட்டும் சந்தத்திலிருந்து விடுபடாதவையாக உள்ளன. சமீபகாலமாகத்தான் சந்தம் ஈழக் கவிதைகளில் இருந்து நீங்கிவருகிறது. இந்த வெளிப்பாட்டுமுறை வேறுபாட்டை எளிமையான மொழிப்பழக்கம் அல்லது வடிவப் பயிற்சி என்று எடுத்துக்கொள்ள முடியாது"

ஈழத்துக் கவிதைகளின் பன்முக அழகியலை விளங்கிக் கொள்ளாமையின் வெளிப்பாடே இதுவாகும். இது பெரும் அபத்தம் நிறைந்தது. இத்தகைய அபத்தமான கருத்தாடல்கள் முன்வைக்கப்படும் போது, அதனை மறுத்து அவ்வப்போது ஈழத்து விமர்சகர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். இதன் போது சிலர் ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் இல்லாத அதன் எளிமையான மொழியையும், அழகியலையும் கூடவே அதனைத் தந்த கவிஞர்களின் பட்டியலையும் தந்திருக்கிறார்கள். ஆனால் அத்தகைய கவிதைகளின் இயங்கு விதிகளையும், அதன் வெளிப்பாட்டு முறையில் ஏற்பட்ட மாற்றங்களையும் விரிவான ஆய்வு நிலைக்கு உட்படுத்தவில்லை. குறிப்பாக ஈழத்துக் கவிதைகளின் எளிமையின் அழகியலை விரிவாக வெளிக்கொணரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இப்பின்புலத்தில் இருந்து பார்க்கின்ற போது கவிதையில் எளிமை என்பது என்ன, ஒரு கவிதை எவ்வாறு எளிமையாகவும், அழகாகவும் சொல்லப்படுகிறது, எளிமையான வரிகள் எவ்வாறு வாசகனின் மனதை மிதக்கவிடுகின்றன, அதன் இயங்கு தளங்கள் என்ன? என்ற வினாக்களுக்கு விடை இறுக்கும்போதே, அதன் அழகியல் இயங்கு விதிகளை புரிந்து கொள்ள முடியும். இத்தகைய வினாக்கள் கிளர்த்தும் சிந்தனையோட்டத்தின் வழியே ஈழத்துக் கவிஞர் கருணாகரனின் கவிதைகளை முன்வைத்து எளிமையின் அழகியலை புரிந்து கொள்ள முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது ஒருவகையில் ஈழத்துக் கவிதையின் எளிமையின் அழகியலின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தினைத் தருமாயின் மகிழ்ச்சிக்குரியது. (எதிர்காலத்தில் முழுமையாக ஈழத்துக் கவிதைகளை முன்னிறுத்தி இக்கருத்தாடலை விரிவு படுத்தும் எண்ணமும் உண்டு.)

I

இன்று கவிதையின் அரசியல் பற்றி அதிகமாகக் பேசப்படுகிறது. கவிதையின் அரசியல் என்பது கவிதையின் இயங்கு விதிகளையும், நுண்ணரசியலையும், அதன் அழகியலையும் உள்ளடக்கியது. கடினமான கூறுகளுக்குள் மட்டும் கவிதையின் அழகியலைத் தேடுவதை விடுத்து அதன் பன்முக அழகியலிலும் கவனம் திரும்பியிருக்கிறது. அதன் ஒரு கூறாகவே எளிமையின் அழகியல் பற்றியும் பேசவேண்டியுள்ளது. தமிழ்ச் சூழலில் பொதுவாக இலக்கியம்.:. கவிதை பற்றிய கருத்தாடல்களில் இரண்டு பெரும்போக்குகள் ஆக்கிரமித்து வருகின்றன. அவற்றினைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1.கவிதை (இலக்கியம்) உள்ளுணர்வு சார்ந்த தேடலாக அமையவேண்டும். அப்போதுதான் அது கலைத்துவம் கொண்டதாக இருக்கும். இல்லையேல் அது தட்டைத்தன்மை கொண்டதாக மாறிவிடும். (இவர்கள் இலக்கியத்தில் உள்ளடக்கத்தைவிட உருவத்திற்கே பெருமதிப்பைக்கொடுப்பர்)

2.கவிதை சமூக உற்பத்தியாக, மக்களுக்கானதாக அமைதல் வேண்டும். (இவர்கள் இலக்கியத்தில் உருவத்தைவிட உள்ளடக்கத்திற்கே முதன்மை கொடுப்பர்)

இவர்களில் இருசாராரும் பெரும்பாலும் ஒருவர் படைப்பை ஒருவர் நிகாரிப்பவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் வருகிறார்கள். இலக்கியம் பற்றிய கருத்தாடலில் தமது கருத்தே சரியானது என்று கருதும் எண்ண வெளிப்பாடே இது. சில படைப்புகள் கலைத்துவமிருந்தும் சமூக அக்கறை அற்றவையாக இருக்கின்றன. சில சமூக அக்கறை இருந்தும் கலைத்துவம் அற்றவையாக உள்ளன. பலர் இரண்டாவதைவிட முதலாவதே இலக்கியத்தரம் உள்ளதாகக் கருதுகின்றனர். ஒரு வகையில் அது உண்மையும் கூட. ஆனால் அதன் இலக்கியத்தரம்கூட முழுமையானது அல்ல. இலக்கியத்திற்கு பொருளும் அவசியம். இதனால் இலக்கியத்தில் இவை

இரண்டும் அவசியம் அத்தகைய படைப்புகள் சமூக அழகியல் தளம் கொண்டவையாக விரிகின்றன என்று சிலர் இவை இரண்டின் தேவையையும் வலியுறுத்துகின்றனர். இது முக்கியமான ஒன்றாகும்.

ஆனால் இவை அனைத்திற்கும் அப்பால் இந்திரன் கூறுவதுபோல 'மொழியில் சிறந்த தேர்ச்சி இருக்க வேண்டும்' என்பது மிகவும் முக்கியமானது. இலக்கியம் மொழிக்கலை என்றவகையில் அதனை மொழிப்படுத்துவதில்தான் தங்கியிருக்கிறது. எந்தவொரு கலையும் சமூக அனுபவங்களை கலைரீதியான பரிசோதனைக்கு உட்படுத்தும்போது அவை கிளர்த்தும் அனுபவ உணர்கொதிநிலைகளில் பிறப்பது. இலக்கியத்தில் அது மொழி வழியாக வெளிப்படுத்தப்டுகிறது. இதுவே இலக்கியத்தின் வெளிப்பாட்டு முறையினையும் அழகியலினையும் தீர்மானிக்கிறது. கொன்ஸ்டாண்டின் ஃபெடின் கூறுவது இவ்விடத்தில் மிகவும் கவனத்திற்குரியது.

"எழுத்தாளனுடைய செய்வினை பற்றிய பேச்சு எப்போதும் மொழியில் இருந்தே தொடங்கப்பட வேண்டும். மொழிதான் ஒரு படைப்பின் அடிப்படையம்சமாக எப்போதும் இருக்கும். படைப்பிலக்கியம் என்பது சொற்களால் ஆகிய கலையே. இலக்கிய உருவம் பற்றிய முக்கிய கொள்கையான கட்டமைப்பு என்பது கூட எழுதுவோனுடைய மொழி என்கின்ற தீர்மானம் நிறைந்த, முக்கிய அம்சத்திற்கு இடமளித்தாக வேண்டும்".

எந்தவொரு படைப்பாளியும் தனித்துவமான மொழி வெளிப்பாட்டைக் கொண்டவனாக இருப்பான். அவனது மொழிப்படுத்தும் திறனே, அவனது படைப்பின் அழகியலையும், தரத்தினையும் தீர்மானிக்கிறது. இதனால் ஒவ்வொரு படைப்பாளியும் தனித்துவமான அழகியலோடு இருக்கிறான் எனலாம். இப்பின்புலத்தில் இருந்து சிந்திக்கும் போது இலக்கியத்தில் மொழிப்படுத்துகையே முதலில் முக்கியம் பெறுகிறது. பின்னரே உருவம், உள்ளடக்கம் பற்றிய கருத்தாடல்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று சொல்லத் தோன்றுகிறது.

எளிமையின் அழகியலும் மொழிப்படுத்துகின்ற விதத்தில்தான் தங்கியிருக்கிறது. மிகவும் சதாரண சொற்களைக் கொண்டு சொல்லப்படும் சூழலினால் அல்லது மொழிப்படுத்தும் விதத்தினால் அவை அழகிய கவிதைகளாக உருவெடுக்கின்றன. "படிமம்" உவமை, உருவகம் என்பன கவிதையில் கட்டாயம் கையாளப்பட வேண்டும் என்றோ, ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டு முறைதான் இருக்க வேண்டும்மென்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தப் பரிமாணங்களைக் கொண்டு இருக்க வேண்டும்மென்றோ வலியுறுத்துவது தேவையில்லை என நினைக்கிறேன். கவிஞனின் அனுபவ உணர்வு தன்னியல்பாக வெளிப்பட்டு 'முழுமை'யானதாக வாசக மனதில் தொற்ற வைப்பதே முக்கியம்" எளிமையான சொற்களைக் கொண்டு வாசக மனதை மிதக்க விடுவதில்த்தான் அதன் அழகியல் தங்கி இருக்கிறது.

எளிமையின் அழகியல் பற்றிப் பேசும் போது நாம் கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம், கனதியான வியடயங்களை எளிமையாகக் கவிதையிலே சொல்ல முடியாது வெளிப்படையாக அமைந்தவுடன் கவிதை அழகியலை இழக்கிறது என்பதாகும். கரிகாலன் கருதுவது போல 'எளிமை கனதியான விஷயங்களுக்கு எதிரானது அல்ல' நவீன கவிதைக்குள் உள்நுளையும் போது, பல உதாரணங்களைக் காணலாம். இதற்கு எமக்குக் கிடைக்கும் முதல் உதாரணம் பாரதி. பல கனமான சமூகச் சிந்தனைகளை மிக எளிமையாவும் அழகாகவும் சொன்னவன் பாரதி. இதற்குப் பின்னரே தமிழ்க் கவிதைச் சூழலில் கவிதையில் எளிமை பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. கவிதையின் எளிமையை பலர் எளிமையாகப் புரிந்து கொண்டு

கவிதை என்ற பெயரில் வெற்றுக் கூச்சல்களையும் சினிமாத்தனமான வரிகளையும் எழுதினார்கள் எழுதுகிறார்கள். இதுவே எளிமையான கவிதைகள் மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்தியற்குப் பிரதான காரணமாகும். இவை அனைத்தையும் நீக்கிவிட்டே எளிமையின் அழகியல் பற்றிப் பேச வேண்டும். ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி இன்றைய புதுக் கவிஞர்களும் பன்முக வெளிப்பாட்டு முறையிலே இதனை வெளிக் கொணர்கிறார்கள். இந்த வெளிப்பாட்டு முறையில் ஏற்பட்ட புதிய மாறுதல்களும்தான் அதனை ஓர் புதிய தளத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறது.

இன்றைய அவசர யுகம் எளிமையை, நேரடித்தன்மையை விரும்புகின்றது என பலர் கருதுகின்றனர். ஆனால் தனியே இதனை மட்டும் காரணமாகக் கொள்ளமுடியாது. மாறாக கவிதைக்குப் பின்னால் உள்ள நுண்ணரசியலையும் புரிந்து கொள்ள வேண்டும். தற்போதைய பெரும்பாலான கவிதைகள் அனைத்து அதிகாரத்தையும் கட்டுடைப்புச் செய்பவையாகவும், அதற்கு எதிரான கலகக் குரலை உண்டு பண்ணுபவையாகவும் இருக்கின்றன. அத்தோடு இது வாசகனிடமும் கலகத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற நுண்ணரசியலையும் கொண்டுள்ளன. இத்தகைய சூழலும் ஒன்று சேர்ந்துதான் கவிதையில் எளிமையை ஓர் புதிய அழகியலாக மாற்றியிருக்கின்றது. ஈழத்துக் கவிதைகளைப் பொறுத்தவரை தொண்ணூறுகளுக்குப் பின்னரான பெரும்பாலான கவிதைகள் போரும் அது மனித வாழ்வியலின் அவலங்களையும், அலக்களிப்புகளையும் பேசுபவையாகவும், அவற்றை விசாரணைக்கு உட்படுத்துபவையாகவும் அமைந்தன (இதைவிட வேறு பல பாடுபொருள்களும் இருந்தன). இதனால் பல வேளைகளில் இவை அதிகார மையங்களிற்கு எதிரான எதிர்ப்பின் குரலாக அல்லது கலகக் குரலாக (இது பலதளங்களில் நிகழ்கிறது) அமைந்தன. இவை பெரும்பான்மையாக எளிமையாக அல்லது வெளிப்படையாகச் சொல்லப்பட்டன. சில கவிதைகள் மொழித் தேர்ச்சி இல்லாமல் வெறும் வெற்று வரிகளாகவும், கோசங்களாகவும் நின்றுகொண்டன. சில சிறந்த வெளிப்பாட்டு முறை, மொழித் தேர்ச்சி என்பவற்றால் அழகிய வரிகளாக உருவெடுத்துள்ளன. இத்தகைய முறையில் அமைந்த கவிதைகளின் வெளிப்பாட்டு முறையில் ஏற்பட்ட மாறுதல், பிரச்சினைகள், அதன் அழகியல் என்பனவே இதில் கவனம் கொள்ளப்படுகிறது.

இத்தகைய சூழலை விளங்கிக்கொள்ளாது ஈழத்துக் கவிதைகள் பிரசாரமாக, தட்டைத்தன்மை கொண்டவை என்று பொத்தம் பொதுவாக கூறும் மரபு சில விமர்சகர்களிடையே உண்டு. இங்கு "கவிதை ஒரு பொதுக்கருத்தை பேசிய உடனேயே அது கலைத்தன்மையை இழந்து விடுகிறது. அது பிரசாரமாகிவிடுகிறது என்று பேசும்போதுதான் அபத்தமாகிறது. தமிழ்நாட்டில் அது போன்ற சூழல் இருக்கிறது" இத்தகைய ஒரு பன்மைத்துவமான சூழலை விளங்கிக் கொண்டுதான் ஈழத்துக் கவிதைகளின் எளிமையின் அழகியல் பற்றிச் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

இப்பின்புலத்தில் இருந்து ஈழத்துக் கவிதைகளை நோக்குகின்ற போது, பல்வேறு வெளிப்பாட்டு முறைகளில் உருவான கவிதைகள் நம்மிடையே உள்ளன. கூடவே அவை பன்முக அழகியலையும் தந்திருக்கின்றன. அதன் ஒரு கூறாக (சில வேளை பெரும் போக்காக) எளிமையின் அழகியலாய் உருவெடுத்துள்ளன. இப்பின்னணியில் கவிதைகளைத் தந்த பல கவிஞர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். அவ்வாறு தமக்கான கருத்தியல் தளத்திலே இருந்து கொண்டு கவிதைகளை எளிமையாகவும், அழகாகவும் சொல்ல முற்பட்டோரில் கருணாகரனும் ஒருவர். அவரது கவிதைகளில் இவை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்று அறிவதன் மூலம் ஈழத்துக் கவிதைகளில் எளிமையின் அழகியலின் இயங்கு தளங்களை ஓரளவு அறிய முற்படலாம்.

ஈழத்துக் கவிதைப் பரப்பில் கலைத்துவமான கவிதைகளைத் தந்தவர்களுள் கருணாகரனும் ஒருவர். இதுவரை "ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்" "ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்" என்ற இரு கவிதைத் தொகுப்புகளைத் தந்துள்ளார். போர் உக்கிரம் பெற்ற சூழலில்

"அரசியலுக்கு முதன்மை கொடுத்து கலை இலக்கியப் படைப்புகளை உருவாக்கும் போக்கு வலுவுடையதாக இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. கருணாகரனின் கவிதைகளிலும் போர்ச் சூழல், கைவிடப்பட்ட முக்கிய வீதி, அழிக்கப்பட்ட கிராமம், படையினர் மட்டும் உள்ள ஊர், விமானக்குண்டு வீச்சின் கோரம், விமானங்களைச் சுட்டுவீழ்த்தல், அகதி வாழ்க்கை, மீள்குடியேறிகளின் கதை, சமாதானம், அரசியல் பேச்சுவார்த்தை என்ற பெயரிலான கடந்தகால - நிகழ்கால செயற்பாடுகளின் போது காணப்பட்ட / காணப்படும் கபடம் மாறாத அவலச்சூழல், தொடர் செல்வீச்சின் போது ஓயும்பொழுதிற்கு காத்திருக்கும் தவிப்பு நிலை என்பன வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் கருணாகரனின் படைப்பு நோக்கு "குறுகியதாக" இல்லாததால் இவரது படைப்புலகினுள் காதல், பிரிவுத்துயர், நிலக்காட்சி, கடலும் மழையும், பூக்களும் வண்ணத்துப் பூச்சிகளும், நட்பின் துரோகம், முதுமை போன்றவையும் உணர்திறனுடன் உள்வாங்கப்பட்டுள்ளன"

கருணாகரனின் கவிதைகளில் முக்கிய பலமாக நமக்குத் தெரிவது அனுபவ வெளிகளை எளிமையான மொழிப்படுத்தலுக்கு உட்படுத்தியிருக்கும் விதம்தான். கடினமான படிமம், உவமை, உருவகம் எதுவும் இல்லாமல் கவிஞனின் அனுபவ உணர்வினை வாசக மனதில் முழுமையாக தொற்றவைப்பதில் கருணாகரனின் அதிகமான கவிதைகள் வெற்றி கண்டுள்ளன. இவரது கவிதைகளுக்குள் உள்நுழைகின்ற போது, இத்தன்மையை மிக ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, யுத்தம் சூழப்பட்ட மண்ணில் வாழும் கவிஞனின் அனுபவ வெளிகள் மொழி வழியே வழிகின்றன இப்படி நம்பிக்கையற்று.

"யுத்தம்
எல்லா நிரந்தரங்களையும்
சிதறடித்து விட்டு
நிச்சயமின்மையை
ஒவ்வொரு வாசலிலும் விட்டுச் செல்கிறது"

(ஒளி நிரம்பும் வித்தை)

"கடிகாரங்களுக்குள் திணறுகிறது
சூரியன்"

(நீலம் பாரித்த வெண்மை)

"எல்லா நிச்சயமின்மைக்கும் அப்பால்
இந்த வானத்தின் நிரந்தரம்
என்னைத் திகைப்பூட்டிக் கொண்டேயிருக்கிறது"

(வானத்தின் நிரந்தரம்)

இவ்வரிகள் எப்போதும் வாசகனின் மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்துகின்றன. பதுங்குகுழி நாட்களின் அனுபவம் இப்படி இருக்கிறது.

"மரணவளையமாகி விரிந்திருக்கிறதா

இதன் மௌனக் கிடத்தல்"

(சுற்றி வளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்குகுழி)

கருணாகரன் தன்னுடைய கவிதைகளில் யுத்தம் நிறைந்த சூழலில் போராளிகள், படையினர், அவர்களின் மீதான மக்களின் எண்ண அலைகள் எல்லாவற்றையும் தனது கவிதைகளுக்குள் கொண்டுவந்துள்ளார். இத்தகைய சூழல் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. உதாரணமாக,

"என்னுடைய புன்னகையைத் தந்து விட்டு

எல்லோருடைய கண்ணீரையும்

எடுத்துச் செல்கிறேன்"

மாபெரும் சவப்பெட்டியில்

நிரம்பியிருக்கும் கண்ணீரை போக்கி விடுகிறேன்.

கள்ளிச்செடிகள் இனியில்லை.

காற்றுக்கு வேர்களில்லை

ஒளிக்குச் சுவடுகளில்லை.

எனது புன்னகை

நிலவின் ஒளியாயிருக்கட்டும்"

(ஒரு பயணியின் குறிப்புரை).

என்று போராளி ஒருவன் நாடு, நாட்டு மக்கள் மீது கொண்ட பற்றுறுதியை வெளிப்படுத்தும் விதமாக அமைகின்ற வரிகளும்

"..... ..... .....

வெற்றி பூத்து வீசியது வாசம்

மனமெழுந்து

சுழன்று

பறந்தது வானில்

கணமே

சரிந்து வீழ்ந்தது போனவர் நினைவில்

யார் முகம் வீழ்ந்ததோ?

யார் குருதி வடிந்ததோ?

எனது எல்லாக் கீதங்களும் காயமுற

வீழ்ந்த வீரர் நினைவெழுந்தது.

நாளும் இரவுகள்

தீயில் மூண்டவாறும்

தேனில் இளைந்த படியும்

இப்படியே இப்படியேதான்

ஒரு பறவையை வருடவும்

ஒரு மலர்ச்செண்டை முத்தமிடவும்

இன்னுமென்ன செய்யவேண்டும் இப்படி இப்படியே"

(தீயாயும் நிழலாயும்)

என்ற போராளிகள் மீது நாட்டு மக்களின் நினைவுகளாய் வரும் வரிகளும் இதனை வெளிக்காட்டி நிற்கின்றன. இதே போன்று சூதான சாமாதானத்தை இப்படி எழுதிச் செல்கிறார்.

"எரிக்கப்பட்ட நூலகத்தை

வெள்ளையடித்து விட்டிருக்கிறார்கள் அழகாக

எரிந்த புத்தகங்களின் சாம்பலிலிருந்து

இன்னும் மீண்டெழவில்லை

நம்பிக்கையளிக்கும் எந்தச் சொல்லும்

..... ...... .......

எல்லா முகங்களும் சிரித்துக் குலுங்குகின்றன

ஒரு முகம் டொலரினுடையது

ஒரு முகம் ஜென்னினுடையது

ஒரு முகம் யூரோவினுடையது

ஒரு முகம் ரான் னினுடையது

ஒரு முகம் கொர்நே யினுடையது

பொறியில் வீழ்கிறது நம்பிக்கை

எப்போதும் தீப்பிடிக்கத் தயாரான சமாதானம்"

(விழியோடிருத்தல்)

இத்தகைய கவிதைகளைப் பொறுத்தவரை பூடகத்தன்மை நிறைந்த சொற்களைத் தேடி அலையவில்லை. எளிமையான சொற்களைக் கொண்டு சொல்லப்படும் சூழலினால் அவற்றைக் கவித்துவம் மிக்க வரிகளாக மாற்றியிருப்பதுதான். இதுவே இக்கவிதைகளின் சிறப்பம்சம். இதனால் இவை கடினமான படிமங்கள், உருவகம் என்பவற்றைக் கையாழ்வதன் மூலம் மாத்திரமே நல்ல கவிதைகளைத் தரமுடியும் என்ற பிம்பத்தை உடைத்திருக்கின்றன. சிலர் இயற்கைப் பொருட்களை வைத்துக் கொண்டு அவற்றின் ஊடாக மறைமுகமாகக் கவிதைகளைச் சொல்கிறார்கள். கருணாகரனும் 'யாருடைய வீடு' என்ற கவிதையையும் அப்படியே வெளிப்படுத்தி உள்ளார்.

எளிமையான வரிகளில் கவியைச் சொல்ல முற்படுகையில் இன்னுமொரு சிறப்பம்சம் மொழியை பரிசோதனைக்கு உட்படுத்துவது. இதனால் இன்றைய கவிதைகள் பலவும் அதன் சொல்லாடல் முறைமையின் தர்க்கங்களைக் கலைத்திருக்கின்றன. இடையிடையே உரைநடைக்குரிய பந்தி அமைப்பிலே கவிதையைச் சொல்லுதல், கவிதையில் உபதலைப்புகள் என்பவற்றைக் கையாண்டு கவிதையைக் நகர்த்தல் போன்ற வெளிப்பாட்டு உத்திகைளை கருணாகரன் கையாண்டுள்ளார். உதாரணமாக, 'எமது வருகை', 'நகர்மீள்படலம்' போன்ற கவிதைகளைச் குறிப்பிட்டுச் சொல்லலாம். இது அவரின் பரிசோதனை முயற்சியின் வெளிப்பாடு எனலாம்.

பெரும்பான்மையான தருணங்களில் சரியான மொழி வெளிப்பாட்டு முறைமை இல்லாத போது, அவை வெறும் வெற்று வரிகளாகவும், பரிசோதனைகளாகவுமே நின்றுவிடுகின்றன. இன்று பல கவிதை என்ற பெயரில் இத்தகையவையே வெளிவருகின்றன. சிலரது கவிதைகளில் இடையிடையே இத்தன்மையைக் காண முடியும். கருணாகரனின் கவிதைகள் சிலவற்றிலும் இத்தகைய தன்மையைக் காண முடிகிறது. உதாரணமாக 'சகிப்பு மீறியெழும்' என்ற கவிதையில்,

"பறிக்கப்பட்ட

எனது வீடுகள் எனக்கு வேண்டும்

அந்த வீட்டையும் தோட்டத்தையும்

நான் பெறவேண்டும்

உணவு

உடை

உறையுள் என்பவற்றுடன்

பாதுகாப்பும் மிக மிக அவசியமாகிவிட்டது''

(சகிப்பு மீறியெழும்)

என்பன போன்ற வரிகள் கவித்துவமற்ற வெற்றுக் கூச்சலாகவே நிற்கின்றன. கவிதை எல்லாவற்றிலும் தொடங்கியதில் இருந்து இறுதிவரை அதே தொனி அல்லது உத்வேகம் இருக்கும் என்று சொல்ல முடியாது. சில கவிதைகளைத் துண்டு துண்டாவும் ரசிக்க முடிகிறது. கருணாகரனின் நீளமான கவிதைகளில் இத்தன்மை அதிகமாக உண்டு (தனிக் கவிதைகள் சிலவற்றிலும் இருக்கிறது. இத்தகைய தன்மைகளால் இவற்றை முற்று முழுதாகத் தோல்விகள் என்று நம்மால் ஒதுக்க முடியவில்லை. கவிதையை எளிமையாகச் சொல்லும் போது, அதில் வருகின்ற ஒவ்வொரு சொல்லையும் தெரிவு செய்வதும் அதனை சரியாக ஒழுங்குபடுத்துவதும் முக்கியம். இவரது சில கவிதைகள் இதற்கான தேவையை உணர்த்தி நிற்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

இவை எல்லாவற்றையும் மீறி கருணாகரன் பல சிறந்த கவிதைகளை நமக்குத் தந்திருக்கிறார். இவரது எளிமையான மொழிப்பழக்கமும் வெளிப்பாட்டு முறைமையும் இதனைச் சாத்தியமாக்கியுள்ளன. கருணாகரனின் சித்திரிப்புத்திறன் மிக்க மொழிப்படுத்தலின் வெளிப்பாடாய் வரும் கவிதை எனப் பலரும் கருதும் 'காட்சி' என்ற கவிதை உதாரணமாகத் தரலாம்.

''கடலைப் பிளந்து ஊடுருவித் தெறிக்கும்

ஒளியில்

தடுமாறி வீழ்கிறது ஒரு பறவை.

சிறகுகளின் நிழல்

நடுங்கும் அலைகளில் பிரதிபலித்துத் துடித்தழிகிறது

பளிங்கெனத் தகிக்கும் கடல்

உஷ்ணத்தில் மையங்கொள்கிறது

மீன்கள் வழுக்கிச் செல்கின்றன

வழுக்கிச் செல்லச் செல்ல

ஒளி ஊடுருவிச் செதில்களில் மோதி மோதித் தெறிக்கிறது

கடல் பேரின்பத்தில் திளைக்கிறது

அது காற்றின் மடியில் அசைந்தாடுகிறது

கடலில் வீழ்ந்த பறவை

ஒளியைக் கவ்வி

ஒளியிலேறிப் பறக்கிறது மீண்டும்''

(காட்சி)

இவ்வரிகள் சித்திரிக்கும் முறையால் வாசகனிடம் ஒட்டிக் கொள்கிறது. மேலும் வாசிப்பைக் கோரும் போது, வெவ்வேறு புரிதல்களை ஏற்படுத்தக் கூடும். வாசகனை பல வழிகளில் மிதக்க விடுகின்ற கவிதைக்கான தருணங்களும் இக்கவிதையில் இருக்கினறன.

இப்பின்புலத்தில் இருந்து பாரக்கிற போது சிறந்த சொற் தேர்வு, சொல்லாடல் முறை என்பன கவிதையைக் கலைத்துவம் மிக்கதாக மாற்றுகின்றன. கருணாகரனின் எளிமையான சொற்களைக் கொண்டு, அதனை மொழிப்படுத்தும் விதம் பெரும்பாலான கவிதைகளைக் கலைத்துவம் மிக்கவையாக ஆக்கியிருக்கின்றன. கவிதையை எளிமையாகச் சொல்வதில் உள்ள பலம், பலவீனம் இவரது கவிதைகளிலும் இருக்கிறன. சில இடங்களில் கவிதைகள் முழுமையடையவில்லை. இதனால் கவிதையை முழுமையாக ரசிக்க முடியவில்லை. ஆனால் பெரும்பாலும் அவற்றைத் தோல்விகள் என்று முழுமையாக உணர முடியாத அளவிற்கு சொற்களைப் பெய்து, அவற்றுக்குள் நம்மை நடமாடவிடுகிறார். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் எளிமையான முறையிலே கவிதையைக் கலைத்துவமாக சொல்வதற்கான மொழிப்பழக்கம் கருணாகரனுக்குச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இதுவே ஈழத்துக் கவிதைச் சூழலில் இவரை தனித்துவமான அடையாளம் மிக்க கவிஞராகவும், கவனிப்புக்குரியவராகவும் மாற்றியிருக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. கரிகாலன்., (2005) நவீன கவிதையின் போக்குகள், சென்னை: மருதா. ப.68.
2. ஜெயமோகன்., (2006) "அகமெரியும் சந்தம் - சு. வில்வரத்தினம் கவிதைகள்", காலம்(நவம்பர்). ப.50.
3. பாரக்க: யேசுராசா.அ., (2007) குறிப்பேட்டிலிருந்து, யாழ்ப்பாணம்: அலை வெளியீடு. ப.46.
4. மேலது. ப.74.
5. இந்திரன், ஜெயபாலன். வ.ஐ.ச., (2004) உரையாடல்: கவிதை அனுபவம், சென்னை: சந்தியா பதிப்பகம். ப.18.
6. யேசுராசா.அ., மேலது. ப.74.
7. கருணாகரன்., (2003) ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள் (ப.நி.கு), முல்லைத்தீவு: மகிழ். ப.26.
8. மேலது. ப.38.
9. கருணாகரன்., (1999) ஒரு பொழுதுக்கு காத்திருத்தல் (பொ.கா), முல்லைத்தீவு: மகிழ். ப.59.
10. கருணாகரன்., ப.நி.கு, மேலது. ப.11.
11. மேலது. ப.09.
12. மேலது. ப.04.
13. மேலது. ப.68,70.
14. கருணாகரன்., பொ.கா, மேலது. ப.11.

# கற்றல் குறைபாடுகளுடன் விளங்கும் மீத்திறன் மாணவர்கள்.
# Gifted Children wiyh Learning Disabilities.

ஆசிரியத் தொழில் இன்று ஒரு வாண்மையாக (Profession) ஓர் உயர் தொழிலாக - மதிக்கப்படுகிறது. ஓர் உயர் தொழில் எப்போதும் அறிவை அடித்தளமாகக் (Knowledge-based) கொண்டிருப்பதோடு, தனது வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவதாகவும் (Client -centred) அமையும். எனவே, ஆசிரியர்கள் தமது மாணவர்களை அவர்களின் இயலுமைகள் என்பவற்றோடு நன்கு அறிந்திருக்க வேண்டும். அத்தோடு அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

வகுப்பறைகளில் தமது மாணவர்களைத் தொடர்ச்சியாக அவதானிப்பதற்குரிய சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்குண்டு. இந்த அவதானிப்புகளுக்கூடாக அம்மாணவர்களுக்குரிய தனியான தேவைகள் பற்றிய பெறுமதி மிக்க தகவல்களை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அவதானிப்பை நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சரியீட்டுப் பட்டியலுடன் (Checklist) மேற்கொள்ள முடியுமாயின், ஒழுங்கு முறையில் அமைந்த தகவல்களைக் கொண்ட இச்சரியீட்டுப் பட்டியல் விசேட தேவைகளையுடைய மாணவர்களை இனங்காண்பதற்கான பெறுமதிமிக்க ஒரு கருவியாக அமையும். அதேவேளை, மாணவர்களிடத்து அவதானிக்கப்பட்ட இடர்பாடுகளை அல்லது விசேட இயல்புகளைக் கவனத்திற் கொள்வதற்கும் இது அடிப்படையாக அமையும்.

மாணவர்களின் கற்றல் சார்பான அல்லது நடத்தை சார்பான இடர்பாடுகள் குறித்த தகவல்களையும் முறையாகப் பெற்றுக் கொள்கின்ற போதே அவர்களுக்கான கற்றல் நிகழ்ச்சித் திட்டங்களைப் பொருத்தமாக வகுத்து, வகுப்பு நடைமுறைகளில் நெகிழ்ச்சிக்கு இடமளித்து, அம்மாணவர்கள் தொடர்பான கற்றற் கற்பித்தற் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். விசேட தேவைகளையுடைய மாணவர்களின் தேவைகளின் அடிப்படையில் அவர்கள் வகுத்து நோக்குகின்ற போது அப்பகுதிகளில் அடங்குவோரின் இயல்புகளிடையே பல ஒற்றுமைகளைக் காணமுடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை, பல்வகைத்தேவைகளையுடைய பிள்ளைகளின் தேவைகள் பின்வரும் பதின்மூன்று (13) பகுதிகளுள் அடக்கப்பட்டன.

| | |
|---|---|
| • மீத்திறனும் விசேட ஆற்றலும் | Gitted andtalented |
| • கற்றல் இயலாமைகள் அல்லது குறைபாடுகள் | Learning disabilities |
| • மொழிதலும் மொழிகுறைபாடுகளும் | Speech and language impairment |
| • மெதுவான உளவளர்ச்சி | Mentealretardation |
| • உக்கிரமான மனவெழுச்சிப்பிரச்சனைகள் | Emotional disturabance |
| • பலவித இயலாமை | Multiple disabelities |
| • உடலியற் குறைபாடுகள் | Orthopedic impairment |
| • கேட்டற் குறைபாடுகள் | Hearing impairment |
| • பார்வைக் குறைபாடு | Visual impairment |

- பூரணமாக பார்வைக்குறைபாடும்கேட்டற்குறைபாடும் Deaf - blindness
- வேறு சுகாதாரக்குறைபாடுகள் Other helth impairment
- தற்சிந்தனை Autism
- மூளைப்பாதிப்பு Brain injury

இவ்வகைப்பாட்டின் பிரகாரம் மீத்திறன் மிக்க மாணவர்களும் விசேட தேவையுடைய மாணவர்களாகவே இனம் காணப்பட்டுள்ளனர் பிள்ளைகள் கொண்டு விளங்கும் பல்வேறு ஆற்றல்களைப் பொறுத்தவரை, சராசரியான பிள்ளைகளை விட சிறப்பான நிலையில் காணப்படும் பிள்ளைகளே மீத்திறன் மிக்க பிள்ளைகளாக கருதப்படுகின்றனர்.

இப்பிள்ளைகள் இடத்தே உயர் நுண்மதியும் படைப்பாற்றலும் சிறப்பான தலைமைத்துவ ஆற்றலும் கட்புலக் கலை மற்றும் ஆற்றல் கலைகளில் சிறப்புத் தேர்ச்சியும் தொழில்நுட்பத் திறன்களில் சிறப்புத் தேர்ச்சியும் காணப்படும். இவ்வாறான விசேட ஆற்றல்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கொண்டுள்ள பிள்ளையை மீத்திறனுள்ள பிள்ளையாக இனம்கண்டுள்ள நிலையில், மீத்திறன்மிக்க பிள்ளையொன்றிடத்தும் கற்றல் குறைபாடுகள்(அல்லது இயலாமை) காணப்படலாம் என்ற கருத்து, சொல் முரணணியை (Oxymoron) ஒத்ததாய் நம்பத்தகாத ஒன்றாக சிலரால் உணரப்படக் கூடும். இதன் பேறாக, சில வழிகளில் மீத்திறன் மிக்கவர்களாகவும் ஏனையவற்றில் குறைபாடுடையவர்களாகவும் விளங்குகின்ற பிள்ளைகள் பாடசாலைகளால் கண்டுணரப்படாமலும் கவனிக்கப்படாமலும் விடப்பட்டுவிடுகிறார்கள்(பொதுவாக, செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், காரணங்காணல் அல்லது கவனித்தல்) போன்ற திறன்களை அடையும் போது பயன்படுத்தும் போதும் ஏற்படும் குறிப்பிடத்தக்க சிரமங்களின் பல்வேறு ஒட்டு மொத்த வெளிப்பாடுகளே கற்றல் குறைபாடு அல்லது இயலாமை (Learning disability) எனக் குறிப்பிடப்படுகின்றது. புலன்களில் ஏற்படும் குறைபாட்டினை புலன் ஊனம்(Sensory handicap) என்றும், நுண்மதியில் ஏற்படும் குறைபாட்டினை நுண்மதி ஊனம்( Intellectual handicap) என்றும் குறிப்பிடப்படும்வேளை, இவற்றில் இருந்து வேறுபட்ட ஒன்றாகவே கற்றல் குறைபாடு என்பது கருதப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பெருமைக்குரிய விஞ்ஞானிகளுள் ஒருவராக கருதப்படும் அல்பேர்ட் ஐன்ஸ்ரீன் மரபுரீதியான விஞ்ஞான ஏடுகளை தொடர்ச்சியாக மீள்பரிசீலனைக்கு உட்படுத்தி, எவருமே அதுவரை எய்யாத நேர்மையான நேர்த்திமிகு முடிவுகளை வெளிப்படுத்தியமைக்காகப் புகழ்பெற்றவர். அவர் ஒளியின் சக்திச்சொட்டுப் பண்பை விளக்கியதோடு, மூலக்கூற்று இயக்கம் பற்றி விபரித்து சார்பியக்கம் குறித்த விசேட கொள்கையையும் அறிமுகம் செய்தார். ஆனால் இப் புத்திக்கூர்மைக்கும் அப்பால் பாடசாலைக் காலத்தில், ஓரிடத்தில் அமைதியாக இருக்காமையினாலும் கலந்துரையாடல்களின் போது அருவநிலைச் சிந்தனைகளுக்குத் திசைமாறிச் சென்றமையாலும் நெறிமுறைகளை அநுசரித்துப் போகாமையினாலும் மெல்லக் கற்கும் ஒரு மாணவனாகவே ஐன்ஸ்ரீன் கருதப்பட்டார். ஐன்ஸ்ரீனின் ஆரம்ப பாடசாலைக்கால நடத்தைகள் பற்றிய குறிப்புக்களைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது இன்றைய நவீன காலத்திலான அவர்பற்றிய ஆய்ந்தறி மதிப்பீடு, கவனக் குறைபாட்டுடன் கூடிய மிகைச் செயற்பாட்டுக் கோளாறு (ADHD) உள்ள ஒருவராகவே அவரை இனம் காட்டும்.

இந்த நிலைமையை ஒத்ததாகவே "கற்றல் குறைபாடுகளுடன் விளங்கும்மீத்திறன் மாணவர்கள்" என்ற கருப்பொருள் இங்கு எடுத்தாளப்படுகின்றது. ஒரே பிள்ளையின் பரந்தளவு வேறுபாடுள்ள நிலைமைகள் இடம்பெறுகின்ற நிலைமையில் அப்பிளளையைக் கையாளக்கூடிய வகையில் பாடசாலைத் தொகுதி வடிவமைக்கப்பட்டிருக்காமையினால், கற்றல் குறைபாட்டுடன் விளங்கும் மீத்திறன்மிக்க மாணவர்கள், அவர்களிடத்திற் காணப்படும் குறைபாடுகளினூடாக அதலபாதாளத்தில் வீழ்ச்சியடையக் கூடியதாக ஏற்பட்டுவிடுகின்றது. உண்மையில் அண்மைக்காலங்களில்தான் உயர் ஆற்றல்களும் கற்றல் இடர்பாடுகளும் ஒன்றாக ஒருவரிடம் இடம்பெறலாம் என்பதைக் கல்வியாளர்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் மாணவர்களின் வகைப்பாடுகள்.

கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் நிலைமை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டோர், இரட்டைத் தன்மையான அசாதாரண இயல்புகளைக் கொண்ட இப்பிள்ளைகளை மூன்று உப குழுக்களாக இனம் கண்டுள்ளனர்.

1. முதலாவது குழு மீத்திறன் உள்ள, ஆனால் பாடசாலையில் கற்றல் இடர்பாடுகளை வெளிக்காட்டுகின்ற பிள்ளைகளை உள்ளடக்குவதாகும். குறைந்தளவிலான ஊக்கல், சோம்பல் அல்லது தாழ்மட்டத்திலான சுயகணிப்பு போன்றவை காரணமாக, இக்குழுவில் அடங்குவோர் குறைவாகவே வினையாற்றலைக் காட்டுவதோடு, அநேக சந்தர்ப்பங்களில் குறைவான அடைவு கொண்டோராகவே(Underachievers) இனம் காணப்படுகின்றனர். இதன் விளைவாக, இவர்களது கற்றல் இடர்பாடுகள் உணரப்படாமலே இருப்பதோடு தமது சகபாடிகளைவிட மிகவும் தாழ்வான நிலைக்கு இவர்கள் வீழ்ச்சியடைந்து விடுகின்றனர்.

2. இரண்டாவது குழுவில், கற்றல் குறைபாடுகளுடன் கூடியவர்களாக ஆய்ந்தறியப்பட்டபோதும் அவர்களின் உயர் ஆற்றல்கள் ஒருபோதும் கண்டுணரப்படாமலுள்ளது. இம் மாணவர்களின் உயர் ஆற்றல்கள் கண்டுணரப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் மீத்திறன் மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப்படாமல் அந்நிகழ்ச்சித்திட்டங்களினூடாக இம் மாணவர்கள் பெற்றக்கொள்ளக் கூடிய பயனையும் இழந்துவிடுகின்றார்கள்.

3. மூன்றாவது குழு, இயலுமைகளும், இயலாமைகளும்(Abilities and disabilities) ஒன்றையொன்று வெளித்தெரிய விடாமல் மறைக்கின்ற வகையிலான இயல்புகளைக் கொண்ட பிள்ளைகளைக் உள்ளடக்குவதாகும். உண்மையில் ஏனைய குழுக்களுடன் ஒப்பிடும் போது இக் குழுவிலேயே அதிக எண்ணிக்கையானோர் காணப்படுவர் இவர்கள் சராசரி மாணவர்களாகவே கருதப்படுவதோடு, கற்றல் இடர்பாடுகளைக் கொண்டிருப்பவர்களாகவோ அல்லது விசேட தேவைகளை உடையவர்களாகவோ கண்டுணரப்படுவதே இல்லை, இப்பிள்ளைகள் நன்றாகத் தொழில்படுவதுபோலத் தோன்றினாலும், உண்மையில் இவர்கள் தமது முழு வலுவுடன் தொழிற்படுவதே இல்லை, பாடசாலை உயர்கல்விக் காலத்தில், கல்விச் செயன்முறை இவர்களுக்கு கடினமாக அமைவதோடு, இவர்களின் உண்மையான முழுவலு(Truepotential) உணரப்படாமலே போய்விடுகின்றது.

இம் மூன்று குழுக்களிலுள்ள மாணவர்கள் யாவருமே, அவர்களின் முழுவலுவும் கற்றல் இடர்பாடுகளும் நன்கு உணரப்படாதவரை, சமூக, மன்வெழுச்சிப்பிரச்சினைகள் தொடர்பாக ஆபத்து விளிம்பிலுள்ளோர் ஆவர். கற்றல் குறைபாடுகளுக்காகவோ அல்லது மீத்திறனுக்காகவோ மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான செயல் நடவடிக்கைகள் ஒன்றையொன்று புறந்தள்ளுவனவாக அமைய முனைவதால், மாணவர்களை இனம்காணும் செயன்முறை காரணமாக இப்பிரச்சினை மேலும் சிக்கலாகி விடக்கூடும், இதன் விளைவாக பாடசாலைகளில் விசேட தேவைகளை உடைய மாணவர்களாக இனம் காணப்படும் எந்தவொரு வகைக்குள்ளும் இவர்கள் அடக்கப்படாமற் போகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்ப்பட்டு விடுகின்றது.

இனம் காணுதலிலுள்ள இடர்பாடுகள்.

விசேட திறனாற்றல்களுடனும் கற்றல் இடர்பாடுகளுடனும் கூடிய பிள்ளைகளை சரியான இனம் காண்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகளைக் கண்டறிவதில் இன்றுவரை ஆய்வாளர்கள் வெற்றிபெற்றார்களில்லை. அறிவாற்றல்சார் மீத்திறனையும் கற்றல் இடர்பாடுகளையும் கொண்ட சாத்தியமான சேர்மானங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருத்தலால். நம்பகமான அளவீடுகளையும் கொண்ட ஒரு தொகுதியை (bahery of measurements) வடிவமைக்கும் முயற்சி வெற்றியளிக்குமென ஆய்வாளர்கள் இணங்கியதில்லை. ஆனாலும் இவ்வாறான ஒரு அளவீட்டுத் தொகுதியில் அடைவுச் சோதனைகள், நுண்மதிச்சோதனை, அறிக்கைச் செயற்பாட்டு முறைமைகளை வெளிக்காட்டும் காட்டிகள், நடத்தைசார் உற்றுநோக்கல்கள் என்பன உள்ளடக்கப்படவேண்டும். என்பதில் கருத்து வேறுபாடில்லை. எவ்வாறாயினும் கற்றல் குறைபாடுகளோடு கூடிய மீத்திறன் மாணவர்களை நேரகாலத்திலேயே இனம் கண்டு தேவைகளையும் திறமைகளையும் ஆசிரியர்கள் உணர்ந்து பொருத்தமாக செயற்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படவேண்டியதாகும்.

கற்றல் குறைபாடுகளுடன் கூடிய மீத்திறன் மாணவர்களுக்கு உதவும் உபாயங்கள் பல இன்று கல்வியாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. இவற்றில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலும், மாணவர்கள் தமது சொந்தக் கறறலுக்கான பொறுப்பை ஏற்கச் செய்தலும் முக்கியமானவை. மாணவர்கள் தமது குறைபாடுகளை வெற்றிகொள்வதற்குத் தொழில்நுட்பம் உதவும். அதேவேளை, தமது சொந்தக் கற்றலுக்கான பொறுப்பை மாணவர்களே ஏற்கச் செய்யும் உபாயங்கள். இம் மாணவர்கள் தமது திறமைகளைத் தாமேயுணர்ந்து, தமத குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வழிகோலும். இன்று பாடசாலை ஆசிரியர்கள் யாவருமே இவ்வாறான உபாயங்களை அறிந்திருத்தல் அவசியம் என்பது, அவர்களின் வாண்மைத் தேவையாகும்.

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்டவிரிவுரையாளர்
கல்வியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பாடசாலைகளை மேம்படுத்தும் உபாயங்கள்.

**ந.அனந்தராஜ் B.A (Hons) M.A**
**Dip.in Edu.**
**Dip.in Mass Media,**
**SLPS - I, SLEAS - III**

இலங்கையின் கல்வி முறைமையானது, ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய நாடுகளைப் போல் அல்லாது, அனைத்து மக்களையும் சென்றடையக்கூடிய வகையில் பரவலாக்கப்பட்டுள்ளது. 1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, நாட்டின் அரசியல் அதிகாரங்கள் உள்ளூர் மேலோர் குழாத்திடம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கல்வி கற்கும் வாய்ப்பும், உரிமையும் பரவலாக்கப்பட்டன. அதுவே, இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், சமூக அசைவியக்கத்திலும் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனைத் தொடர்ந்து, இலங்கைக் கல்வி வரலாற்றில் பின்வரும் புரட்சிக்கரமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

* இலவசக் கல்வித் திட்டம்
* சுய மொழிக் கல்வி அறிமுகம்
* மத்திய மகாவித்தியாலங்களின் தோற்றம்
* உதவி பெறும் மற்றும் தனியார் முகாமைத்துவம் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டமை.
* நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் பொதுக் கல்வித்திட்டம் அறிமுகம்.
* இலவச பாடநூல், இலவச சீருடை விநியோகம்.
* மதிய உணவு வழங்கல் திட்டம்.

இவ்வாறான திட்டங்களினூடாக கல்வித் துறையில் ஏற்பட்ட எழுச்சியானது, இலங்கையில் 96% க்கும் அதிகமான எழுத்தறிவுள்ள மக்களை உருவாக்கி, தெற்காசியாவில் கல்வியில் உன்னதமான ஒரு இடத்திற்கு இலங்கையை உருவாக்கியுள்ளது.

இவற்றின் விளைவாக நாட்டில் உள்ள சுமார் 10,000 பாடசாலைக்கும் இடையேயும், மத்திய அரசுடனும் தொடர்பு கொள்ளக்கூடியவாறான ஒரு வலைப்பின்னல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இது பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தபோதும், பின்வரும் பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்தியிருந்தமை, .பல்வேறு ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

* பாடசாலை அதிபர்களுக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை.
* தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரங்கள் மத்திய, மாகாணங்களிடம் குவிக்கப்பட்டிருந்தமை.
* உள்ளூர் அதிகாரங்களின் தலையீடுகள்
* கிராம, நகர வேறுபாடுகள் இன்றி நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஒரே தரத்தில் வைத்து வளங்கள், பயிற்சிகள் போன்றவற்றை வழங்கியமை.
* தேசிய பாடசாலைகள் வளர்த்தெடுக்கப்பட்டமை.

போன்றவற்றால் ஒரு சில பாடசாலைகளும், நகரப்புறப் பாடசாலைகளும் மற்றும் அரசியல் ரீதியாகச் செல்வாக்குப் பெற்ற பாடசாலைகளும் மேலோங்கி வர, கிராமப்புற பின் தங்கிய பல பாடசாலைகள் மேலும் மேலும் பின்னடைவைச் சந்தித்து வந்தமை நாட்டில் கல்விக்கான சமவாய்ப்பையும், சம உரிமையையும் கேள்விக்குரியதாக்கியது.

இவற்றின் விளைவாக நகரப் புறங்களில் படித்த சமூகத்தினரின் மேலாதிக்கமும், கிராமப் புறங்களில் சிவனோபாயத் தொழிலையே நம்பி வாழும் பாமரர்களின் தொகையும் அதிகரித்து சமமற்ற தன்மையை ஏற்படுத்தியிருந்தது.

இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் நாட்டின் பொருளாதாரத்திலும், அரசியலிலும், அந்தஸத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமையினால் இலங்கை பலரால் விமர்சிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளினால், இலங்கையின் கல்வி வரலாற்றில், பின்வரும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

* அதிபர்களின் அதிகாரங்களை அதிகரித்தலும், வலுவூட்டலும்.(Empowerment)
* பாடசாலைகளில் சமூகத்தினரின் ஈடுபாட்டை அதிகரித்தலும், பாடசாலைகளின் உரிமத்தை (Ownership) வழங்குதலும்.
* நடைமுறை சார்ந்த மற்றும் கலைத்திட்ட மாற்றங்களைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல்.
* பாடசாலைகள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை என்ற அடிப்படையில் அவற்றின் தேவைகளை நிறைவு செய்தல்.
* கல்வி வாய்ப்புக்களில் சமத்துவம் ஏற்படுத்தல்.
* பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பாடசாலைக்கும் மாணவர்தொகை, வகுப்புக்களின் தரங்களின் (ஆரம்ப,இடைநிலை) அடிப்படையில் தரமான உள்ளீட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்து அவற்றை தேர்ச்சி அடிப்படையில் உரிய முறையில் பயன்படுத்தவும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தவும் தர உள்ளீட்டு நிதி ஒவ்வொரு பாடசாலைக்கும், ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்தல்.
* பாடசாலை அபிவிருத்திக் குழுக்களை நிறுவி, தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அதிபர்களுக்கும் அக் குழுக்களுக்கும் வழங்குதல்.
* தீர்மானங்களையும் செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் வகையில் வினைத்திறன் மிக்க முகாமைத்துவக் குழுக்களை நிறுவுதல்.

போன்ற பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வகையில் பாடசாலை மட்ட முகாமைத்துவம் (School Based Management) முன் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடைமுறைகள் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்பட்டு வருகின்ற போதும், அதிபர்களின் செயற்பாடுகளை வலுவூட்டும் சட்ட ரீதியான ஒரு நிகழ்ச்சித் திட்டமாக பாடசாலை மேம்பட்டு நிகழ்ச்சித் திட்டம்(Programme School Improvement-PSI) இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள ஒவ்வொரு பாசாலையும் நகர, கிராமப்புற வேறுபாடுகள் இன்றி வளர்ப்பதற்கான திட்டங்கள் பல வகுக்கப்பட்டுள்ளன.

## பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.

> மத்திய அரசின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை ஒவ்வொரு பாடசாலைக்கும் நேரடியாகக் கையளித்து, அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் அதன் பயனாளிடம் ஒப்படைத்தல். இதனூடாக பாடசாலைகளில் வினைதிறன் மிக்க கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தல்.

இவற்றின் அடிப்படையில் நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் படிப்படியாக உள்வாங்கப்பட்டு 2011ம் ஆண்டுக்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் முழுமையும், அதிகாரமும், வளமும் கொண்ட பாடசாலைக் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

## எதிர்ப்பார்ப்புக்கள்.

* ஒவ்வொரு பாடசாலையும் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களைக் கொண்டிருப்பதனூடாக கற்றல், கற்பித்தல் மேம்பாட்டையும்.
* முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் பாடசாலைச் சமூகத்தின் குரலை ஓங்கச் செய்தல்.
* எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும், செயலாற்றுகைக்கும், அவர்களே வகை கூறக் கூடியவர்களாக இருத்தல்.
* கல்வி இலக்குகளை முழுமையாக அடைந்து கொள்ளக் கூடிய வகையில் ஒவ்வொரு பாடசாலையும், தமக்குத் தேவையான பௌதிக நிதி மற்றும் ஆளணி வளங்களைப் பயன்படுத்தல்.
* பாடசாலையின் அனைத்து மட்டங்களிலும் தலைமைத்துவமும், நற்பண்புகளும் மேலோங்கிக் காணப்படுதல்.
* இத்தகைய மாற்றங்களின் விளைவாக ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையதாக்கப்படுவதுடன் மாணவர்களின் செயலாற்றுகையும், கற்றல் விளைதிறனும் மேம்பாடடையும்.

இந் நோக்கங்களை அடையும் வகையில் பாடசாலை மேம்பாட்டில் பின்வரும் துறைகள் இனங்காணப்பட்டு வளர்த்தெடுப்பதற்கான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும், பாடசாலைச் சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

1. பாடசாலைக்கான மகுட வாக்கியம்(MOTTO) தூரநோக்கு(Visim) பணிக்கூற்று (Missim) என்பன தயாரிக்கப்படுவதுடன் அவை பல்வேறு இடங்களிலும் பெரிய அளவில் காட்சிப்படுத்துதல்.
2. பாடசாலை மட்டத்தில் திட்டமிடலும் சாலை மட்டத்தில் இடப்படும் திட்டங்களில் ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர்கள் ஒவ்வொருவரும் பங்கேற்கும் ஏற்பாட்டை அதிபர்கள் மேற்கொள்ளல்.
3. பாடசாலை முகாமைத்துவமும் ஒருங்கமைப்பும்
4. தலைமைத்துவப்பண்புகளை வளர்த்தெடுப்பதற்கான செயல் திட்டங்கள்.
5. பாடசாலை சமூகத் தொடர்புகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

   பரிசளிப்பு விழாக்கள்,விளையாட்டுப் போட்டிகள், பெற்றார், ஆசிரியர் சந்திப்புக்கள், கூட்டங்கள், சிரமதானங்கள், தேர்ச்சி அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்க வைத்தல். பெற்றாரின் வீட்டுக்குச் செல்லல் போன்ற பல்வேறு நடைமுறைகளைப் பாடசாலைகள் முன்னெடுக்கலாம்.
6. வளங்களை வினைத்திறனுடையதாகும் வகையில் முகாமிப்புச் செய்து பாடசாலைகளின் வினைதிறனைக் கூட்டுதல்.
7. நிதி முகாமைத்துவச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளலும், வெளிப்படைத் தன்மையைக் காட்டுதலும்.
8. மாணவர்களை முகாமிப்புச் செய்தல்.

   மாணவர்களின் தொடர்ச்சியான வருகை, சகல துறைகளிலும் பங்கேற்கச் செய்தல், தூய்மை, ஒழுக்கம், நல்ல தொடர்பாடலை ஏற்படுத்தல், உடல் நலவிருத்தி, கற்றலை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களினூடாக மாணவர்கள் ஒவ்வொரு ஆசிரியர்களினாலும் முகாமிப்புச் செய்யப்படவேண்டும்.
9. பாடசாலை ஆளணியினரை முகாமிப்புச் செய்தல்.

   பாடசாலையின் ஆசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள், ஆய்வு கூட மற்றும் நூலக உதவியாளர்களின் பணிகளை மேம்படுத்துதல், மேற்பார்வையும் வழிகாட்டலும்,அவர்களது தொழில், கற்கை வாண்மை விருத்திகள் நேரத்திற்கு வருகை தருதல், பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்க வைத்தல், கூட்டுக்கல்வி முறைமையை மேம்படுத்தல் மற்றும் அவர்களது நலலோம்பு நடவடிக்கைகள் போன்றவற்றை முகாமிப்புச் செய்தல்.
10. பாடசாலைக் கவிநிலையை மேம்படுத்தல் பாடசாலை என்பது அழகுணர்ச்சியுடன் கூடியதாகவும், வணக்க தளத்திற்கு ஒப்பானதாகவும் இருக்க வேண்டும். அதற்காக பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை அழகாகவும், கவர்ச்சியாகவும், பசுமை நிறைந்ததாகவும் வைத்திருக்க வேண்டும். அதே வேளை வகுப்பறைச் சூழல் மிகச் சிறந்த கவிநிலையுடனும், கற்றல் சூழலையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

அதே வேளை தரம் 1 இல் இருந்து 13 வரை பயன்படக்கூடிய வகையில் திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும். நூலக கற்றல் வள நிலையங்களையும் கவர்ச்சியாகவும், கற்றல் சூழலை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் ஒழுங்குபடுத்தி அவற்றை மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தும் உயிர்ப்புள்ள இடமாக்க வேண்டும் இன்றைய பாடசாலைகளில் உருவாக்கப்பட்ட " நூலகங்கள்" வெறுமனே நூல்களை மட்டும் கொண்டிருக்காது கற்றலுக்கான வளங்களைக் காட்சிப்படுத்தும் வள நிலையங்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் பல அதிபர்களும் கல்வி அதிகாரிகளும், இதில் தெளிவற்றவர்களாகவும் இருக்கின்ற நிலையில் அவர்களால் பாடசாலை நூலகங்களை, "கற்றல்" வள நிலையங்களாக உருவாக்க முடியாது போய்விடுகிறது. இன்றைய பாடசாலைகளிலுள்ள நூலகங்கள் நூல்களை மட்டும் கொண்டிருக்காது அவை கற்றலுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடியவாறு பல்வேறு கற்றல் உபகரணங்களையும், நூதனப் பொருட்களையும் காட்சிப்படுத்தும் அறிவியல் சார்ந்த கண்காட்சிக் கூடமாக வளர்க்கும் வகையில், தடைகளை உடைத்தெறிய பாடசாலைச் சமூகம் முன்னுக்கு வரவேண்டும்.

11. கற்றல் விளைவுகளை மேம்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒழுங்கு முறையில் திட்டமிட்டுச் செயற்படுத்தி வரும் பொழுது நீண்டகால நோக்கில் கற்றல் விளைவுகள் மேம்படுத்தப்படும். இதனூடாக பாடசாலை மாணவர்களின் இலக்கு 90% க்கு மேல் எட்டப்படும். என்பது அனுபவபூர்வமாகப் பெறப்பட்ட முடிவாகும்.

எனவே இத்தகைய செயற்பாடுகளைப் பாடாலை அதிபர்கள் முன்னெடுப்பதனூடாக மிகக் குறுகிய காலத்தினுள் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் உணர்திறன் மிக்க ஒரு நிறுவனமாகப் பாடசாலைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

## நன்றி நவிலல்.

* பல இடர்பாடுகள் வசதிக்குறைவுகள் இருந்தும் எங்கள் பாடசாலை மாதாவின் 50வது ஆண்டு நிறைவாக, விசேட மலராக இதனை வெளியிட எங்களுக்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து இம் மலரினை வெளியிடுகின்றோம்.

* எமது அதிபரின் தலைமையில் இம் மலரினை வெளியிட பல மாதங்கள் ஆயத்தங்கள் செய்யப்பட்டது. ஆரம்ப அதிபர் திரு.இ.வல்லிபுரம் மற்றும் திரு.ம.குட்டித்தம்பி அதிபர், மற்றும் திரு.கு.திரவியநாதன் ஆசிரியர் ஆகியோரின் நீண்ட நாள் கனவாகவும் காணப்பட்டது. அதற்கு செயல் வடிவங் கொடுக்க வேண்டும் என்றும். எமக்கு இப்படி ஒரு வரலாற்று ஆவணம் ஒன்று தேவை என்பதையும் உணர்ந்து வெளியிடுகின்றோம். இவ் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அழித்த அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பழையமாணவர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

* ஆசியுரைகள் தந்த வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஐயாவிற்கும், அருட் திரு.நே.து.ஜெயநேசன் அடிகளார்க்கும், பிரதம விருந்தினராக வருகை தந்த பிரதேச செயலர் திரு.சி.சத்தியசீலன் அவர்கட்கும், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த அனைவருக்கும், ஆக்கங்கள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் தந்த பல்கலைக்கழக அறிஞர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

* பழையமாணவர்கள், முன்னைநாள் ஆசிரியர்கள், தற்கால ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களையும், சிறப்பு கட்டுரைகளையும், கவிதைகளையும் மிகவும் விருப்புடன் எழுதி இம் மலரினை மெருகூட்டியிருக்கின்றார்கள். இம் மலர் இனிமேல் வரும் இளம் சமுதாயத்தற்கு ஓர் ஊன்று கோலாக அமையும் என்பதில் எந்த விதமான ஐயமுமில்லை. என்பதையும் மனமார தெரிவித்துக்கொள்கின்றோம்.

* பாடசாலை வளர்ச்சிக்கு உதவிய பெரியோர்கள், ஆசிரியர்களின் படங்கள் யாவும் கிடைக்கப்பெறவில்லை.சில குறிப்பிட்ட படங்களே கிடைக்கப்பெற்றன. மேலும் பல வரலாற்றுத் தகவல்களும் கிடைத்திருந்தால் எமது முயற்சி மிகவும் சிறப்பாக இருந்திருக்கும்.


* இம் மலரினை ஒப்பு நோக்குவதில் உதவி புரிந்த செல்வி மா.ஜெயகவிதா மற்றும் திருமதி.க.ரகுபதி அவர்கட்கும், நூற்குழுவினர் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

* இம் மலரினை உரிய நேரத்தில் வெளியிடக் கைகொடுத்துதவிய செல்வா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தை சேர்ந்த திரு.க.செல்வராசா, செல்வன் த.பிரதீபன் அவர்கட்கும் நன்றி நவில்கின்றோம்.

* இம் மலர் இன்று மலர உதவியவர்கள் இன்னும் பலர், பெயர் குறிப்பிட்டு எல்லோருக்கும் நன்றி கூறாவிட்டாலும் சகலருக்கும் மனதார நன்றி கூறி ஒரு சிறிய விண்ணப்பமும் விடுக்கின்றோம். இறுதி நேரத்திலும் பல விடயங்களை சேர்த்த காரணத்தினாலும் கால அவகாசம் போதுமானதாக இல்லாததாலும் பிழைகள் எதாவது இருந்தால் அதற்கு நாமே பொறுப்பு. அதை பொருட்படுத்தாது இம்மலரை ஏற்கும் பெரும் மனம் உங்கள் யாவருக்கும் உண்டு என்ற எம் நம்பிக்கையுடன் நிறைவு செய்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
(நூற்குழு)

# நன்றி நவிலல்.


AUM
Chithamparappillai
Book Depot
Nelliady, Karaveddy.
பாடசாலைப் புத்தகங்கள், மற்றும்
பாடசாலை உபகரணங்கள்
அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே
ஒரு ஸ்தாபனம்
சிதம்பரப்பிள்ளை
புத்தகசாலை.
நெல்லியடி, கரவெட்டி.
T.P.021-2263223

AUM

# JANA

## CIVIL WORKS

Building Contractors, Materials Suppliers and Hiring for Lorry, Canter and Tractor.

## ஜனா

கட்டடம், வீதி, வடிகால்
ஒப்பந்ததாரரும் நிர்மாணிப்பாளரும்.

## ஜனா

ரேட் சென்றர் & வர்த்தக நிலையம்

கட்டிடப் பொருட்கள், மின்சார
உபகரணங்கள், உழவு இயந்திர
உதிரிகள், பலகை, தீராந்திவகைகள்,
மரத்தளபாடங்கள், நியாய விலையில்
பெற்றுக் கொள்ள "ஜனா"

யாழ் பருத்தித்துறை பிரதான வீதி
அரசடி இமையாணன்,
ரீ.பி.021-3007592
0776000970
Email-jeyaratnamr@yahoo.com


AUM
Nellai Silk
LATEST DESIGNS OF TEXTILES
Main Street, Nelliady.
Tel: 021-2263207
நங்கையர்களுக்கான நவ நாகரீக
ஆடைகளும் மற்றும் ஆண்களுக்கான
சேட்டிங், சூட்டிங்கிற்கு நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
நெல்லை சில்க்..
S.Agilathas J.P
Proprietor.


உங்கள் வீட்டிற்கு தேவையான மின்சார உபகரணங்கள் உதிரிப்பாகங்கள்,
சிமென்ற், குழாய்கள், இரும்புப்பொருட்கள், உணவுப் பொருட்கள்,
ஸ்வீற்ஸ், ஐஸ்கிறீம் வகைகள், பிஸ்கற் வகைகள், பாஸ்மா,குளிர்பானங்கள்
மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்
கொள்வதற்கான ஒரே இடம்
கரன் எலெக்ரிக்கல்ஸ்
ஆகாஷ் ஹாட்வெயர்ஸ்
கரன் ஃபூட் சிற்றி
"குறைந்த செலவில் நிறைந்த பயன்பெறலாம்"
வல்வெட்டித்துறை வீதி, உடுப்பிட்டி.

# விவசாய பெரும்மக்களுக்கு!

சகலவிதமான

கிரிமிநாசினிகள்

உரவகைகள்

உயர்தர விதைகள்

மற்றும் அனைத்து உற்பத்திப் பொருட்களுக்கும்

நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

# S.R.விவசாய மாளிகை
# S.R.Agriculture Center

மண்டான் வீதி, குஞ்சர்கடை

---

போட்டோ பிரதி, லெமனேற்றிங், பக்ஸ், ரீலோட்
மற்றும் மின்சார உபகரணங்கள், இரும்பு வகைகள்,
பெயின்ற் வகைகள், சீமெந், பைப் வகைகள் மற்றும்
அனைத்து உபகரணங்களுக்கும் நாடவேண்டிய ஒரே
ஒரு இடம்

# அருண் ஹாட்வெயர்

யாழ் பருத்தித்துறை வீதி அறிவாலயம்.

தொ.இ.021.2264512


KAMSA
STEEL DESIGNERS
உங்கள் வீட்டிற்கு தேவையான கிறில்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு
உபகரணம் வடிவமைப்பு, பாடசாலை உபகரணம் வடிவமைப்பு, கதவுகள் மற்றும் அனைத்து
வகையான ஒட்டு வேலைகளும் ஹம்சா வடிவமைப்பாளர்களால் செய்து தரப்படும்
ஒட்டு வேலைகள் செய்வதற்கு எங்களை நாடுங்கள்.
Prop: S.Thayananthan
Alvai Road, Uduppiddy.


AUM
செல்வா பிறிண்டேர்ஸ்
எமது நிறுவனத்தில் சகலவிதமான பிறிண்ட்
வேலைகளும் செய்து கொள்ள இன்றே நாடுங்கள்
எமது சேவைகள்
போட்டோபிரதி, லெமநேற்றிங், றீலோட், நெற்கபே, மற்றும்
புத்தகங்கள், கல்வெட்டுக்கள், நோட்டீஸ் போன்ற
அனைத்து வகையான பிறிண்ட் வேலைகளுக்கும்
எமது ஸ்தாபனத்தை நாடவும்
செல்வா நெற் கபே உங்களை
அன்புடன் வரவேற்கின்றது.
தொ.பே.இ.021-2263332
0779234972
வி.வி.ரி.றோட், நாவலடி, உடுப்பிட்டி.

சகல விதமான கட்டடப் பொருட்களும்,வீட்டு மின்சார

உபகரணங்கள், பைப் வகைகள், இரும்பு கம்பிகள் ,சீமெந்

கொள்வனவிற்கு நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்.

**என்.வி.பி. ஹாட்வெயர்**

பருத்தித்துறை வீதி, இமையாணன், உடுப்பிட்டி, T.P.2263517

---

பால்மா வகைகள், குளிர்பான வகைகள்,

பிஸ்கட் வகைகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் அனைத்துக்கும்

இன்றே நாடுங்கள்

**ரஜனி பீடா ஸ்ரோர்ஸ்**

வதிரி வீதி, உடுப்பிட்டி.

---

அழகு சாதனப் பொருட்களுக்கும் மற்றும் சகல விதமான

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மற்றும் பல்பொருள்

விற்பனை நாடவேண்டிய ஸ்தாபனம்

**அம்பாள் பல்பொருள் வாணிபம்**

பிரதான வீதி, குஞ்சர்கடைச்சந்தி, கரணவாய்.

---

DIGITAL PHOTOGRAPHY,
VIDEO EDITTING,
DIGITAL ALBUM, MAKING.

**KEESAN DIGITAL PHOTO HOUSE**

POINTPEDRO ROAD, KUNCHARKADAI.

---

சகலவகையான உணவுவகைகளுக்கும் எம்மை இன்றே

நாடுங்கள் சுவையான சுவைச்சோலை

**பரந்தாமன் சுவைச்சோலை**

பிரதான வீதி, குஞ்சர்கடைச் சந்தி,






"வானவில் சங்கமிக்கும் வர்ண தாஜ்மஹால்"
செல்லமுத்தா
புடவை மாளிகை
திருமண பட்டு புடவைகள்
சேட்டிங், சூட்டிங்ஸ்,
சிறுவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள்.
SELLAMUTHUS TEXTILES
Wedding Silk Sarees, Shirtings
Suitings & Reavymade Dresses
Main Street, Nelliady, Karaveddy
Phone : 021-2263238